பொழிவு - 18
குவிப்பு - 09
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
செப்ரம்பர் - 2015
Registered as a News Paper
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 68 / News / 2015"

# புதிய அரசு தமிழ் மக்களை ஏமாற்றக்கூடாது!
# கூட்டமைப்பு வாய்ப்பைத் தவறவிடக்கூடாது!

## திருமலை மற்றும் மட்டுநகர் ஆயர்கள் கருத்து

புதிய அரசாங்கம் வாக்குறுதி அளித்ததைப்போன்று தமிழ் மக்களின் நீண்டகால இனப்பிரச்சினைக்கான தீர்வை துரிதமாக முன்வைக்க வேண்டும். வெறுமனே காலத்தைக் கடத்தி தமிழ் மக்களை ஏமாற்றக்கூடாது. அதேபோன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தி தமிழ் மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்குத் தீர்வைக் காணவேண்டும். இத்தருணத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தவறவிடுமானால் எதிர்காலத்தில் மற்றுமொரு ஆணையை மக்களிடம் கோரமுடியாதுபோகும்.

இவ்வாறு தமிழ் ஆயர்களான திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆயர்கள் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளனர். நடந்துமுடிந்த பொதுத்தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வடகிழக்கில் வெற்றி வாகைசூடி நாட்டில் மூன்றாவது பெரும்பான்மை அணியாக விளங்கிவருவது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## நலம்பெறச் செபிப்போம்!

### சிங்கப்பூரில் சிகிச்சைபெறும் மன்னார் ஆயர்



கொழும்பில் வைத்திய சிகிச்சை பெற்றுவந்த மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக கடந்த ஒகஸ்ட் 24ஆம் திகதி கொழும்பிலிருந்து சிங்கப்பூருக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளார்.

சிங்கப்பூரில் வைத்திய சிகிச்சைபெற்றுவரும் ஆயர் பூரண சுகம்பெற்று விரைவில் நாடு திரும்ப செபிக்கும்படி இறைமக்கள் அனைவரும் கேட்கப்படுகின்றார்கள்.

### யாழ் வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் சேவியர் குரூஸ் அடிகளார்



மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் குருமுதல்வர் அருட்தந்தை ஏ. சேவியர் குரூஸ் அடிகளார் மீண்டும் சுகவீனமுற்ற நிலையில் கடந்த ஒகஸ்ட் 23ஆம் திகதி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே பாரிசவாதத்தின் தாக்கத்தினால் வலது கை மற்றும் வலது கால் ஆகியவை பாதிப்புற்ற நிலையில் மருத்துவ சிகிச்சையின்பின் நன்கு தேறிய நிலையில் நடமாடித்திருந்தார். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## கடந்த துன்ப நாட்களில் மடு அன்னையின் திருத்தலமானது
# சமாதானத்தினதும், நல்லிணக்கத்தினதும் பாலைவன நீர்ச்சுனையாகத் திகழ்ந்துள்ளது

### மடு ஆவணித் திருவிழாவில் திருத்தந்தையின் பிரதிநிதி

இலங்கையின் அனைத்துக் குடும்பங்களும் கடந்த காலத்தில் பல இழப்புக்களையும், இன்னல்களையும் வடக்கிலும் தெற்கிலும் சந்தித்துள்ளனர். கொடுமையான வன்முறையினால் அனேக மக்கள் கொலைசெய்யப்பட்டு, இரத்தம் சிந்தப்பட்ட அந்த ஆண்டுகளில் இந்த மடு அன்னையின் திருத்தலமானது சமாதானத்தினதும், நல்லிணக்கத்தினதும் பாலைவன நீர்ச்சுனையாக அமைந்திருந்தது என மடுத்திருப்பதியின் ஆவணித் திருவிழாவின்போது மறையுரையாற்றிய திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் பியரே வன் றொட் ஆண்டகை தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில், இங்கே மீண்டும் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும், அன்னை மரியாளின் பிரசன்னத்தில் ஒன்றுகூடியுள்ளார்கள். அன்னை மரியாள் நம் அனைவருக்கும் சிறப்பான ஒப்புரவின் கருவியாகத் திகழ்கின்றாள்.

(திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதியினுடைய மறையுரையின் முழு வடிவத்தை 4ஆம் பக்கத்தில் காணலாம்.)

காத்தான்குளம் கிராம மக்கள்
பெருமையுடன் வழங்கும்
மரிகிருதாள்
நாட்டுக்கூத்து நாடகம்
இரண்டு இரவுக் கதையாக அமையப்பெற்ற நாடகம்



இடம் : காத்தான்குளம் கிராமம்
காலம் : செப்ரம்பர் 10, 11ஆம் திகதிகள் (வியாழன், வெள்ளி) ஆகிய இரண்டு நாட்கள்
நேரம் : மாலை 7.00 மணி

அனைவரையும் வருக!.. வருக!.. என அன்புடன் வரவேற்று நிற்கின்றோம்.

பங்குத்தந்தையும்
கிராம மக்களும்
காத்தான்குளம். நானாட்டான்.

மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்!

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப் பெற ஏன் நீங்கள் வழிசெய்யக்கூடாது?



ஒரு வருடத்திற்கான
உள்நாட்டுச் சந்தா ரூபா 800.00
வெளிநாட்டுச் சந்தா ரூபா 3,500.00

எம்மோடு தொடர்புகொள்ளுங்கள் -
077 - 7420811, 023 - 2250789, 023 - 3233276

## சிறப்பாக இடம்பெற்ற மடு அன்னையின் ஆவணித் திருவிழா







மடுத்திருப்பதியின் ஆவணித் திருவிழாத் திருப்பலி கடந்த ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதி காலை 6.15 மணிக்கு இடம்பெற்றது. தமிழ், சிங்களம், இலத்தீன், ஆங்கிலம் ஆகிய பல மொழிகளை உள்ளடக்கியதான திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச்சுரூபப் பவனியும், திருச்சுரூப ஆசீரும் இடம்பெற்றது. இத்திருவிழாத் திருப்பலியைத் திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் பியரே நியுயன் வன் றொட் ஆண்டகை அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். இவரோடு திருகோணமலை மறைமாவட்டத்தின் இளைப்பாறிய ஆயர் மேதகு கிங்ஸிலி [illegible]ம்பிள்ளை ஆண்டகை, கண்டி மறைமாவட்ட ஆய[illegible] வியான்னி பெனாண்டோ ஆண்டகை, காலி [illegible] ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க [illegible]றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருகைதந்த குருக்கள், துறவியர், இறைமக்கள் ஆகியோர் இணைந்து ஒப்புக்கொடுத்தனர்.

திருவிழாவுக்கு முதல் நாளாகிய 14ஆம் திகதி மாலை 6.15 மணிக்கு வேஸ்பர் நற்கருணை ஆராதனையும், நற்கருணைப் பவனியும், நற்கருணை ஆசீரும் இடம்பெற்றது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## மனப்பொழிவு
## பதிப்பாசிரியர் பகர்வது

## கனவுகள் மெய்ப்பட வேண்டும்

இலங்கை அரசியல் வானில் ஆரோக்கியமான மாற்றங்கள் நடந்தேறியுள்ளன. ஜனவரி 8ஆம் திகதி இலங்கை மக்கள் வழங்கிய நல்லாட்சிக்கான ஆணையை மீண்டும் ஓகஸ்ட் 17இல் உறுதிப்படுத்தியுள்ளனர். இலங்கை அரசியலில் நம்பிக்கையொளி பிரகாசிக்கத்தொடங்கியுள்ளது. இனவாதிகள், ஊழல் பேர்வழிகளை மக்கள் நிராகரித்துள்ளனர். தமிழ் மக்களின் கனவுகள் மெய்ப்படுவதற்கான வாய்ப்புகள் தற்போது ஏற்பட்டுள்ளன.

### கூட்டமைப்புக்கு மீண்டும் மக்கள் ஆணை

வடக்கு கிழக்கு மக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புமீது வைத்திருக்கின்ற நம்பிக்கையையும், உறுதியையும் மீண்டும் உள்நாட்டிற்கும் வெளிநாட்டிற்கும் நிருபித்துள்ளனர். இலங்கை அரசியலில் மூன்றாவது பெரும் சக்தியாக தமிழ்க் கூட்டமைப்பு உருவாகியுள்ளது. தமிழ் மக்களின் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் நாம் எப்பொழுதும் காப்பாற்றுவோம் எனவும், எதிர்காலத்தில் அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ள வேகமாக முயற்சிகளை முன்னெடுப்போம் எனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கூறியிருக்கின்றார்.

மக்களின் அரசியல் கனவுகள் நனவாக கூட்டமைப்பு இலங்கை அரசியலில் தொடர்ந்து போராட வேண்டும். தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் என்பது ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதோடு முற்றுப்பெற்ற ஒன்று அல்ல. ஆயுதப்போராட்டம் முற்றுப்பெற்றாலும் அரசியல் ரீதியான உரிமைப்போராட்டம் தொடரவேண்டும் என்பதற்காகவே தமிழ் மக்கள் வாக்களித்துள்ளனர். கூட்டமைப்பினர் இதை நன்கு புரிந்து, தமது சுயநல அரசியலுக்கு அப்பால் நின்று, தமிழ் மக்களின் ஒட்டுமொத்த நலன்களுக்காகத் தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணிக்க வேண்டும்.

### புதிய பிரதமர் செயல் வீரராகத் திகழ்வாரா?

புதிய பிரதமராக பதவியேற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த காலங்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்பதை பல தடவைகளில் வலியுறுத்தி வந்துள்ளார். அவர் வாய்ச்சொல் வீரரா அல்லது செயல் வீரரா என்பதை நிரூபிப்பதற்கு இப்போது சிறந்ததோர் சந்தர்ப்பம் வாய்த்துள்ளது.

### இலங்கையின் 'போர்க் கதாநாயகன்' எங்கே?

தமிழ்ப் புலிகளுக்கு எதிரான உள்நாட்டு யுத்தத்தை வெற்றிகொண்டவர் என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிங்களப் பெரும்பான்மைச் சமூகத்தவரால் 'போர்க் கதாநாயகனாகப் புகழப்பட்டார். இவ்வாண்டு ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த இவர், பிரதமர் கனவுடன் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டார். அந்தப் பிரதமர் கனவும் இப்போது கலைந்துள்ளது. போர் வெற்றியைக் காட்டியே காலம் முழுவதும் ஆட்சியில் அமர்ந்திருக்கலாம் என்ற அவரது எண்ணத்தை சிங்கள மக்களும் நிராகரித்துள்ளனர் என்பதே இன்றைய யதார்த்தம். ஆயிரமாயிரம் தமிழர்களின் உடமை, உயிர் இழப்புக்குக் காரணமானவர் இன்று அரசியல் அரங்கில் இருந்து அந்நியப்படுத்தப்பட்டுள்ளார். "எப்படி இருந்தவர் இப்படி ஆயிட்டாரே" என்ற கதைதான்!

### தேசியப் பட்டியல் உறுப்பினர் விவகாரம்

தேசியப் பட்டியில் உறுப்பினர் நியமனமானது தேசிய அரசியலிலும் தமிழர் அரசியலிலும் சூடுபிடித்துள்ள விவகாரமாக மாறியுள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயும் பல முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது. உண்மையில் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகளை தேசியப் பட்டியலில் எப்படி மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர்களாக்குவது என்ற கேள்வி மக்களிடமிருந்து வருவது நியாயமானதே. தேர்தல் மூலம் பாராளுமன்றத்திற்கு செல்லமுடியாத புத்திஜீவிகள், துறைசார் வல்லுனர்கள் போன்றவர்களை பாராளுமன்றத்திற்கு உள்ளீர்க்கும் ஒரு ஏற்பாடாகவே அரசியல் யாப்பில் இந்த முறைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### சிவில் சமூக அமைப்புக்களின் கடமை

கடந்த காலங்களில் சிவில் சமூக அமைப்புக்கள் பொது மக்களின் 'குரலாக' காத்திரமான கருத்துக்களை அரசியல் அரங்கில் முன்வைத்து வந்துள்ளன. பொதுமக்களின் நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் அரசியல்வாதிகள் நிறைவேற்றுவதற்கான முகவர்களாக சிவில் சமூகம் செயற்படவேண்டும். தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கு அளித்த உறுதிமொழிகள் தொடர்பாகவும், அவற்றை நிறைவேற்றிக்கொடுப்பதற்கான கடப்பாடு குறித்தும் அரசியல்வாதிகள் அதிக 'பிரக்ஞை' யுடன் செயற்படுவதற்கும் அவ்வாறு நடந்துகொள்ளாவிடின் அவர்களைத் தட்டிக்கேட்பதற்கும் உரிய பொறுப்பு சிவில் சமூகத்திற்கு உள்ளது.

*மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,*
*அன்புடன் அருட்திரு. தமிழ் நேசன்,*
*மன்னா பதிப்பாசிரியர்*

## துயர் பகிர்கின்றோம்
## செபிக்கின்றோம்

**அருட்சகோதரி ஜீவனாவின் தாயார்**

- கார்மேல் சபைக் கன்னியர் அருட்சகோதரி ஜீவனா (அ.கா.) அவர்களின் அன்புத் தாயார் அச்சங்குளத்தைச் சேர்ந்த திருமதி எஸ். திரேசம்மா அவர்கள் (வயது 72) கடந்த ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.

**அருட்சகோதரி அன்ரனெற்றின் தந்தையார்**

- அருட்சகோதரி அன்ரனெற் (அ.கா) அவர்களின் அன்புத் தந்தையார் பள்ளிமுனையைச் சேர்ந்த திரு. அந்தோனி சூசைதாசன் றோச் (புஸ்பராசா) (வயது 77) அவர்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.

**அருட்சகோதரி றஜனியின் தந்தையார்**

- திருச்சிலுவைக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி றஜனி அவர்களின் அன்புத் தந்தையார் ஆத்திக்குழியைச் சேர்ந்த திரு. அந்தோனிப்பிள்ளை அவர்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.

தமது அன்புக்குரியவர்களை இழந்து நிற்கும் அருட்சகோதரிகளுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் மன்னா தனது ஆழ்ந்த அனுதாபங்களையும், செபங்களையும் தெரிவித்துக்கொள்கிறது. இவர்களது ஆன்மா இறைவனில் அமைதிகொள்வதாக!

## மன்னாவை
## உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். - மன்னா நிர்வாகம்.

## மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2015

### புரட்டாதி

05 - அருளாளர் அன்னை திரேசா - புதிய கோவிற்குளம்
08 - தூய வேளாங்கண்ணி திருவிழா - எல்லப்பர் மருதங்குளம்
- தூய கன்னிமரியாளின் பிறப்பு விழா - நானாட்டான், மாவிலங்கேணி, கரிசல், இலுப்பைக்குளம், குஞ்சுக்குளம், விடத்தல்தீவு, எழுத்தூர். சாளம்பன், நடுக்குடா, நொச்சிக்குளம். மாறாஇலுப்பை, காட்டாஸ்பத்திரி, தலைமன்னார் பியர், மூங்கில் முறிச்சான், பாலியாறு, வேளாங்கண்ணி நகர், பாரதிபுரம், கங்கங்குளம், சாவற்கட்டு, கற்பகபுரம்.
- தூய அடைக்கல அன்னை திருவிழா - பறநட்டகல்
13 - புனித வேளாங்கண்ணி திருவிழா - கட்டுக்கரைக்குளம், ஓமந்தை
14 - திருச்சிலுவை அருட்சகோதரிகளின் விழா
- குருசுக்கோவில், விடத்தல்தீவு
15 - தூய வியாகுல அன்னை திருவிழா
- அடம்பன், சின்னவலயன் கட்டு
22 - தூய சிந்தாத்திரை மாதா திருவிழா - பெரியமுறிப்பு
- அடைக்கலமாதா - முருகனூர்
24 - தூய சிந்தாத்திரை மாதா திருவிழா - பாப்பாமோட்டை
27 - தேசிய மறைக்கல்வி தினம்
28 - தூய வேளாங்கண்ணி மாதா திருவிழா - தாமரைக்குளம்
- அடைக்கலமாதா திருவிழா - கருவாஞ்சிகுளம்
29 - தூய மிக்கேல் திருவிழா - தரவன்கோட்டை
- புனித சவேரியார் திருவிழா - கோட்டக்குளம்

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## அரசியல் அரங்கம்

### வன்னியிலிருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் விபரம்

நடைபெற்று முடிந்த எட்டாவது பாராளுமன்றத்திற்கான உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் பொதுத்தேர்தலில் வன்னி மாவட்டத்தில் இம்முறை தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நான்கு பேரும், ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் தலா ஒருவருமாக ஆறு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் ஒருவரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் ஒருவருமாக புதிதாக இருவர் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளனர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் இம்முறை தோல்வியடைந்துள்ளனர்.

**மன்னார் மாவட்டத்தில் மூவர் தெரிவு**

புதிய பாராளுமன்றத்திற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இ. சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்ட செல்வம் அடைக்கலநாதன் 17,366 விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்டபோதிலும் இந்தத் தேர்தலில் 26,397 விருப்பு வாக்குகளைப்பெற்று மீண்டும் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் முதற்தடவையாக போட்டியிட்ட தொழிலதிபர் இ. சார்ள்ஸ் நிர்மலநாதன் 34,620 விருப்பு வாக்குகளைப் பெற்று பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுள்ளதுடன், முதற்தடைவயாக பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். மன்னார் மாவட்டத்தில் இரு தமிழ் உறுப்பினர்களும், ஒரு முஸ்லிம் உறுப்பினருமாக மூவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

**வவுனியா மாவட்டம்**

வவுனியாவில் 11,674 விருப்பு வாக்குகளைப்பெற்று கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற சிவசக்தி ஆனந்தன் இம்முறை 25,027 விருப்பு வாக்குகளைப்பெற்று மீண்டும் வெற்றிபெற்றுள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்ட பிரபல தொழிலதிபர் கே. கே. மஸ்தான் 7,298 விருப்பு வாக்குகளைப்பெற்று பாராளுமன்றத்திற்கு முதற்தடவையாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். வவுனியாவில் தமிழர் ஒருவரும், முஸ்லிம் ஒருவருமாக இரு பிரதிநிதிகள் புதிய பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

**முல்லைத்தீவு மாவட்டம்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சிவமோகன் 18,412 விருப்பு வாக்குகளைப் பெற்று முதற்தடவையாக பாராளுமன்றத்திற்குத் தகுதிபெற்றுள்ளார்.

இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் நாடுபூராகவும் போட்டியிட்ட முஸ்லிம் வேட்பாளர்களுள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் என பலரும் தோல்வியைச் சந்தித்துள்ளனர். எனினும் முதற்தடவையாக வவுனியா மாவட்டத்தில் இருந்து போட்டியிட்ட தொழிலதிபர் கே.கே.மஸ்தான் மாத்திரமே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் வெற்றிபெற்றுள்ளார்.

இதேவேளை, கடந்த 2010ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு சார்பில் செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோநோக ராதலிங்கம், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் மர்ஹீம் நூர்தீன் மசூரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் ஹுனைஸ் பாரூக் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

எனினும் மர்ஹூம் நுர்தீன் மசூரின் மரணத்திற்குப் பின்னர் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் அடுத்து இடம்பிடித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முத்தலிப் பாவா பாரூக் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். எனினும் அவர் இத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மரச்சின்னத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் ஆகியோரும் இத்தேர்தலில் தோல்வியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

- மன்னா நிர்வாகம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைத்துள்ள மக்கள் ஆணையைப் பயன்படுத்தி
# புதிய அரசு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணவேண்டும்

## கூட்டமைப்பு உள்முரண்பாடுகளைக் களைந்து மக்கள் நலன்களில் உடனடிக் கவனம் செலுத்த வேண்டும்
## – குருமுதல்வர் கருத்து –



மக்களின் ஆணை கிடைத்துள்ள நிலையில், இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி புதிய அரசாங்கம் மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் விரைந்த தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணியாளர் ஏ. விக்ரர் சோசை அடிகளார் தெரிவித்தார். நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தல் மற்றும் புதிய அரசாங்கம் தொடர்பாக மன்னாவுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார். மேலும் அவர் கூறுகையில்,

கிடைத்துள்ள மக்கள் ஆணையைப் பயன்படுத்தி புதிய அரசாங்கம் மக்களின் அடிப்படையான வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் நீண்டகால இனப்பிரச்சினையையும் தீர்க்க முயலவேண்டும். காணாமல்போன உறவுகளின் நிலை தெரியாது தவிக்கும் மக்களுக்கு அவர்களின் உறவுகள் தொடர்பான உண்மைநிலையை விரைவில் வெளிப்படுத்தவேண்டும். சிறையில் வாடும் பல நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு அவர்களின் குடும்பங்களுக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்விடங்களை உடனடியாக உரியவர்களுக்கு வழங்கி அவர்களின் நீண்டகால ஏக்கங்கள் தீர்க்கப்படவேண்டும்.

இன்னும் விதவைகள், வாழ்வாதாரம் இழந்தோர், அங்கவீனமாக்கப்பட்டோர், முன்னாள் போராளிகள் போன்றோருக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட்டு அவர்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும். மற்றும் சமூகச்சீரழிவுகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட புதிய அரசு விரைந்து செயற்பட வேண்டும்.

அனைத்திற்கும் மேலாக தமிழ் மக்களின் நீண்டகால, புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வை எட்ட முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். எதிர்வரும் ஐந்து வருட காலப்பகுதிக்குள் தமிழ் மக்களின் இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்பதே அனைவரது ஏகோபித்த எதிர்பார்ப்பு என்றார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# அருட்பணி. பிரான்சிஸ் மரி டி கோல்
# உயர் கல்விக்காக கனடா பயணம்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் பிரான்சிஸ் மரி டி கோல் அடிகளார் உயர் கல்வியை மேற்கொள்வதற்காக கனடா பயணமாகியுள்ளார். இவர் கனடா நாட்டின் ஒற்ரோவா நகரில் உள்ள புனித பவுல் பல்கலைக்கழகத்தில் திருச்சபைச் சட்டத்தில் முதுகலைமாணிப் பட்டப் படிப்பை மேற்கொள்ளவுள்ளார்.

அடிகளாரின் உயர்கல்வி சிறப்பாக அமைய மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா தனது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.

# மன்னாரில் திருத்தந்தையின் திருமடலை மையப்படுத்திய கருத்தமர்வு

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களினால் அண்மையில் வெளியிடப்பட்ட "இறைவா உமக்குப் புகழ்" (Laudato Si) என்ற சுற்றுச்சூழல் தொடர்பான சுற்றுமடல் பற்றிய கருத்தரங்கு கடந்த ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி மன்னார் வாழ்வுதய கேட்போர் கூடத்தில் மாலை 3.00 மணி தொடக்கம் 5.30 மணி வரை இடம்பெற்றது.

இக்கருத்தமர்வின் வளவாளராக இரட்சகர் சபையைச் சேர்ந்த அருட்பணியாளர் விமல் திரிமன்ன அடிகளார் கலந்துகொண்டார். ஆங்கிலத்தில் நடைபெற்ற இக்கருத்தமர்வில் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த குருக்கள், இருபால் துறவியர் பலர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். குடும்பப்பணி மற்றும் பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குனரும், மன்னார் மறைக்கோட்ட முதல்வருமான அருட்பணியாளர் எஸ். கே. தேவராஜா அடிகளார் இக்கருத்தமர்வை ஏற்பாடு செய்திருந்தார்.

இயற்கையைப் பாதுகாத்து சுற்றுச்சூழலை மாசடையாது வைத்திருப்பது தொடர்பான திருத்தந்தையின் இச்சுற்றுமடல் உலகளாவிய ரீதியில் பலரது கவனத்தை ஈர்த்ததுடன் பாராட்டையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெரிய பண்டிவிரிச்சானில் சந்தொம்மையார் வாசாப்பு











கடந்த ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி அன்று பெரிய பண்டிவிரிச்சான் கிராமத்தில் சந்தொம்மையார் வாசாப்பு அரங்கேற்றப்பட்டது. இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் ஏ. விக்ரர் சோசை அடிகளார் முதன்மை விருந்தினராகவும், கலையருவி இயக்குனர் நேசன் அடிகளார் மற்றும் அன்பிய திருவழிபாடு இயக்குனர் ஆரோக்கியம் அடிகளார் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வின்போது விருந்தினர்களாகக் கலந்துகொண்ட குருக்களும் மற்றும் பண்டிவிரிச்சான் பங்கில் முன்னர் பணியாற்றிய பங்குத்தந்தையர்களான அருட்திரு. பி. யேசுராஜா (மடுப் பரிபாலகர்), அருட்திரு. கிறிஸ்துநாயகம், அருட்திரு. செல்வநாதன், அருட்திரு. ஏ. இராயப்பு ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர். பண்டிவிரிச்சான் பங்குத்தந்தை சவுல்நாதன் அடிகளார் தலைமையில் இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

# செபமாலைத்தாசர் சபையின் புதிய மாகாண முதல்வராக பிரான்சிஸ் ஜெயம் அடிகளார்



செபமாலைத்தாசர் சபையின் புதிய இலங்கை மாகாண முதல்வராக அருட்பணியாளர் பிரான்சிஸ் ஜெயம் அடிகளார் நியமனம் பெற்றுள்ளார். கடந்த யூலை மாதம் 07ஆம் திகதி அன்று, இந்தியா பெங்களூரில் அமைந்துள்ள செபமாலைத்தாசர் சபையின் தலைமையகத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இந்தத் தெரிவு இடம்பெற்றது.

இவரது ஆலோசகர்களாக அருட்பணி. கொட்வின் நைல்ஸ், அருட்பணி. ஜோசப் செல்வன் பிகிராடோ, அருட்பணி. பாலேந்திரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

செபமாலைத்தாசர் சபையின் புதிய இலங்கை மாகாண முதல்வருக்கும், நிர்வாகத்திற்கும் மன்னாவின் மனம்நிறைந்த வாழ்த்துக்களும், செபங்களும் உரித்தாகுக!

# மடுவில் 26 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக
# நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

மடுத்திருத்தலப் பகுதியில் அமைந்துள்ள 26 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மடுத் திருத்தலத்தில் பண்டிகைக்காலத்தை முன்னிட்டு பக்தர்களின் நலன்கருதி அங்கு அமைக்கப்பட்டிருந்த உணவகங்களில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிவந்த உணவகங்கள், இறைச்சி விற்பனை நிலையங்கள் என 26 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக மடு சுற்றுலா நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர்களிடம் தண்டம் அறவிடப்பட்டுள்ளதோடு, எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மடுத்திருத்தலத்தின் ஆவணி மாதத் திருவிழாவை முன்னிட்டு கடந்த ஓகஸ்ட் 6ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை மடுத் திருத்தலப் பகுதியில் பல்வேறு வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் மடுத்திருத்தலப் பகுதியில் உள்ள உணவகங்கள், விற்பனை நிலையங்கள், இறைச்சி விற்பனை நிலையங்கள் போன்றவற்றிற்குச் சென்று திடீர் சோதனை நடவடிக்கைகளை மடு சுகாதார வைத்தி அதிகாரி பி. ஒஸ்மன் டெனி தலைமையிலான மடு பொது சுகாதார பரிசோதகர் குழுவினர் மேற்கொண்டனர்.

இதன்போது பழுதடைந்த உணவு விற்பனை செய்தல், மனிதப் பாவனைக்கு உதவாத உணவுப்பொருட்களை வைத்திருந்தமை, காலாவதியான பொருட்களை வைத்திருந்தமை, சுகாதார சீர்கேட்டுடன் இறைச்சி விற்பனை செய்தமை என 26 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் சனிக்கிழமை குறித்த 26 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக மடு சுற்றுலா நீதிமன்றில் வழக்கு விசாரணை இடம்பெற்றது.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிட்டதோடு குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

# மடுத்திருப்பதியில் அரச விழா ஒருங்கிணைப்பு அலுவலகம்



மடுத்திருத்தலத்தில் அண்மையில் அமைக்கப்பட்ட அரச விழா ஒருங்கிணைப்பு அலுவலகத்தை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எம்.வை.எஸ்.தேசப்பிரிய, மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ஏ. விக்ரர் சோசை, மடுத்திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எமிலியான்ஸ்பிள்ளை, கிறிஸ்தவமத அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. ஏ.ஆர். குணவர்த்தன ஆகியோர் வைபவ ரீதியாகத் திறந்துவைத்தனர். அந்தக் கட்டிடத்தையும், பெயர்ப்பலகையையும் மேலே காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இறைவா, உமக்கே புகழ்"

## மனிதர்களை உள்ளடக்கிய சமுதாய திருமடல்

தான் எழுதியுள்ள "இறைவா, உமக்கே புகழ்" என்ற திருமடல், இயற்கையைப்பற்றி மட்டும் பேசும் ஒரு பசுமைத் திருமடல் அல்ல. மாறாக, மனிதர்களை உள்ளடக்கிய ஒரு சமுதாயத் திருமடல் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வத்திக்கானில் நடைபெற்ற ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கில் கூறினார்.

உலகின் பல்வேறு பெரு நகரங்களின் மேயர்களுக்கென வத்திக்கானில் நடைபெற்ற ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்துகொள்ள வந்திருந்த 65க்கும் மேற்பட்ட மேயர்களைச் சந்தித்த திருத்தந்தை, இயற்கைப் பாதுகாப்பையும் மனித பாதுகாப்பையும் பிரித்துப்பார்க்க முடியாது என்று தன் உரையில் குறிப்பிட்டார்.

காலநிலை மாற்றம், அதனால் உருவாகும் இயற்கை இடர்கள், அதனால் குடிபெயரும் மக்கள், அவர்கள் சந்திக்கும் இன்னல்கள் என்று, ஒரு தொடர் சங்கிலியாக வளரும் துன்பங்களால், இயற்கையில் ஏற்படும் மாற்றங்களை மனித சமுதாய மாற்றங்களில் இருந்து பிரித்துக் காண்பது இயலாது என்று திருத்தந்தை தனது உரையில் கூறினார்.

இன்று நம்மிடையே உருவாகியுள்ள காலநிலை மாற்றங்களும், வேலையில்லாத் திண்டாட்டங்களும் இளையோரை நம்பிக்கையிழந்து போகச் செய்வதால், அவர்கள் போதைப்பொருள்கள், தற்கொலை என்ற மிகத்துன்பகரமான முடிவுகளைத் தேடுவதைத் தடுப்பது நமக்குமுன்னுள்ள ஒரு மாபெரும் சவால் என்று திருத்தந்தை வலியுறுத்திப் பேசினார்.

தொழில்நுட்ப இயந்திரங்களைச் சார்ந்த வாழ்வு என்பவை, நாம் அனுபவித்துவரும் புதுவகை நோய்கள் என்ற குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயந்திரங்களின் தொடர் செயற்பாடுகளுக்காகக் காடுகள் அழிக்கப்படுவது சுற்றுச் சூழலுக்கு நாம் செய்யும் மிகப்பெரும் அநீதி என்று சுட்டிக்காட்டினார்.

# மடு ஆவணித் திருவிழாவின்போது திருத்தந்தையின் பிரதிநிதி பேராயர்

## மேதகு பியரே நியுயன் வன் ரொட் ஆண்டகை ஆற்றிய மறையுரையின் தமிழ் வடிவம்

கிறிஸ்துவில் அன்பார்ந்த சகோரதர சகோதரிகளே,

புனித மரியாளியின் மாபெரும் விண்ணேற்பு விழாவைக் கொண்டாடுவதற்கு, உங்களோடுகூட இங்கு வந்திருப்பதையிட்டு எனது மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அத்துடன் இத்திருப்பதிக்கு வருகைதந்து, சிறப்பித்துச்சென்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடைய நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். எமது திருத்தந்தை அவர்கள் ஜனவரி மாதம் 14ம்திகதி இந்த மடு அன்னையின் புனிதமிக்கதும், அற்புதம் நிறைந்ததுமான திருத்தலத்தில் நின்று, பின்வரும் வார்த்தைகளால் ஒரு அர்த்தமுள்ள உண்மையை வெளிப்படுத்தினார். "நாம் இந்த மருதமடு மாதாவின் இல்லத்தில் நிற்கும்பொழுது மரியன்னையின் இல்லத்திலே நிற்கின்றோம். இந்த இல்லத்தில் அவள் எங்களை அன்புடன் வரவேற்கின்றாள்" என்றார்.



ஒவ்வொரு யாத்திரிகர்களும் மருதமடு அன்னையின் இத்திருத்தலத்தில் தமது சொந்தவீட்டில் இருப்பதுபோன்ற உணர்வைப் பெறுகின்றனர். இங்கே மரியாள் நம் அனைவரையும் தம் திருமகனின் பிரசன்னத்தில் கொண்டுவருகின்றாள். இங்கே தமிழர்கள், சிங்களவர்கள் ஆகிய இலங்கையர் அனைவரும் ஒரே குடும்ப உறுப்பினர்கள்போல் வருகின்றார்கள். அவர்கள் தமது மகிழ்ச்சிகளையும், துக்கங்களையும், தமது நம்பிக்கைகளையும், தேவைகளையும் அன்னை மரியாளிடம் ஒப்படைக்கின்றார்கள். இங்கே இவர்கள் அன்னை மரியாளின் இல்லத்தில் பாதுகாப்புடன் இருப்பதாக உணர்கிறார்கள்.

இலங்கையின் அனைத்துக் குடும்பங்களும் கடந்த காலத்தில் பல இழப்புக்களையும், இன்னல்களையும் வடக்கிலும் தெற்கிலும் சந்தித்துள்ளனர். கொடுமையான வன்முறையினால் அனேக மக்கள் கொலைசெய்யப்பட்டு, இரத்தம் சிந்தப்பட்ட அந்த ஆண்டுகளில் இந்த மடு அன்னையின் திருத்தலமானது சமாதானத்தினதும், நல்லிணக்கத்தினதும் பாலைவன நீர்ச்சுனையாக அமைந்திருந்தது. இங்கே மீண்டும் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும், அன்னை மரியாளின் பிரசன்னத்தில் ஒன்றுகூடியுள்ளார்கள். அன்னை மரியாள் நம் அனைவருக்கும் ஓர் மிகவும் சிறப்பான ஒப்புரவின் கருவியாகத் திகழ்கின்றாள்.

இன்று எம் மத்தியில் அன்னை மரியாள் பிரசன்னமாய் இருந்து இறை இயேசுவின் பிரசன்னத்தை எமக்குக் காண்பித்து அவருடைய அமைதியையும், இரக்கத்தையும் பெற்றுத்தருவதற்காக அவருக்கு நாம் நன்றி நவில்கின்றோம்.

மேலும் எமது குற்றங்கள் தீயநாட்டங்கள் போன்றவைகளுக்காக மன்னிப்புப்பெற அருள் வேண்டுவோம். ஒப்புரவிற்கு இழப்பீடு மிகமுக்கியமானது. ஏனெனில் ஒப்புரவாவதற்கு எமது தவறுகளையும் குறைகளையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இது கடினமாகத் தோன்றினாலும் சிலுவையின் ஒளியில் உண்மையான குற்ற உணர்வு தெளிவாகும். அதேநேரத்தில் பரஸ்பர மன்னிப்பும் எளிதாகும். மேலும் மன்னிப்பின் பலாபலனே ஒன்றிப்பாகும்.

குழுமம் என்பது ஒன்றிணைந்த சமூகம். இதற்கு அன்பும் புரிந்துணர்வும் அவசியம் என்பதை நாம் அறிவோம். திருச்சபையில் இப்படிப்பட்ட குழுமத்தைப்பற்றி இன்று கூற விரும்புகிறேன். மாபெரும் யூபிலி ஆண்டாகிய 2000மாம் ஆண்டின் முடிவில் புனிதரான திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் ஆயர்கள், குருக்கள், பொதுநிலையினருக்கு அனுப்பிய அப்போஸ்தலிக்க சுற்றுமடலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "திருச்சபையின் வாழ்வில் எல்லா மட்டங்களிலும் நாளுக்குநாள் ஒன்றிணைந்த சமூகம் அதாவது, குழுமவாழ்வு ஊக்குவிக்கப்படவும், விரிவாக்கப்படவும் வேண்டும். தற்போது வழக்கத்தில் இருக்கும் மேய்ப்புப்பணிச்சபை, குருக்கள் சபை போன்றவை விசேட சட்ட ஒழுங்குகளுக்கு உட்பட்டவையாகும். எனினும் அவை குறைவான அர்த்தமுள்ளவை என்றோ பொருத்தமற்றவை என்றோ கருதமுடியாது".

குருக்களுக்கும் பொதுநிலையினரான விசுவாசிகளுக்கும் இடையே ஏற்படும் பயனுள்ள உரையாடல்கள் மற்றும் புரிந்துணர்வுகள் மூலமாக இறைமக்கள் அனைவரையும் ஒரு குழுமமாகக் கட்டியெழுப்ப முடியுமான நிலையினை ஒன்றிணைந்த சமூகத்தின் இறையியலும் ஆன்மீகமும் வலியுறுத்துகின்றது.

நாம் ஒருவர் மற்றவருடன் கலந்துரையாடும்போது புனித மரியன்னைபோல் செவிமடுக்கவும் தியானிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். குழுமத்தின் ஆன்மீகமானது தூய ஆவியினுடைய கொடைகளுக்கான திறந்த உள்ளத்தையும், நம்பிக்கையையும் ஊக்குவிக்கின்றது.

குழுமத்தின் ஆன்மீகம் என்பது தூய ஆவியின் அனைத்துக் கொடைகளுக்குமான இடத்தை உருவாக்கும் கிறிஸ்தவ சமூகத்தின் திறனோடு நெருங்கிய இணைப்பைக் கொண்டுள்ளது. திருச்சபையின் ஒன்றிப்பு என்பது ஒத்திசைவு நிலையல்ல. மாறாக ஓர் உடலின் இணைந்த பல உறுப்பினர் போன்றது. அதுவே கிறிஸ்துவின் ஓர் உடல்.

எனவே திருச்சபையானது திருமுழுக்குப்பெற்று உறுதிப்படுத்தப்பட்ட அனைவரையும் தமது கிறிஸ்தவ வாழ்வின் செயற்துடிப்புள்ள பொறுப்புணர்வில் ஊக்குவிக்கும் கடமையைக் கொண்டுள்ளது. திருநிலைப்பணியாளர்களுடன் இணைந்து ஏனைய பணியாளர்களும் முழுச்சமூகத்தினது நன்மைக்காகவும் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றும்விதமாகச் செழித்தோங்கவேண்டும்.

குருத்துவத்திற்கும், அர்ப்பணிக்கப்பட்டோருக்குமான தேவஅழைத்தலை ஊக்குவிக்க அறுவடையின் ஆண்டவரை நோக்கி இடைவிடாது செபிக்கும் ஒரு மனந்தளரா அர்ப்பணிப்பு அவசியமாக உள்ளது. அனைத்து அழைத்தல்களினதும் பெறுமதியானது திருமுழுக்கு அருட்சாதனத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் புதிய வாழ்விலேயே வேரூன்றி இருப்பதை நாம் காண்கின்றோம். விசேடமாக உலகியல் விவகாரங்களில் ஈடுபடும் நிலையில் இறையாட்சியை நாடுவதும், அவ்வுலகியல் விவகாரங்களை இறைத்திருவுளத்திற்கு ஏற்ப ஒழுங்குபடுத்துவதுமாகிய பொதுநிலையினரின் சிறப்பு அழைப்பினை முழுமையாகக் கண்டறிவது அவசியமாக உள்ளது. எனவே பொதுநிலையினர், திருச்சபையிலும் உலகிலும் கடவுளின் எல்லா மக்களின் பணிக்காகத் தமது சொந்தப் பங்கேற்பைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர்.

இந்தவரிசையிலே குழுமத்தின் இன்னுமொரு முக்கிய விடயமாக அமைவது யாதெனில் மிகவும் மரபுரீதியான குழுக்கள் மற்றும் புதிய திருச்சபை இயக்கங்கள் ஆகியவற்றை ஊக்குவித்து வளர்ப்பதாகும். ஏனெனில் இவை திருச்சபைக்கு தொடர்ந்தும் உயிர் கொடுக்கும் கடவுளின் கொடையும் மெய்யாகவே ஆவியின் வசந்தமும் ஆகும்.


இறுதியாக, இலங்கைவாழ் அனைத்துச் சமூகங்களும் இழந்துபோன ஒன்றிப்பை மீண்டும் கட்டியெழுப்பும் முயற்சியில் தேவ அன்னை தனது மேலான செபங்களினால் பரிந்துபேசுதலினால் எம்முடன் உடனிருக்க அவரை இரந்து கேட்போமாக. இம்மருதமடுத் தாயாரின் திருச்சுரூபமானது அவளது மடுத்திருப்பதிக்கு மீண்டும் திரும்பிவந்ததுபோல இலங்கையின் புதல்வர்களும், புதல்வியர்களும் ஒப்புரவின்தும் குழும உறவினதும் ஊடாக ஓர் புதுப்பிக்கப்பட்ட உணர்வில் கடவுளின் இல்லம் திரும்ப செபிப்போமாக.

அன்புள்ள சகோதர சகோதரிகளே, மரியாளின் இல்லத்தில் உங்களோடு நான் இருப்பதில் மகிழ்வடைகின்றேன். ஒருவர் ஒருவருக்காகச் செபிப்போமாக. எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தத் திருத்தலமானது எப்பொழுதும் ஒரு செபவீடாகவும் அமைதியின் புகலிடமாகவும் திகழ்வதாக. மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யேசேப்பு ஆண்டகை அவர்கள் சுகவீனமுற்றுள்ள நிலையில் அவர் உடல் நலம்தேற இத்திருப்பலியில் அவருக்காகச் செபிப்போம்.

ஈற்றில் நாம் உங்களுக்கு நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அப்போஸ்தலிக்க ஆசீர்வாதத்தை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அன்னை மரியாள் ஊடாக இறையாசீர் பெறுவீர்களாக. ஆமென்.

# நாம் ஏழைகளாக இருந்தாலும்கூட பிறருக்குக் கொடுக்க எம்மால் முடியும்

### திருத்தந்தை பிரான்சிஸ்



இயேசுக்கிறிஸ்து அப்பங்களைப் பலுகச்செய்த புதுமை, பசித்திருக்கும் மனிதருக்கு வாழ்வின் முழுமையை அவர் வழங்குவதைக் காட்டுகின்றது என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

திருநற்கருணையில் பங்குகொள்வது, இயேசுவின் பகிர்தலிலும், கைமாறு கருதாத பண்பிலும் நுழைவதாகும். கிறிஸ்தவர்கள், தங்களிடம் இருப்பதைப் பகிர்வதற்கு இது தூண்டுகின்றது என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

நாம் ஏழைகளாக இருந்தாலும்கூட எதையாவது நாம் பிறருக்குக் கொடுக்க முடியும். நம்மத்தியில் பலர் துன்பங்கள், தனிமை மற்றும் ஏழ்மையை அனுபவிக்கின்றனர். அவர்களுக்கு நாம் என்ன செய்கின்றோம்? துன்பங்களும், வறுமையும், தனிமைத் துன்பமும் வாட்டுகின்றனவே என்று புகார் சொல்லிக்கொண்டே இருப்பதால் பிரச்சினைகளைத் தீர்க்க இயலாது. ஆனால், நம்மிடம் குறைவாக இருந்தாலும், அவற்றை அளிக்கலாம். நிச்சயமாக, நம்மிடம் சிலமணி நேரங்கள், சில திறமைகள், சில சிறப்புப் பண்புகள் இருக்கின்றன. நம்மத்தியில் 5 அப்பங்களும் 2 மீன்களுமாகிய இவை இல்லாமல் இருப்பவர் யார்? அவற்றை இறைவன் கரங்களில் வைப்பதற்கு நாம் விருப்பம் காட்டினால் இந்த உலகில் இன்னும் கொஞ்சம் அன்பைக் கொண்டுவரலாம். இவ்வுலகில் இன்னும் கொஞ்சம் அன்பு, அமைதி, நீதி மற்றும் மகிழ்வைக் கொண்டுவரலாம். நம் ஒருமைப்பாட்டுணர்வின் சிறிய அடையாளங்களை இறைவனால் பலுகச்செய்ய இயலும். அதன் வழியாக அவரின் கொடைகளில் பங்குதாரர்களாகவும் நம்மை ஆக்க முடியும்" என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

# நம்பத்தகுந்த வாழ்க்கை வாழுமாறு திருத்தந்தை வேண்டுகிறார்!

### துறவிகள் பேராயத் தலைவர் கர்தினால் ஜாவோ



நம்பத்தகுந்த வாழ்க்கை, ஏழைகள்மீது சிறப்புக் கவனம், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், பிற மதங்களிடமிருந்து கற்றுக்கொள்ளல் ஆகியவை வழியாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சீர்திருத்த நடவடிக்கைகளில் கத்தோலிக்கர் பங்குகொள்ள இயலும் என்று வத்திக்கான் உயர் அதிகாரி ஒருவர் கூறினார். துறவிகள் பேராயத் தலைவர் கர்தினால் ஜாவோ பிராஸ் டி அவிஸ் (Joao Braz dc Aviz) அவர்கள், நம்பத்தகுந்த சாட்சிகளாக நாம் வாழ வேண்டுமெனத் திருத்தந்தை நம்மிடம் கேட்கிறார் என்று கூறினார்.

இது, பல்வேறு மதங்கள் நல்லிணக்கத்துடன் வாழும் ஆசியாவுக்கு முக்கியம் என்றும், எந்த ஒரு மதத்திலும் காணப்படும் அழகும், நன்மையும், உண்மையும் கிறிஸ்தவர்களாகிய நமக்கும் உரியவையே, ஆயினும் இது இயேசுக்கிறிஸ்துவுக்குச் சாட்சிபகருவதிலிருந்து நம்மை ஒதுக்கி வைக்கக்கூடாது என்றும் அந்தக் கர்தினால் கூறினார்.

# மாற்றங்களை உருவாக்கும் சக்தி பெற்றவர் திருத்தந்தை

சமுதாயப் பிரச்சினைகளையும், அதனால் உருவாகும் காலநிலை மாற்றங்களையும் சீரமைக்க மனித இயக்கங்கள் தேவை என்றும், அத்தகைய இயக்கங்களை வழிநடத்தக்கூடியவர் திருத்தந்தை பிரான்சிஸ் என்றும் இந்தியாவின் மாநகர மேயர் ஒருவர் கூறினார்.


கத்தோலிக்க திரு அவை, இவ்வுலகெங்கும் பரவியுள்ள ஓர் இயக்கம் என்ற கண்ணோட்டத்தில் சிந்திக்கும்போது, அதன் தலைவராக விளங்கும் திருத்தந்தை உலகெங்கும் மாற்றங்களை உருவாக்கும் சக்தி பெற்றவர் என்று சுட்டிக்காட்டிய மேயர் சம்மனி அவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறும் கருத்துக்கள், கத்தோலிக்கர்களால் மட்டுமல்லாமல், உலகின் பல்வேறு மக்களாலும் கூர்ந்து கவனிக்கப்படுகிறது என்று எடுத்துரைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# பேசாலையில் அமரர் அவிதப்பர் அடிகளாரின் 40ஆம் நாள் நினைவு



பேசாலைப் பங்குத்தந்தையாக இருந்தபோது இறையடி சேர்ந்த அருட்பணி. சவிரி விக்ரன் அவிதப்பர் அடிகளாருடைய இறப்பின் 40ஆம் நாள் நினைவு அஞ்சலி நிகழ்வுகள் கடந்த யூலை மாதம் 31ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு பேசாலையில் இடம்பெற்றது. திருப்பலியோடு இந்நினைவு நிகழ்வு ஆரம்பமாகியது.

திருப்பலியின்போது அருட்பணி. நேசன் அடிகளார் மறையுரை ஆற்றினார். திருப்பலியின் நிறைவில் குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார் மற்றும் வேறுசிலரும் அஞ்சலி உரைகள் நிகழ்த்தினர். இந்நிகழ்வில் பிச்சைகுளத்திலிருந்து அவிதப்பர் அடிகளாரின் அன்புத் தாயார் மற்றும் உறவினர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கத்தோலிக்க பெண்கள் பணிக்குழுவினருக்கான கருத்தரங்கு

மூன்று மாதத்திற்கு ஒரு தடவை மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க பெண்கள் பணிக்குழுவினருக்கு நடைபெறும் விசேட ஒன்றுகூடலும் கருத்தரங்கும் இம்முறை கடந்த ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அளவக்கைப் பங்கில் உள்ள பொன்தீவுகண்டல் ஆலயத்தில் நடைபெற்றது.

திருப்பலியோடு ஆரம்பமாகிய இக்கருத்தரங்கை அருட்பணியாளர் கியூபேட் (அமதி) அவர்கள் நெறிப்படுத்தினார். "மரியாளின் ஆன்மீகமும், குழந்தைகளின் வளர்ப்பு முறையும்" என்ற கருப்பொருளில் கருத்தரங்கு இடம்பெற்றது.

இக்கருத்தரங்கிற்கு மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளில் இருந்து 45பேர் வருகைதந்திருந்தனர். கருத்தரங்கின் நிறைவில் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பின்னர் மதியம் 2.00 மணியளவில் மதிய உணவுடன் இந்த நிகழ்வு நிறைவுபெற்றது.

இப்பெண்கள் பணிக்குழுவின் தலைவியாக லியோன்சின் வளனார் சபை அருட்சகோதரி யோசப்பின் அவர்கள் பணியாற்றுகின்றார். இப்பணிக்குழுவின் இயக்குனராக அருட்பணி. எஸ். கே. தேவராஜா அடிகளார் விளங்குகிறார். அளவக்கைப்



பங்குத்தந்தை அருட்பணி. சுரேந்திரன் றெவல் அடிகளாரும் இந்நிகழ்வில் கலந்து ஆசியுரை வழங்கினார்.

# பேசாலையில் 3 ஏக்கர் காணியை கடற்படையினர் அபகரிக்க முயற்சி

## பேசாலை ஆலய அருட்பணிப் பேரவை கவலை

மன்னார் பேசாலை வெற்றிமாங்குடியிருப்பு கிராமத்தில் உள்ள 3 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட காணியை கடற்படையினர் அபகரிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாக பேசாலை சென். விக்டரிஸ் ஆலய அருட்பணிப் பேரவையினர் கவலை தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பேசாலை சென். விக்டரிஸ் ஆலய அருட்பணிப் பேரவையினர் மன்னார் பிரஜைகள் குழுவின் கவனத்திற்கு கடந்த ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி கொண்டுவந்துள்ளதோடு பொலிஸில் முறைப்பாட்டையும் பதிவுசெய்துள்ளனர்.

குறித்த முறைப்பாட்டில் மேலும் குறிப்பிடுகையில், பேசாலைக் கிராமத்தின் மேற்குப் பக்கமாக பேசாலையில் இருந்து சுமார் 4 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சுமார் 210 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட வெற்றிமாங்குடியிருப்பு என்றழைக்கப்படும் இக்காணி பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்திற்குச் சொந்தமானது. இக்காணிக்கான உறுதி, நில அளவைப்படம், வரலாற்றுத்தாள் போன்ற ஆவணங்கள் மன்னார் மறைமாவட்ட ஆயரின் பெயரில் எம்மிடம் உள்ளது.

சுமார் 10 வருடங்களுக்கு முன் இங்கு வந்த கடற்படையினர் இங்கு படைமுகாம் ஒன்றை அமைக்க முற்பட்டபோது பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய அருட்பணிச் சபையினர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து படைமுகாமை குறித்த கோயில் காணியில் அமைப்பதைத் தடுத்தனர்.

இந்த நிலையில் இப்பணிக்கு பொறுப்பாக வந்திருந்த கடற்படை பொறுப்பதிகாரி எமது கிராமத்தின் முன்னாள் பங்குத்தந்தையுடன் இணக்கமாக நட்புறவுடன் உரையாடி தாங்கள் தற்காலிகமாக சிறிது காலம் இங்கு இருப்போம் என்றும், பொருத்தமான ஒரு இடத்தைக் கண்டுபிடித்தவுடன் இங்கிருந்து இடம்மாறி விடுவோம் என்றும் தெரிவித்தார். இந்த நிலையில் எமது பங்குத்தந்தை மற்றும் மக்களின் எதிர்ப்பின் மத்தியிலும் ¾ ஏக்கர் அளவான காணியினை பலவந்தமாகப் பிடித்து அக்காணியில் தற்காலிகமாக தமது கடற்படை முகாமை அமைத்தனர். தற்போது அக்காணி விசாலமாக்கப்பட்டுள்ளதோடு சுமார் 3 ஏக்கர் அளவுள்ள காணியை கடற்படையினருக்கு அளந்தெடுப்பதற்கான முயற்சிகள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றது.

கடந்த 2013ஆம் ஆண்டு யூலை மாதமளவில் மேற்குறித்த காணியை நில அளவை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது எமது மக்களிடமிருந்து பாரிய எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அவற்றை எல்லாம் புறந்தள்ளி, அதை அரச வர்த்தமானியில் பிரகடனப்படுத்தி, எந்தவித அறிவித்தலும் நஷ்டஈடுகளும் இன்றி தமது இஷ்டத்திற்கு நில அளவையாளர் ஒருவரைக் கொண்டு, குறித்த காணியில் சுமார் 3 ஏக்கர் காணியை சுவீகரிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த காணி அபகரிக்கும் செயற்பாட்டை பேசாலை வெற்றிநாயகி ஆலய மேய்ப்புப்பணிச்சபையும், பேசாலை மக்களும் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

# தலைமன்னார் புனித லோறன்சியார் திருவிழா






தலைமன்னார் பங்கின் பாதுகாவலரான புனித லோறன்சியார் திருவிழா கடந்த ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி சிறப்பாக இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. ஜே. நீக்கிலஸ் அடிகளார் ஒப்புக்கொடுத்தார். நவநாள் மறையுரைகளை அருட்தந்தை அந்தோனிமுத்து (அமதி) அவர்கள் வழங்கினார். தலைமன்னார் பங்குத்தந்தை அருட்திரு. ரி. நவரெட்னம் அடிகளாரின் வழிகாட்டலில் இவ்விழாவுக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றிருந்தன.

# அமரர் அருட்பணி. எட்வின் அவர்களின்

## ஓராண்டு நினைவஞ்சலியும் இரங்கற் திருப்பலியும்



அமரர் அருட்பணி. எட்வின் தேவதாசன் அடிகளாரின் ஓராண்டு நினைவஞ்சலியும் இரங்கற் திருப்பலியும் கடந்த ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மன்னார், தோட்டவெளி, யோசப்வாஸ் நகர் நற்கருணை ஆண்டவர் ஆலயத்தில் இடம்பெற்றது.

இரங்கற் திருப்பலியை அமலமரித் தியாகிகளின் யாழ் மாகாண முதல்வர் அருட்திரு. எட்வின் வசந்தராஜா அடிகளார் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். திருப்பலியின்போது அருட்பணி. விமல்ராஜ் (அமதி) அவர்கள் மறையுரையாற்றினார். இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை, திருகோணமலை மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. கிங்சிலி அடிகளார் மற்றும் அமதிக் குருக்கள், மன்னார் மறைமாவட்டக் குருக்கள் என பெருந்தொகையான குருக்கள், துறவியர் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

திருப்பலி நிறைவில் அடிகளாரின் நினைவாக மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன. ஆலய வளாகத்தில் மரங்களும் நடப்பட்டன. திருப்பலியில் பங்குகொண்ட அனைத்துக் குருக்கள் துறவிகளுக்கு எட்வின் அடிகளாரின் வீட்டில் மதிய உணவு வழங்கப்பட்டது.

# இளமருதங்குளம் கார்மேல் அன்னை திருவிழா



வவுனியா இளமருதங்குளம் பங்கின் புனித கார்மேல் மாதாவின் 101ஆம் ஆண்டுத் திருவிழா கடந்த 16.07.2015ல் கொண்டாடப்பட்டது. மன்னார் மறைமாவட்ட முன்னாள் குருமுதல்வர் அருட்பணி. சேவியர் குருஸ் அடிகளார் தலைமையில் இத்திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

# கீளியன்குடியிருப்புப் பங்கு முன்பள்ளி விளையாட்டுப்போட்டி

கீளியன்குடியிருப்பு பங்கிற்கு உட்பட்ட முன்பள்ளிகளான நடுக்குடா, துள்ளுகுடியிருப்பு, பாவிலுப்பட்டாங்கட்டி குடியிருப்பு, கீளியன்குடியிருப்பு, கட்டுக்காரன் குடியிருப்பு ஆகிய ஐந்து முன்பள்ளிகள் இணைந்து நடாத்திய இல்ல விளையாட்டுப் போட்டி நான்கு வருடத்திற்குப் பிறகு கடந்த 17.07.2015 அன்று வெகுசிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எம். ஜெயபாலன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் பிறிமுஸ் சிராய்வா அவர்களும், ஓய்வுபெற்ற முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. L.R. குருஸ் அவர்களும், வாழ்வுதயத்தின் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. கிறிஸ்ரி அவர்களும் மற்றும் பங்கின் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அருட்சகோதரிகள் ஆகியோரும் இந்நிகழ்விற்கு வருகை தந்தனர்.

இந்நிகழ்வின் முதலாவது அங்கமாக முன்பள்ளி சிறுவர்களின் கொடி ஏற்றப்பட்டு ஒலிம்பிக் சுடர் ஏற்பட்டது. இதன்பின்பு 28 முன்பள்ளி சிறார்களைக்கொண்ட உடற்பயிற்சி நிகழ்வு இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து சிறுவர்களுக்கான விளையாட்டுக்களும் அவர்களுக்கான வினோத உடைப் போட்டி மற்றும் இல்லங்களுக்கான போட்டி இடம்பெற்றது. அத்தோடு பெற்றோருக்கான விளையாட்டுக்களும் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

சகல நிகழ்வுகளும் கீளியன்குடியிருப்பு பங்குத்தந்தை ரெறன்ஸ் கலிஸ்ரஸ் குலாஸ் அவர்களின் தலைமையில் இனிதே நடைபெற்றது.

**மன்னா விநியோகஸ்தர்களே!**

**உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் மன்னாவை**
**காலம் தாமதிக்காமல் உடனடியாக விநியோகிங்கள்!**

- மன்னா நிர்வாகம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அர்ப்பண வாழ்வு ஆண்டு சிறப்புக் கட்டுரை

# துறவற அர்ப்பணத்தில் மிளிரும் ஆன்மீகம்



திருச்சபையின் உறுப்பினர்களுக்கும் சிறப்பாகத் துறவிகளுக்கும் காலத்தின் அறிகுறிகளுக்கு ஏற்ப அர்ப்பண வாழ்வு ஆண்டை அறிவித்து திருச்சபையில் ஆன்மீக மறுமலர்ச்சி எழுச்சிபெற வழிகாட்டுகிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

எல்லாத் துறவற சபைகளும் திருச்சபையின் வாழ்வில் பங்குகொண்டு விவிலியம், திருவழிபாடு, மறைக்கோட்பாடு, கிறிஸ்தவ ஒன்றிப்பு, நற்செய்தி அறிவிப்பு அருட்பணிகள், சமூக ஈடுபாடு போன்றவற்றில் திருச்சபை செய்யத்தூண்டும் காரியங்களை தம்மால் ஆனமட்டும் தமது இயல்புக்கேற்ப தமதாக்கிக்கொண்டு தழைக்கச்செய்ய வேண்டும் என்கின்றது இரண்டாம் வத்திக்கான் சங்கம்.

துறவற வாழ்வில் உள்ளம் ஊன்றி வாழ்வதிலும், நல்மாதிரிகைகளைத் தேடும் உலகிற்கு இயேசுவின் சாட்சியாக வாழ்வதிலும், நம்மை அழைத்தவரின் விருப்பத்தை நிறைவேற்றுவதிலும் மட்டுமே அர்ப்பண வாழ்வின் பெருமை அடங்கி இருக்கிறது. இந்த வகையில்,

### திருச்சபையில் துறவி என்பவர்

- "ஆண்டவரே என் அரண், அவரே என் உரிமைச் சொத்து" என்று அவரில் சரணாகதி அடைந்து மகிழ்ச்சியோடு வாழ்பவர்.
- இறைவன் கையில் இயங்கும் ஒரு கருவி நான் என்று நம்பியிருப்பவர்.
- ஆண்டவரின் வல்லமையில் நம்பிக்கை வைப்பவர்.
- கடவுளுக்கும், மக்களுக்கும் பாலம் கட்டுபவர்.
- 'நான்' மையத்திலிருந்து 'கடவுள்' என்ற மையத்தை நோக்கிச் செல்பவர்.
- "எளிய வாழ்க்கையே இறைவனின் நற்செய்தி" என்று வாழ்பவர்.

### துறவிகளின் அர்ப்பணம் அர்த்தம் பெறுவது

- இருளில் மூழ்கி உள்ள இதயங்களுக்கும், இடங்களுக்கும், இயேசுவின் ஒளியை எடுத்துச்செல்லும்போது.
- தளர்ந்துபோன இதயங்களுக்குள் நம்பிக்கையை விதைக்கும் போது.
- ஏழைகளுக்காகவும் இறைவனுக்காகவும் தன்னை அர்ப்பணித்து முழுமையாகச் செயல்படும்போது.

### காலத்தின் அறிகுறி

ஆண்டவரின் திட்டத்தை, காலத்தின் அறிகுறிகளுக்கு ஏற்ப துறவிகள் அறிந்துகொள்வது காலத்தின் கட்டாயம். எனவே இதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமும் உள்ள இயேசுவின் இதயத்தைப்போல் ஒவ்வொரு துறவியின் இதயமும் மாற்றம்பெற வேண்டும். அதற்கு இயேசுவை அறியும் ஒப்பற்ற செல்வத்தைப் பெற்றுக்கொள்ள விவிலியத்தை நாள்தோறும் வாசிப்பது, தியானிப்பது துறவியரின் கடமையாக இருந்தாலும் தன்னிலேயே தனிப்பட்ட ஆர்வத்துடன் கடவுள் அன்பைச் சுவைத்து இயேசுவின் மனநிலையில் வாழ்வதும் இயங்குவதும் துறவிகளின் முயற்சியும் பயிற்சியும் பணியுமாக அமைய வேண்டும். அதற்காகத்தான் ஒவ்வொரு நாளும் திருப்பலியில் இயேசுவின் உடலை உணவாக உண்டும் இறைவார்த்தைப் பகிர்வில் (பந்தியில்) பங்கேற்றும் ஊட்டம் பெற்றுக்கொள்கிறோம்.

### கடவுளின் அன்பை சுவைத்த இவர்களைப்போல்

➢சக்கேயு இயேசுவை ஆவலோடு தேடிச்சென்று மரத்தில் காத்திருந்ததுபோல.

➢இரத்தப்போக்குடைய பெண், "நான் அவருடைய ஆடையைத் தொட்டாலே போதும், நலம் பெறுவேன்" என்று தேடிச் சென்றது போல.

➢பார்வையற்ற பார்த்திமேயு இயேசு அவ்வழியே போகிறார் என்று கேள்விப்பட்டு, "இயேசுவே தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்" என உரக்கக் கத்தி பார்வை பெற்றதுபோல.

➢மகதலா மரியா ஓடோடிச் சென்று அவரைச் சந்தித்ததுபோல.

➢வெரோணிக்கா இயேசுவுக்கு ஆறுதல் அளிக்க விரைந்தது (சிலுவைப்பாதை) போல.

➢சமாரியப் பெண் கிணற்றடியில் இயேசுவோடு உரையாடி அவர் மெசியா என்று தன் ஊர் மக்களுக்கே அறிக்கை இட்டதுபோல.

### திருச்சபை காட்டும் துறவிகளின் புதிய பார்வை

- கிறிஸ்துவைப் பின்பற்றுவதே துறவற வாழ்வின் அளவுகோல்.
- சபையை தோற்றுவித்தவரின் நோக்கம், நல்மரபுகள், (சபையின் குடும்பச் சொத்துக்கள் Patrimony) ஆகியவற்றைப் பேணுதல்.
- காலத்தின் அறிகுறிகளை இறைவார்த்தையின் ஒளியில் தேர்ந்து தெளிந்து மக்களுக்குப் பணிபுரிதல்.

### இது இன்றைய காலத்தின் கட்டாயம்

➢நாம் செய்கின்ற அத்தனை திருத்தூதுப் பணிகளும் துறவற மனநிலையில் உருப்பெறுதல் அவசியமாகிறது. மேலும் பணிக்கு ஏற்றவிதத்தில் தம் சபைகளின் ஒழுங்குமுறைகளையும், பழக்க வழக்கங்களையும் வகுத்துக்கொள்வது அவசியமாகிறது என்பதை திருத்தந்தை நினைவுபடுத்துகிறார். இதன் பின்னணியில்,

➢நற்செய்தியைச் சுமந்து உலகெங்கும் செல்லும் திருப்பயணிகள் தான் துறவிகள் என்றும்,

➢துறவிகள் கடவுளின் பல்வேறு கொடைகளின் சீரிய பொறுப்பாளர்கள் என்றும்,

➢வரலாற்றில் ஆவியானவரைத் தாங்கியவர்களாக மாறி, நற்கனிகளான அன்பு, இரக்கம், பரிவு, பாசம், அக்கறை, சகோதர வாஞ்சை, மனித நேயம் கொண்டவர்களாக வாழ்தல் வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

### இன்றைய காலத்தின் அறிகுறி

மூவொரு இறைவனின் நட்பும், திருக்குடும்பத்தின் சாயலும், திருமறை காட்டும் உடல் சார்ந்த - உள்ளம் சார்ந்த இரக்கச்செயல்களும் இன்றைய துறவற குழுமங்களில் வெளிப்பட வேண்டும்.



அதன் அடிப்படையில் அர்ப்பண வாழ்வு ஆண்டின் நோக்கத்தை எமது சபையின் தனிவரத்தோடு ஒப்பிட்டு, வரலாற்றின் வேரோட்டத்தை திரும்பிப்பார்க்க ஆசைப்படுகிறேன். எமது சபையின் நிறுவுனர் தந்தை லூயிஸ் சவேனியன் துப்புயி (MEP) அவர்கள் உலகக் கல்வி வழியாக மறைக்கல்வி அளித்து, பிள்ளைகளை ∸ சிறப்பாக பெண்களை நன்நெறி வழியில் வாழ்வில் நம்பிக்கையை வளர்த்தெடுத்து, நல்ல சமுதாயத்தை உருவாக்கக் கனவு கண்டார். அந்த நாளை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

### கல்வி நிறுவனங்கள் மற்றும் பணித்தளங்களில் எமது சபையின் பணி முன்னெடுப்புகள்.

கல்விப் பணி, நற்செய்தி அறிவிப்புப் பணி, மருத்துவப் பணி, சமூகப் பணி வாயிலாக உடல் உள்ள நலம் பேணுதல். முழுமனித ஆளுமையை வளர்த்தல், உண்மையிலும், நேர்மையிலும் நல்ல மனச்சாட்சியை உருவாக்கிட கடவுள் நம்பிக்கையை வளர்த்தல். இறைவனோடு மனிதரோடு நல்லுறவை வளர்த்தல். சிறார் மறைக்கல்வி ஞாயிறு மறைக்கல்வி, அருட்சாதன மறைக்கல்வி, பக்த சபைகள், அன்பியங்கள், இயேசுவின் கண்மணிகள் இயக்கம் என உருவாக்கி மறையறிவு, விவிலிய அறிவு, புனிதர்கள் பற்றி அறிவு கொடுப்பதற்கான வாய்ப்புகளைத் தேடிச் செயல்படுத்துதல்.

### ஏனென்றால்,

மறைக்கல்வி மனிதத்தை உருவாக்குகிறது.
மனச்சாட்சியை உருவாக்குகிறது.
உறவை வளர்க்கிறது.
இதயத்தை இயேசுவை நோக்கித் திருப்புகிறது.
இதயத்தை இயேசுவை உற்றுப்பார்க்கச் செய்கிறது.
இயேசுவை அதிகமாக புரிந்துகொள்ளச் செய்கிறது.
திருச்சபை மறையுண்மைகளின் புரிதலை ஆழப்படுத்துகிறது.
அர்த்தமுள்ள வழிபாடுகளுக்கு அழைத்துச் செல்கிறது.
பல்சமய உறவுகளை வளர்க்கிறது.

இன்ப துன்பங்களில், வெற்றி தோல்விகளில், வாழ்க்கையை சமநிலைப்படுத்துவதில் பக்குவப்படுத்துகிறது. இது எனது கிராம சிறார்களின் இளையோரின் மறைக்கல்வி கொடுத்த அனுபவம்.

கிராமங்களில் குடும்ப சந்திப்பு, மாலை நேர செபவழிபாடு, செபமாலை சொல்லுதல், குடும்பங்களில் இறைவார்த்தை பகிர்வு மற்றும் செபத்தின் பலம், கடவுள் ஒவ்வொருவரோடு பேசுகிறார் என்பதை உணரச்செய்து, மனக்கசப்பு, உறவு முறிவு இவைகளை சரிப்படுத்தி, இறைவார்த்தையின் வல்லமை உணர்த்தப்படுகிறது. அவர்களும் இறை நம்பிக்கையில் வாழ்வதைக் காணமுடிகிறது.

இதனால் காவற்துறை வழக்குகள் இரத்துசெய்யப்பட்டன. நீதிமன்ற வழக்குகள் திரும்பிப் பெறப்பட்டன.

தவக்காலம், திருவருகைக்காலங்களில் மக்களை நற்செய்தி செபவழிபாட்டின் மூலம் நல்ல தயாரிப்புச் செய்து, ஒப்புரவு அருட்சாதனம் பெற வழிகாட்டப்பட்டதால் சகோதர உறவும் மனிதநேய உறவும் புதுபிக்கப்பட்டது.

பரிந்துரைச்செபம், நோன்புச் செபம், தனிநபர் குடும்ப ஆலோசனை மூலம் மக்கள் உடல் உள்ள சுகம் பெற்றார்கள். சாத்தானின் பிடியில் இருந்து விடுதலை அடைந்துள்ளார்கள். இறைவார்த்தையில் நம்பிக்கை வைத்தவர்கள் தூய உள்ளத்தினராய், தங்கள் வாழ்வில் மனமாற்றத்தின் பாதையில் சென்று, கடவுளின் அரும்பெரும் செயல்களைக் கண்டார்கள், அனுபவித்தார்கள், இறைவார்த்தைக்குச் சாட்சியாய் வாழ்கின்றனர்.

மனநலம் குன்றியோர், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற முதியோர், பெற்றோரை இழந்த பிள்ளைகள், பெற்றோரால் கைவிடப்பட்ட பிள்ளைகள், பெற்றோரால் வேண்டாம் என்று புறம் தள்ளப்பட்ட குழந்தைகள் - இவர்களில் இயேசுவின் முகத்தையும் கருணையையும் சகோதரிகள் கண்டு பணிச்செய்து வருகிறார்கள். பெற்றோரை இழந்தவர்கள் தகுந்த வழிகாட்டலின்படி கல்வி அறிவையும், தொழில் கல்வியையும், தகுந்த வேலை வாய்ப்பையும் பெற்று திருமணம் முடித்து நன்முறையில் வாழ்கிறார்கள்.

### எனது மறைக்கல்வி அனுபவம்

எனது தொடக்கப்பள்ளி நாட்களில் அப்போது கிளைப்பங்காக இருந்த எனது ஊரில் தினந்தோறும் காலை, மாலை செபம் ஆலயத்தில் நடைபெறும். வாரத்தில் இரண்டு நாட்கள் இலத்தீன் மொழியில் திருப்பலி நடக்கும். திருப்பலியில் பங்கேற்கும்போது குருவானவர் சொன்ன Sursum corda என்ற வார்த்தை மட்டும் என் மனதில் நன்கு பதிந்தது. ஆனால் பொருள் எனக்குத் தெரியாது.

அருட்தந்தை பி. பி. சேவியர் அவர்கள் வருடத்தில் ஒருமுறை வருகை தந்து மறைக்கல்வியில் கேள்விகள் கேட்டு பரிசுகள் வழங்குவது வழக்கம். ஒருமுறை திருப்பலியில் பங்குத்தந்தை சொன்ன செபங்களில் ஏதாவது ஒரு செபம் சொல்லச் சொல்லிக் கேட்டார் . எங்கள் பள்ளியில் யாருக்குமே தெரியவில்லை. ஏன் என்றால் இலத்தீனில் திருப்பலி. நான் எழுந்து Sursum corda என்ற வார்த்தையை கூறினேன். ஆனால் பொருள் தெரியாது. அருட்தந்தை அவர்கள் எனக்கு ஒரு மாதா படமும், கழுத்தில் அணிந்துகொள்ள மாதா சுரூபமும் கொடுத்தார்.

இந்நிகழ்வுகளின் தொடர்ச்சியாக புதுநன்மை மறைக்கல்வி படிக்கும்போது, புதுநன்மை வாங்குவதற்கு முந்தின நாள் பங்குத்தந்தை, நாளை உன் உள்ளத்தில் வரபோகிறவர் யார்?" என்று கேட்டார். 'இயேசு' என்று சொன்னேன். "நாளைமுதல் உன் உள்ளத்தில் நீ வளர்வதுபோல் உன்னோடு இயேசு வளர்வார். நீ எங்கு சென்றாலும் இயேசு உன்னோடு வருவார்" என்றார். இது மட்டும் எனக்கு நன்கு ஞாபகம் இருக்கிறது.

நான் கடலூர் புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளிக்கு படிக்க வந்தபோது, பங்குத்தந்தை நெல்லிக்குன்னம் அவர்கள் திருப்பலி முடிந்தவுடன் விடுதி மாணவிகளிடம், "இயேசு உங்கள் உள்ளத்தில் வந்திருக்கிறார். காவல் தூதர் உங்களோடு இருந்து, 'யேசு சொல்வதைச் செய்' என்று உள்ளத்தில் தூண்டிக்கொண்டே இருப்பார். நீங்கள் காவல்தூதர் சொல்வதுபோல் செய்தால் இயேசு உங்களோடு பேசுவார், உங்களோடு இருப்பார்" என்று கூறினார்.

அப்போது என் உள்ளத்தில் இயேசு என்னோடு பேசுவார் என்ற எண்ணம் ஆழமாய்ப் பதிந்தது.

விடுதியில் நான் படிக்கும்போது, காலையில் கத்தோலிக்க கிறிஸ்தவ பிள்ளைகள் எல்லாம் காலைச் செபம் சொல்வதும், புனிதர்கள் வரலாறு வாசிப்பதும், அன்றாட நற்செய்தி வாசிப்பதும், மாலையில் செபமாலை சொல்வதும் வழக்கம். அவ்வாறு வாசிக்கும்போது "வாழ்பவன் நான் அல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்" என்ற வசனம் நன்றாக என் மனதில் பதிந்துவிட்டது.

நீண்ட நாட்களுக்குப்பின், நான் துறவியாக பயிற்சி பெறும்போது எனது குடும்ப செபம், பள்ளி மறைக்கல்வி, திருவழிபாடு, (திருப்பலி), விடுதியில் செபித்த செபங்கள் அருட்தந்தையர் கேட்ட கேள்விகள், சொன்ன வார்த்தைகள், என் உள்ளத்தின் ஆழத்தில் நான் துறவி ஆவதற்கே அடித்தளமிட்டு இருக்கிறது என்பதை நினைத்து மகிழ்ந்தேன். எனவே குடும்பம், பள்ளிச்சூழல், பங்கு வளாகம், திருவழிபாடுக் கொண்டாட்டங்கள், அருட்சாதன நிகழ்வின் சூழல்கள் போன்றவை குழந்தைகள் மறைசார்ந்த செய்திகளை கற்றுக்கொடுக்கும் வளர்த்தெடுக்கும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக திருத்தந்தை கொடுக்கும் சிந்தனைகளை நினைவுகூர்வோம்.

- **பக்தி முயற்சிகள்:-** இயேசுவை சந்திக்கும் ஒரு சிறப்பான தளம்.
- **பக்த சபைகள்:-** மறைக்கல்வியின் பணித்தளங்கள்.
- புனிதர்கள் திருச்சபையின் விளக்குகள், மற்றும் திருச்சபையின் திறந்த புத்தகம்.
- குடும்பம் ஒரு குட்டி திருச்சபை.
- உண்மையான கல்வி, அனைத்து மக்களோடு இவ்வுலகம் முழுமையோடும் இணைந்து வாழும் முறையைக் கற்றுத் தருகிறது.

### துறவிகள் சந்திக்கும் சவால்கள்

**(குடும்பங்கள், பணித்தளங்கள், துறவறக் குழுமங்கள்)**

❖ உலகக்கல்வி ஆர்வம், ஊடகங்களின் தாக்கம், ஆன்மீகக் காரியங்களுக்கு முன்னுரிமை இல்லை.
❖ ஞாயிறு ஓய்வு நாள் குடும்பங்களுக்காக என்று இருந்தாலும் ஞாயிறு திருப்பலி இல்லாமல், தங்கள் பிள்ளைகளைச் சிறப்பு படிப்புக்கும், கலைத்திறன் பயிற்சிக்கும் அனுப்பும் பெற்றோர்களைப் பார்க்கிறோம்.
❖ மறைக்கல்விக்கு தகுந்த நேரமின்மை.
❖ கவர்ச்சியற்ற மறைக்கல்வி போதனை.
❖ தேர்வுக்காக மனப்பாடம், போட்டிக்காக பயிற்சி
❖ பாடச்சுமை, வேலைபளு.
❖ ஆசிரியர்களுக்கு காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப பயிற்சியின்மை.
❖ ஊடகம் இல்லா போதனை.

### இந்த நிலையில் சகோதரிகளுக்கு திரு அவையின் ஆலோசனை

❖ திருத்தூது பணி வெற்றியைவிட பிரமாணிக்கத்திற்கு அர்ப்பணிப்புடன் இருப்பது.
❖ வெளிபுறவேலைகளைவிட, தனிப்பட்ட சான்று வாழ்வு கிறிஸ்துவின் பிரசன்னத்தை உருவாக்குவது.
❖ கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் என்னும் நற்செய்தியின் அறிவுரைகளைக் கடைப்பிடிப்பதன் வழியாக துறவியர்கள், நவீன உலகின் உலகம் அனைத்திலுமுள்ள மக்கள் சந்திக்கும் பல்வேறு சவால்களுக்கும் உயிருள்ள பதில்களாக விளங்க முடியும் என்கிறது. (எண் 88- 92)

### முடிவுரை


உடலிலும் உள்ளத்திலும் துயருற்று, ஆறுதல் அளிக்கும் வார்த்தைகளுக்காகக் காத்திருக்கும் மக்களை ஆற்றுப்படுத்த வெளியேறிச் செல்வோம். தேவையில் இருப்போரை நெருங்கிச் சென்று சந்தித்து உரையாடுவோம். எம்மாவு சீடர்களுடன் இயேசு பயணித்து தன்னை வெளிப்படுத்தியதுபோல, குழும வாழ்விலும், பணி வாழ்விலும் பிறரோடு பயணிப்போம்.

**- அருட்சகோதரி ஏ. எஸ். லூர்து மேரி,**
**மாதா இருதய சபை, தலைமையகம், பாண்டிச்சேரி.**
**நன்றி - தோழன் (மே, யூன் - 2015)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கைத் திருச்சபைச் செய்திகள்**

# அடுத்தவருக்கு முதன்மையாக இருப்பதற்கல்ல முன்னோடியாக இருக்கவே இறைவன் என்னை அழைத்துள்ளார்



## அபிஷேக விழாவில் திருமலை புதிய ஆயர்


அடுத்தவருக்கு முதன்மையாக இருப்பதற்கல்ல, முன்னோடியாக இருக்கவே இறைவன் என்னை அழைத்துள்ளார் என திருகோணமலை மறைமாவட்டத்தின் புதிய ஆயர் மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை தெரிவித்தார்.

திருகோணமலை மறை மாவட்டத்திற்குப் புதிதாக நியமனம் பெற்ற பேரருட்திரு நோயல் இம்மானுவேல் அடிகளின் ஆயர் அபிஷேக விழா கடந்த 25.07.2015 அன்று நடைபெற்றபோது அந்நிகழ்வில் நன்றிகூறி உரையாற்றியபோதே புதிய ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், 122 ஆண்டுகால வரலாறு கொண்ட திருகோணமலை மறை மாவட்டத்தினை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை இறைவன் தனக்குத் தந்திருப்பதால் அனைத்துச் சவால்களையும் ஏற்றுக்கொண்டு இன, மத, மொழி, பேதமின்றி எல்லா மக்களின் உயர்வுக்காகவும் தாம் உழைக்க விரும்புவதாகவும், இப்பணியைச் செய்ய இங்குள்ள குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் தன்னோடு ஒத்துழைப்பார்களென தான் நம்புவதாகவும் தெரிவித்தார். என்னை தனது பணிக்காக அழைத்த இயேசுவின் பாதத்தில் அமர்வதும், அவர் தரும் ஆறுதலை அனுபவிப்பதும், அவர் குரலுக்கு செவிமடுப்பதும், அவரோடு நடந்து பணி செய்வதுமே எனது கடமை என்றும் புதிய ஆயர் கூறினார்.

## பிரமாண்டமான ஏற்பாடுகளோடு நடைபெற்ற அபிசேக நிகழ்வு







திருகோணமலை மறைமாவட்டத்தின் புதிய ஆயர் அபிசேக நிகழ்வு திருகோணமலை புனித யோசப் கல்லூரி வளாகத்தில் மிகச்சிறப்பான ஏற்பாடுகளோடு நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருத்தந்தையின் பிரதிநிதி பேராயர் பியரே வன் டொற் ஆண்டகை, கொழும்புப் பேராயர் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆகியோரோடு கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் இளைப்பாறிய பேராயர்கள் பேரருட்திரு. ஒஸ்வோல்ட் கோமிஸ், பேரருட்திரு. நீக்கிலாஸ் மார்க்கஸ் பெனாண்டோ ஆகியோர் உட்பட இலங்கையின் எல்லா மறை மாவட்டங்களின் ஆயர்கள், துணை ஆயர்கள், முன்னூறுக்கும் அதிகமான குருக்கள், நூற்றுக்கணக்கான துறவிகள் மற்றும் ஆயிரக்கணக்கான மக்களும் கலந்து சிறப்பித்தார்கள். பல சமய, அரசியல், சமூகத் தலைவர்களும், பாதுகாப்புப் படையைச் சேர்ந்த உயரதிகாரிகளும் மற்றும் பல பெரியவர்களும் இந்நிகழ்வுக்குச் சிறப்பாக அழைக்கப்பட்டிருந்தார்கள்.

### பேரருட்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை புதிய ஆயரிடம் பணியை ஒப்படைத்தல்

புதிய ஆயரின் அபிசேகச் சடங்கை திருகோணமலை ஆயர் பேரருட்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகை மற்றும் காலி மறைமாவட்ட ஆயர் றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை ஆகியோரின் துணையோடு தலைமைதாங்கி நடாத்தினார். அபிஷேகச் சடங்கு நிறைவுபெற்றதும் இதுவரை திருகோணமலை மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை புதிய ஆயரைத் தாம் இதுவரை வீற்றிருந்த நாற்காலியில் அமரவைத்து, தனது தலைச்சீராவைக் கழற்றி தனது பணி நிறைவுற்றது என்பதையும் இனி நொயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களே திருகோணமலை மறை மாவட்டத்தில் ஆயராகப் பணியாற்றுவார் என்பதயும் இச்செயல் வழியாக எடுத்துரைத்தார்.


## APPLICATION FOR TRAINING OF PSYCHOLOGICAL COUNSELLORS

The applications are called for training of counselors. This is a one year, week-end (Saturday & Sunday) course that consists of 450 hours. The applicants should have the following prerequisites to apply for this course.

1. Knowledge of English as to read, write and understand.
2. Passed in Advanced Level
3. Interested in social Activities.

The applicants will have to buy a special application form from our office and submit them before the 20th of August. Only 30 applicants will be selected to follow this training.

**For further details please contact:**

**"AHAVOLI"**
**INSTITUTE OF COUNSELLING PSYCHOLOGY**
**Affiliated to National University of Ireland, Galway**
**St. Patrick's Road, Jaffna.**
**Contact No: - 021-222-2856**


## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

## திருத்தந்தை பிரான்சிஸ் ஆற்றிய உரைகளிலிருந்து



- மற்றவர்களின் தவறுகளை சகித்துக்கொள்வது நமக்கு ஏன் கடினமாக உள்ளது? நம்முடைய பாவங்களை இயேசு ஏற்றுக் கொண்டார் என்பதை நாம் மறந்துவிட்டோமா?
- அநீதியும், வன்முறைகளுமின்றி அனைத்துக் குழந்தைகளும் அன்பில் வளர உதவும் உலகைக் கட்டியெழுப்ப அனைவரும் முயல்வோம்.
- இன்றைய உலகில் அமைதியைக் கட்டியெழுப்பத் தேவையான கூறுகளாக உரையாடல், மன்னிப்பு மற்றும் ஒப்புரவு நடவடிக்கைகள் உள்ளன.
- மறைசாட்சிய மரணம் குறித்து தெளிவான சிந்தனையும், மனஉறுதியும் கொண்டிருப்பது, கிறிஸ்தவராக வாழ்வதற்கு ஓர் அடிப்படைத் தேவை.
- நாம் ஒருவர் ஒருவரைப் புரிந்துகொள்வதோ ஏற்றுக்கொள்வதோ கடினமாக இருந்தாலும், ஒருவர் ஒருவர் மீது அன்பு காட்ட அழைக்கப்பட்டுள்ளோம்.
- பல்வேறு மதத்தவர் மற்றும் இனக்குழுக்கள் மத்தியில் பல்சமய உரையாடலையும், அமைதியான நல்லிணக்க வாழ்வையும் ஊக்குவித்து, வெறுப்புணர்வையும் வன்முறையையும் மன்னிப்பாலும், அன்பாலும் மேற்கொள்ள மக்களுக்கு கற்றுக் கொடுங்கள்.
- அச்சத்தோடும், மகிழ்ச்சியின்றியும் வாழும் சமூகங்கள் நோயாளிச் சமூகங்கள், அவை கிறிஸ்தவ சமூகங்கள் அல்ல.
- இறைவன் நம்மை முதலில் சந்தித்ததை நாம் மறந்தால் செபத்தின்மீதான ஆர்வம் குறையும்.
- ஒவ்வொரு மனிதருக்கும், குறிப்பாக, வளரிளம் பருவத்தில் உள்ளோருக்கு, வழிகாட்டியாக, பயிற்சியாளராக, கல்வி கற்பிப்பவராக இருப்பவர்கள் மிகவும் அவசியமாகத் தேவை.
- நம் உள்ளத்தில் இயேசுவின் ஆட்சி எத்துணை ஆழமாய் பதிகிறதோ, அத்துணை உடன்பிறப்பு உணர்விலும், நீதியிலும், அமைதியிலும் நம் உள்ளங்கள் நிறையும்.
- அனைவருக்கும் தேவையான அளவு உணவு இவ்வுலகில் இருந்தாலும், அதை அனைவரோடும் பகிர்ந்துகொள்ளும் ஆவல் நம்மிடையே இல்லை.
- உணவை உருவாக்கும் இயற்கையைக் காப்பாற்ற செல்வந்தர்கள் என்ன முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர் என்ற கேள்வியை அவர்களிடம் எழுப்பவேண்டும்? பகிர்வு என்ற அடிப்படையில் பீடத்தைச் சுற்றிக் கூடியிருக்கும் நாம், பகிர்வு இவ்வுலகில் குறைந்து வருவதால், உடலளவிலும், மனதளவிலும் பசித்திருக்கும் மனிதர்களை நினைத்துப் பார்க்க வேண்டும்.
- அமைதியை உறுதிசெய்தல், வறியோரை, வலுவற்றோரைக் காத்தல் போன்ற நன்மை விளைவிக்கும் காரணங்களுக்காக இராணுவம் பணியாற்றும்போது, அது உன்னதப் பணியாக மாறுகிறது.
- கிறிஸ்தவர்களின் சாட்சிய வாழ்வு என்பது, நம்மிடையே இருக்கும் ஒன்றிப்பின் அடையாளமாக உள்ளது. ஏனெனில், உயிர்த்த இயேசுவை, தனியாக அல்ல, ஒரே குடும்பமாக வாழ்ந்து அதன்வழி அறிவிப்பதே ஆகும்.
- கடவுள் மௌனமாய் இருப்பது போன்ற நேரங்கள் உண்டு, சிலுவையில் அறையுண்ட இயேசுவை கூர்ந்து நோக்கினாலன்றி, கடவுளின் இந்த மௌனத்தை நாம் புரிந்துகொள்ள இயலாது.
- நேர்மையான ஒரு தொழிலில் முழு ஈடுபாட்டுடன், அர்ப்பணத்துடன் ஈடுபடும்போது அது ஒரு தனிமனிதரை மட்டும் மேன்மைப்படுத்துவதில்லை மாறாக, அவரைச் சுற்றியுள்ள சமுதாயத்தையே அது மேன்மைப்படுத்துகிறது.
- ஆபத்தில் இருப்போரைக் காப்பது, ஆபத்தை விளைவிப்போரைக் கட்டுப்படுத்துவது போன்ற செயல்களைத் துணிவுடன் ஆற்றுவோர் இருப்பதாலேயே இச்சமுதாயம் அமைதியுடன் வாழமுடிகிறது.
- நம்மை உற்றுநோக்குமாறும், நம் பாவங்களுக்காக மனம் வருந்தச் செய்யுமாறும், நம் இதயங்கள் மாற்றம் அடைய நாம் என்ன செய்யவேண்டும் என்று கூறுமாறும் இயேசுவிடம் நாம் கேட்க வேண்டும்.
- எத்தகைய பார்வையை இயேசு இன்று என்மீது செலுத்துகிறார்? இயேசு என்னை எப்படி உற்றுநோக்குகிறார்? அழைப்போடா, மன்னிப்போடா, அல்லது பணியோடா என்று நாமும் சிந்திப்போம்.
- இறைவன் எப்போதும் நமக்காகக் காத்திருக்கிறார். நம்மை எப்போதும் புரிந்துகொள்கிறார். அவர் நம்மை எப்போதும் மன்னிக்கிறார்.
- வரலாற்றில் துன்பம் நிறைந்த இக்காலகட்டத்தில், மனிதரின் தனித்துவத்தையும் மாண்பையும் மனிதரிலிருந்து நீக்கிவிடும் கருத்தியல் ஆக்கிரமிப்பிலிருந்து இறைமக்களை ஆயர்கள் பாதுகாக்க வேண்டும்.
- கருவில் வளரும் குழந்தைமுதல் வயதானவர்கள்வரை, அவர்களின் வாழ்வையும், குடிபெயர்ந்தோர், வேலையில்லாதோர், பசியில் வாடும் மக்களையும் பேணுவதைப் பொறுத்து நாகரீகமான ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி அளக்கப்படும்.
- புறக்கணிப்பு கருத்தியல் கொண்ட ஒரு சமுதாயத்தில், குழந்தைகள், வயதானவர்கள் என ஒவ்வொரு மனிதருக்கும் பணியாற்றுவதற்கு இயேசுவின் அன்பு நன்மை உந்தித் தள்ளுகின்றது.

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பண வாழ்வின் ஆண்டு

## இலங்கையில் பணியாற்றும் துறவற சபைகள்

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள துறவற சபைகள் பற்றிய விரிவான கட்டுரை இப்பகுதியில் இடம்பெறும்.

## நல்லாயன் அருட்சகோதரிகள்

(நல்லாயன் நம் அன்புநாயகியின் சபை)

**Congregation of our Lady of Charity of the Good Shepherd**

**நல்லாயன் துறவற சபையின் தனிவரம் (Charism)**

கருணைநிறை அன்பின் மூலம் நல்லாயன் இயேசுவின் சமத்துவமான பிரசன்னத்தை உலகெங்கும் எடுத்துரைப்பது, அநீதியாகத் துன்பப்படுவோர், சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டோர், பாலியல் ரீதியாகப் பாதிப்படைந்து - வாழ்க்கையில் புண்படுத்தப்பட்டு - பல்வேறு அனுபவங்களோடு வருகின்ற இளம் யுவதிகளின் உடலும், உள்ளமும் குணமடைந்து அவர்கள் முழுமையான வளர்ச்சியடையத் துணைபுரிவது.

**விருதுவாக்கு : (Motto)**

'ஒரு ஆன்மா முழு உலகைவிட மேலானது'
(புனித மேரி யுப்ரேசியா)

**எமது சின்னத்தின் கருத்து**

**சிலுவை :** எமது சபை சிலுவையிலேதான் வேரூன்றியிருக்கிறது. ஆகவே இயேசுவின் பாடுகளிலிருந்தும், சிலுவை மரணத்திலிருந்தும் விலகி எமது குறிக்கோளை நாம் அடைய முடியாது.

**ஆயனின் கோல்:** நல்லாயனின் தனிவரத்தை அடையாளமாகக் குறிப்பிடுகிறது. 'என் மந்தைகளுக்காக என் உயிரையும் கொடுப்பேன்' என்ற நல்லாயனின் வார்த்தைக்கிணங்க அவர் வழி நாம் செல்ல வேண்டும்.

**இரண்டு இதயங்கள்:** இயேசுக் கிறிஸ்துவின் இதயத்தையும் மரியாளின் இதயத்தையும் குறிக்கின்றது. அவர்களது அன்பு எமது ஆன்மீக வாழ்விற்கு உறுதுணையாக இருக்கிறது. புனித யூட்ஸ் அருளப்பரும், புனித மேரி யுப்ரேசியாவும் யேசுவின் திரு இருதயத்திலும், மரியாளின் மாசற்ற இருதயத்திலும் அதிக பக்திகொண்டு வாழ்ந்தனர். அன்பையும், பக்தியையும், புத்துயிரையும், மன்னிப்பையும் அதிகமாகப் பெற்றுக்கொண்டு வாழ்ந்தனர். இவை எம் மத்தியிலே இன்றும் ஊற்றாகச் செயற்படுகிறது.

**சபை ஆரம்பம்:** 1835ஆம் ஆண்டு

**ஸ்தாபகி:** புனித மேரி யுப்ரேசியா.

**சபைத் தலைவி:** அருட்சகோதரி பிறிஜிட் லோலர்
The Generalate,
Via Raffacllo Sardiello 20
00615, Rome, Italy.

**மாகாணத் தலைவி:** இலங்கை/ பாகிஸ்தான்: அருட்சகோதரி பிரன்சிஸ் முத்துகல.

நல்லாயன் துறவற சபை 1835ம் ஆண்டு புனித மேரி யுப்ரேசியா பெலற்றிய அருட்சகோதரியின் மூலம் பிரான்ஸ் தேசத்தில் ஆஞ்சே நகரில் ஆரம்பிக்கப்பட்டது. இச்சபை புனித யூட்ஸ் அருளப்பரால் நிறுவப்பட்ட பாதுகாப்பு இல்லமென அழைக்கப்படும், நம் அன்பு நாயகி சபையின் ஞானநெறியில் வேரூன்றி நிற்கிறது. தந்தை யூட்ஸ் அருளப்பர் பிரான்ஸ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் மேற்கொண்ட மறைபரப்புப் பயணங்களின்போது பல இளம் பெண்களினதும், வளர்ந்த பெண்களினதும் ஆன்மீக வாழ்வு சீர்குலைந்து அவர்கள் ஏனையோரால் துஸ்பிரயோகம் செய்யப்படுவதை அவதானித்தார்.

தங்கள் வாழ்க்கையை மாற்றியமைக்க விரும்பிய அப்பெண்களுக்கென அவர் 1641ம் ஆண்டில் ஓர் பாதுகாப்பு இல்லத்தை ஆரம்பித்து இந்த அன்புச்சேவையில் பங்கேற்க விரும்பிய பெண்களிடம் அதை ஒப்படைத்தார். இதுவே நல்லாயன் அருட்சகோதரிகள் சபையின் ஆரம்பம்.

அருட்சகோதரிகள் தங்கள் சபையின் சிறப்புக் குறிக்கோளுக்கு பிரமாணிக்கமாய் இருக்கவும், அவர்கள் வாழ்வில் ஏற்படும் இன்னல்கள் அவர்களை மேற்கொள்ளாதிருக்கவும், கன்னிமை ஏழ்மை, கீழ்ப்படிதல் எனும் வார்த்தைப்பாட்டையும் மக்களின் இரட்சணியத்தின்மேல் ஆர்வம் காட்ட 'அப்போஸ்தலிக்க ஆர்வம்' எனும் நான்காவது வார்த்தைப்பாட்டையும் எடுத்தனர்.

வாழ்க்கையில் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த இளம் பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் அவர்களது உடைந்த உள்ளங்களை ஆறுதல்படுத்தும்முகமாக முறைசாராக் கல்வி ஆரம்பிக்கப்பட்டது.

அக்காலத்தில் சபையின் ஒவ்வொரு இல்லங்களும் சுயமாகவும் சுதந்திரமாகவும் இயங்கிக்கொண்டிருந்தது. ஆகவே புனித மேரி யுப்ரேசியா ஆஞ்சே நகரில் தலைவியாக நியமிக்கப்பட்டு உலகெங்கும் பரவலாக இயங்கும் அப்போஸ்தலிக்க பணியை கண்காணிக்க முன்னோக்கிச் செயற்பட்டார். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய பொது ஆட்சி முறைக்கு வேண்டிய உத்தரவை திருத்தந்தையிடம் பெறுவதற்கு தேவையான சகல முயற்சிகளையும் மேற்கொண்டார். அனைத்து இடையூறுகளையும் வெற்றிகொண்டு 1835ஆம் ஆண்டு நல்லாயன் அன்பு நாயகியின் சபையை ஆரம்பித்தார்.

1868ஆம் ஆண்டு சித்திரை மாதம் அவரது மரணத்திற்குப் பின்பு பல இடையூறுகளிலும் வெற்றியடைந்து 5 கண்டங்களிலுமாக 110 இல்லங்கள் உருவாக்கப்பட்டன.

எமது சபை இரண்டு கிளைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தியான சகோதரிகள், அப்போஸ்தலிக்க சகோதரிகள்.



கொழும்பு ஆயர் ஹிலறியன் அவர்களின் அழைப்பிற்கு இணங்க இலங்கை அருட்சகோதரிகள் அனுப்பப்பட்டனர். 1869ம் ஆண்டு புனித யுப்பிரேசியாவை தொடர்ந்துவந்த சபைத்தலைவி நான்கு அருட்சகோதரிகளை இலங்கைக்கு அனுப்பிவைத்தார். நல்லாயன் சகோதரிகள் முதல் முறையாக கொட்டாஞ்சேனைக்கு வருகை தந்து அங்கே தமது மறைக்கல்வியை ஆரம்பித்தார்கள். அக்காலத்திலே மறைக்கல்வி மிகமிக அவசியமானதாகக் கருதப்பட்டது.

காலப்போக்கில் நாயக்ககந்த, கண்டி போன்ற இடங்களில் இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்த இளம் யுவதிகளுக்கும், சிறுவர்களுக்கும் பராமரிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1938ஆம் ஆண்டில் திருமணமாகாத தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஒரு இல்லம் நாயக்ககந்தையில் ஆரம்பிக்கப்பட்டது.

1957ஆம் ஆண்டு வத்திக்கான் அறிவுரைகளுக்கேற்ப, நல்லாயன் சகோதரிகளால் நடாத்தப்பட்ட புனித பிரான்சிஸ் சேவியர் சபை சகோதரிகள் நல்லாயன் சபை சகோதரிகளுடன் மறு இணக்கம் செய்யப்பட்டது. அதுவரை அவர்கள் மறைமாவட்ட ஆயர்களால் நடாத்தப்பட்டுவந்தனர். பின்னர் கொழும்பு பேராயரின் அனுமதியுடன் ஒன்றிணைந்தார்கள்.

இவர்களது பிரதான முதன்மையான பணி, கல்விப்பணியாகும். 1975ஆம் ஆண்டில் புரட்டாசி மாதம் 17ம் திகதி பாகிஸ்தானிலுள்ள முல்தான் மறைமாவட்ட ஆயர் பேட்றன்ட் என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கையிலிருந்து நான்கு அருட்சகோதரிகள் பாக்கிஸ்தானிற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். நல்லாயனின் முதல் வித்தை அங்கேயும் விதைத்தார்கள். 1976ஆம் ஆண்டு தை மாதம் 10ஆம் திகதி பற்றிமாபூர் என்னும் கிராமத்தில் இன்னுமொரு இல்லம் ஆரம்பிக்கப்பட்டது. இது முல்தான் மறைமாவட்டத்தில் அமைந்துள்ளது. இன்று இலங்கை மற்றும் பாகிஸ்தான் சகோதரிகள் நான்கு மறைமாவட்டங்களில் இணைந்து பணியாற்றி வருகின்றனர். முல்தான், லாகூர், கராச்சி குவேட்டா ஆகிய இடங்கள் குறிப்பிடத்தக்கவை.

நல்லாயனின் மறைப்பணியை உலகெங்கும் 74 நாடுகளில் எம் சகோதரிகள் பரவலாக செயற்படுத்திவருகின்றனர். இலங்கை பாகிஸ்தான் மாகாணத்தில் ஏறக்குறைய 400 சகோதரிகள் பல்வேறுபட்ட பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

**அவை பின்வருமாறு :-**

**கல்வி :-** தனியார் பாடசாலைகள், அரசாங்கப் பாடசாலைகள் பாலர் பாடசாலைகள்.

நல்வரவு இல்லம், உளவள நிறுவனம், புனரமைப்பு நிலையம்.

**திருமணமாகாத தாய்மார்களும் குழந்தைகளும் :** சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், வயோதிபர் இல்லம், வாழ்வியல் பயிற்சி, மறைக்கல்விப் பணி. பங்குப்பணி, மலையக சிறார்களுக்கான பாதுகாப்புப் பணி, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இளம் யுவதிகளுக்கான பணி, சிறைச்சாலைப் பணி, புலம் பெயர்ந்த வெளிநாட்டுப் பெண்மணிகளுக்கான பணி, கடன் வழங்கி ஊக்குவிக்கும் செயற்பாடுகள், வெளிநாட்டு மறைப்பணிகள்.

புனித மேரி யுப்ரேசியா தியான சபை சகோதரிகளையும் உருவாக்கினார். மக்தலேனா சகோதரிகள் என இவர்கள் அழைக்கப்பட்டனர். இவர்கள் அப்போஸ்தலிக்க பணியில் ஈடுபட்டுள்ள சகோதரிகளுக்கு உறுதுணையாகவும், சக்தி கொடுக்கின்ற செப ஊற்றாகவும் செயல்படுகிறார்கள். இவர்கள் மக்களோடு ஒன்றாகச் செபிக்கிறார்கள். தேவையானவர்களுக்கு ஆன்மீக வழிகாட்டியாகவும் விளங்குகிறார்கள். இன்று 373 அர்ப்பணிக்கப்பட்ட தியான சகோதரிகள் இலங்கையிலும் இன்னும் உலகில் பல பாகங்களிலும் செயற்படுகின்றனர்.

இன்னும் எமது நல்லாயன் பொதுநிலையினர் குழுவும் சிறப்பாகப் பணி ஆற்றுகின்றனர். இவர்கள் மூலம் எமக்கு பலமும் ஒத்துழைப்பும் நிறையக் கிட்டுவதாக நாம் உணர்கிறோம்.

இன்னுமொரு மகிழ்ச்சியான சம்பவம், கடந்த வருடம் ஆனி மாதம் 27ம் திகதி 2014ல் இடம்பெற்றது. அதாவது எம் அன்பு நாயகியின் சபையானது நல்லாயன் சகோதரிகளுடன் மறு இணக்கம் செய்யப்பட்டது. அன்று 358 சகோதரிகள் இணைந்தனர். 1853ம் ஆண்டு உருவான பொது ஆட்சி முறையின் பின்னர், மீண்டும் உரோமையிலிருந்து அனுமதிபெற்று இப்பொழுது ஒன்றாக இருபாலாரும் இணைந்து செயற்படுகின்றனர். ஆகவே எமது குழு எண்ணிக்கை 3,374 ஆகும்.

## எம் கோத்திரத்தின் குல விளக்கே, மலைமேலேற்றிய தீபமே ஓங்கி ஒளிர்க!

மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையின் சகோதரி முறையான செபமாலைக் கன்னியர்களின் முன்னாள் தலைவி அருட்சகோதரி மேரி ஜோண் பப்ரிஸ்ற் (செ.க.) அவர்கள் மன்னார் ஆயரின் பவள விழா மலருக்கு அனுப்பிய ஆக்கம் இது. ஆயருடனான தனது சிறு பராயத்து அனுபவங்களை அவர் இங்கே பகிர்ந்துகொள்கிறார்.





தன் 75வது அகவையின் பவள விழாவைக் காண அருள்பாலித்த இறைத்தந்தைக்கு நான் முதற்கண் நன்றி கூறுகின்றேன். இவருக்கு என் அன்பும், சகோதர பாசமும் நிறைந்த நல்வாழ்த்துக்களைக் கூறுவதுடன் இறை ஆசீர்வாதங்களை அபரிதமாய் பொழிய வேண்டுகின்றேன்.

இந்தப் பவளவிழா நாயகன் வேறு யாருமல்ல, எனது பெரிய அன்னையின் புதல்வன், எனது அன்னையின் மூத்த சகோதரியான திருமதி. இராயப்பு அந்தோனியாப்பிள்ளையின் 4வது தவப்புதல்வன், யோசேப் ஆண்டகை!

பசுந்தீவு என அழைக்கப்படும் நெடுந்தீவில் இவரது வீடு எமது வீட்டிற்குச் சிறிது தொலைவில்தான் இருந்தது. நாம் சிறு பிள்ளைகளாக இருந்தபோது இங்கு செல்வதுண்டு. பின் அவர்களின் குடும்பம் செட்டிகுளம் என்ற இடத்தில் குடியேறியதால் பெரியம்மா குடும்பத்துடன் அதிக தொடர்பின்றி இருந்தோம். ஆயினும் நெடுந்தீவு வித்தியாலயத்தில் கல்விகற்றுக்கொண்டிருந்த யோசேப் அண்ணரை எமது வீட்டில் தங்கியிருந்து கல்விகற்க அவரின் பெற்றோர் விட்டுச்சென்றனர்.

எங்கள் வீட்டில் இவர் தங்கிருந்த காலம் எம் எல்லோருக்கும் பெருமகிழ்வின் - பேருதவியின் காலமாக இருந்தது. எனது அண்ணனுடன் சேர்ந்து பாடசாலை செல்வார். என் அன்னை இவரை மிகவும் அன்புடனும், கரிசனையுடனும் கவனித்துவந்தார். இவரும் சின்னம்மா என்று பாசத்துடன் அழைப்பார். அவருடைய அன்பு, பொறுமை, நல்லொழுக்கம், இறைபக்தி அனைவரையும் ஏற்று அனுசரித்துச் செல்லும் மனநிலை போன்ற பண்புகள் எமக்கு மிகவும் முன்மாதிரியாக இருந்தது. இவரின் முன்மாதிரியைப் பின்பற்றுமாறு எம் அன்னை எமக்கு அறிவுரை வழங்குவார். எனது மூத்த சகோதரன் மிகவும் குழப்படிக்காரனாக இருந்தவர். யேசேப் அண்ணருடன் சேர்ந்து படிக்கவும் நல்ல பண்புகளைக் கற்று நல்லவராக மாறவும் முடிந்தது.

அதிகாலையில் நாம் எழுந்திருக்குமுன்பே இவர் எழுந்து முழந்தாளில் இருந்து செபம் சொல்வதையும், பின் படிப்பில் ஈடுபடுவதையும் எம் அன்னை கண்டிருக்கிறார். மாலையில் வீடுவந்தபின் நாம் அனைவரும் சேர்ந்து விளையாடியபின் குளித்துவிட்டுப் பாடம் படிப்போம். தெரியாத பாடங்களை மிகவும் அன்புடனும், கரிசனையுடனும், பொறுமையுடனும் கற்றுத்தருவார். திருந்தாதி அடித்ததும் செபமாலை செபிக்க அனைவரும் ஒன்றுகூடி செபித்து மரியன்னைக்குப் பாட்டுக்கள் பாடி மகிழ்ச்சி அடைவோம். அந்த நாட்களை திரும்ப நினைத்து மகிழ்ச்சி அடைவதுடன், அந்த நாட்களின் நினைவுகள் பசுமரத்து ஆணிபோல் நன்கு பதிந்துள்ளது.

எனது பெற்றோர் இவரது இளமைக்கால வாழ்வைப் பார்த்து அவர் ஒரு சாதாரணமானவர் அல்ல எதிர்காலத்தில் ஒரு பெரிய இடத்தை வகிப்பார் எனப் பேசிக்கொள்வதை நான் கேட்டிருக்கின்றேன். தீவகத்தில் தன் படிப்பை முடித்தபின் தன் பெற்றோருடன் போய்ச் சேர்ந்துகொண்டார்.

பாடசாலை லீவு நாட்களில் நெடுந்தீவுக்கு வருவதென்றால் பெரிய மகிழ்ச்சிதான். இந்த நாட்களில் எமது குடும்பமும் முன்னிருந்த இடத்தைவிட்டு வேறு ஒரு இடத்தில் குடியேறியது. அந்த இடம் மிகவும் தொலைவில் இருந்தது. அங்கு எந்த ஒரு வாகன வசதிகளும் இல்லாதபடியால் நடந்தே செல்லவேண்டும். ஆண்கள் துவிச்சக்கர வண்டியில் பயணிப்பர். இப்படி லீவுக்கு வந்து நிற்கும் நாட்களில் எமது யோசேப் அண்ணர் எம்மையும், என் சகோதரங்களையும் தன் சைக்கிளில் ஏற்றிச்செல்வார். நாங்கள் புதிதாக குடியேறிய இடம் காட்டுப் பகுதி. எமது வீட்டைத்தாண்டி தண்ணீர் குடிக்க குதிரைகள் கூட்டம் கூட்டமாய் மாலைநேரத்தில் வரும். இது ஒரு கண்கொள்ளாக் காட்சி. இதைப் பார்க்க எமது யோசேப் அண்ணருக்கு அதிகம் ஆவல். எனது அண்ணருடன் சேர்ந்து குதிரைகளைப் பின்தொடர்ந்து அவற்றின் அணிவகுப்புக்களைப் பார்க்கவும் அத்தனை குதிரைகளும் ஒரு தலைமைக்குதிரையின் வழிநடத்தலில் செயற்படுவதையும் பார்த்துவிட்டு வந்து எமக்கு கதைகதையாகக் கூறுவார். கேட்க மிகவும் ஆவலாக இருக்கும். லீவு முடிந்தால் எல்லோருக்கும் கவலை, பிரிவுத்துயர். அடுத்த லீவுக்காகக் காத்திருக்கும் நிலை.

இதன்பின் எமது யோசேப் அண்ணர் குருமடம் சேர்ந்தபின் எந்தவித தொடர்பும் அற்றுப்போயிருந்தது. அவருக்காக இறைவனை வேண்டிக்கொள்வது ஒன்றே நான் செய்யக்கூடியதாக இருந்தது.

நானும் துறவறம் பூணுவதற்கு என் அருமை அண்ணரின் முன்மாதிரியான வாழ்வும் அவருடைய நற்பண்புகளும் எனக்கு உந்துசக்திகளாக இருந்தன என்று நான் நம்புகிறேன்.


இவர் உடல், உள, ஆன்மீக நலன்களுடன் நீடிய ஆயுள்பெற்று நலமே வாழ இறைத்தந்தையை வேண்டி ஆசீர்கூறி நிற்கின்றேன்.

**அன்புத் தங்கை - அருட்சகோகதரி மேரி ஜோண் பப்ரிஸ்ற்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

# பத்தாயிரத்திற்கும் அதிகமான பீடச்சிறாரைச் சந்தித்த திருத்தந்தை!



பீடச்சிறார் என்ற முறையில் இயேசுவுக்கு அருகில் இருக்கும் வாய்ப்புப் பெற்றுள்ள நீங்கள் அயலவருக்கும் நெருக்கமாக வாழ அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று திருத்தந்தை பிரான்சிஸ் பீடச் சிறாரிடம் கூறினார்.

உலகின் பல நாடுகளிலிருந்து உரோம் நகருக்குத் திருப்பயணம் மேற்கொண்டு வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த 10,000த்திற்கும் அதிகமான பீடச்சிறாரை, ஆகஸ்ட் 4 அன்று சந்தித்த திருத்தந்தை, அவர்களுக்கு வழங்கிய வாழ்த்துரையில் இவ்வாறு கூறினார். கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது உரோம் நகரில் கூடியிருந்த சிறார்களைப் பாராட்டிய திருத்தந்தை, அயலவரோடு மேற்கொள்ளும் வாழ்வுப் பயணத்தில், உயர்ந்த இலக்குகளை நிர்ணயித்து அவற்றைப் பின்பற்றும் சக்தியை சிறார்கள் பெறவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இறைவாக்கினர் எசாயாவை அழைத்தபோது, இறைவன் முதல் முயற்சிகளை மேற்கொண்டது எசாயாவை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது என்று கூறிய திருத்தந்தை, அந்த அழைப்பை ஏற்ற எசாயாவின் வாழ்வு முற்றிலும் மாறியது என்பதைச் சுட்டிக்காட்டினார். நெருங்கமுடியாத ஓர் உயர்ந்த அரியணையில் இருந்தபடி இயேசு உங்களைச் சந்திப்பவர் அல்ல, மாறாக உங்களுடன் முற்றிலும் கலந்துவிடும் வகையில், அப்ப இரச வடிவில் வருகிறார் என்று திருத்தந்தை எடுத்துரைத்தார்.
இறைவனின் பீடத்தை நெருங்கி, அவரது வார்த்தையாலும், உடலாலும் நிறைவடையும் பீடச்சிறார், மற்றவர்களை நெருங்கி, அவர்களுக்கு ஆண்டவரை ஒரு கொடையாக அளிக்கும் ஆர்வத்தைப் பெறவேண்டும் என்று சிறார்களைக் கேட்டுக் கொண்டார்.

## பிலிப்பைன்ஸ் அருட்சகோதரிக்கு மனித உரிமைகளுக்கான விருது




ஜேர்மனியில் வருடாவருடம் வழங்கப்படும் மனித உரிமைகளுக்கான உயர் விருது இவ்வருடம் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த பெனடிக்ரைன் சபை அருட்சகோதரி ஸ்ரெலா மருத்தீனாவுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் தனது நாட்டில் மிதிவெடி நடவடிக்கைகளை எதிர்த்து செயற்பட்டு ஏழை மக்களின் அமைதியான வாழ்வுக்காக உழைத்ததை அங்கீகரித்தே இவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

## ஐ. எஸ். அரசின் கட்டுப்பாட்டுப் பகுதியில் 80 இலட்சம் பேர் பயத்தில் வாழ்கின்றனர்

சிரியா மற்றும் ஈராக்கில் இடம்பெறும் ஐ. எஸ். இஸ்லாமிய அரசின் திட்டமிட்ட கடும் மனித உரிமை மீறல்களால் ஏறக்குறைய எண்பது இலட்சம் மக்கள் சொந்த இடங்களைவிட்டுக் கட்டாயமாக வெளியேற அல்லது மரணத்தை எதிர்கொள்ளும் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றனர் என்று ஐ. நா. வல்லுனர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த உரிமை மீறல்கள் இனப்படுகொலைகளுக்கும் மனித சமுதாயத்திற்கெதிரான குற்றங்களுக்கு இட்டுச்செல்லும் என்றுரைத்த ஐ. நா. வல்லுனர் பென் எமர்சன் (Ben Emmerson) அவர்கள், ஐ. எஸ். அரசின் வன்செயல்கள் போர்க்குற்றங்களாகவும் அப்பாவிக் குடிமக்கள்மீது பரவலான தாக்குதலை நடத்தியதாகவும் கருதப்படக்கூடும் என்று எச்சரித்துள்ளார்.

சிரியா மற்றும் ஈராக்கில் ஐ. எஸ். அரசின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழும் ஏறக்குறைய 80 இலட்சம் பேர் கற்பனைக்கெட்டாத பயச்சூழலில் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர் என்று மனித உரிமைகளை ஊக்குவித்தல் குறித்த ஐ. நா. சிறப்புத் தொடர்பாளர் எம்மர்சன் அவர்கள் தெரிவித்தார்.

எட்டு வயதுச் சிறார்கூட இராணுவப் பயிற்சியளிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றனர் என்றுரைத்த அவர், இச்சிறார் பிறரின் தலைகளை வெட்டுவதை காணொளிகளில் ஐ. எஸ். அரசு வெளியிடுவதையும் குறிப்பிட்டார்.

## சீனாவில் வத்திக்கானின் அனுமதியோடு ஆயர் நியமனம்

திருத்தந்தை பிரான்சிஸ் திருத்தந்தையாக பொறுப்பேற்ற பின்னர் முதல் முறையாக சீனாவில் ஒரு புதிய ஆயர் வத்திக்கானின் அங்கீகாரத்தோடு நியமனம் பெற்று அபிஷேகம் செய்யப்பட்டுள்ளார். சீனாவிலுள்ள ஜிக்ஸியான் மறைமாவட்ட ஆயராக பேரருட்திரு யோசப்சாங் ஜிங்லின் அவர்களே புதிய ஆயராக நியமனம் பெற்றவராவார்.

1949ல் சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்னர் சீன அரசுக்கும் வத்திக்கானுக்குமிடையே இராஜதந்திர உறவுகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இப்பாதிப்பின் முக்கிய விளைவுகளில் ஒன்றாக அந்நாட்டின் கத்தோலிக்க ஆயர்களை சீன அரசே வத்திக்கானின் அங்கீகாரமின்றி தன்னிச்சையாக நியமித்து வருகிறது. ஏறக்குறைய ஒரு கோடிக் கத்தோலிக்க திருச்சபை சீன அரசின் கட்டுப்பாட்டிலுள்ள "அங்கீகரிக்கப்பட்ட திருச்சபை" என்றும் வத்திக்கானுக்கும் திருத்தந்தைக்கும் பிரமாணிக்கமான "பாதாளத் திருச்சபை" என்றும் இரு பிரிவாகப் பிளவுபட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## சீனாவில் சிலுவைகள் அகற்றப்படுவதை எதிர்த்து 90 வயது ஆயர் போராட்டம்

சீனாவில் செஜியாங் (Zhejiang) மாநிலத்தில் சிலுவைகள் மற்றும் ஆலயங்கள் தகர்க்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, அம்மாநிலத்தின் வென்சொகோ (Wenzhou) மறைமாவட்ட 90 வயது ஆயர் வின்சன்ற் சாகு வெய்வாங் (Vincent Zhu Weifang) மற்றும் அவருடன் சேர்ந்து 26 அருள்பணியாளர்கள் வென்சொகோ நகர அரசு கட்டடத்திற்கு முன்பாகப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

இவர்களைக் காவல்துறை கலைக்க முயற்சித்தபோது, இறை இரக்கச் செபமாலையை செபித்துக்கொண்டிருந்தனர் என்று ஆசியச் செய்தி நிறுவனம் கூறியது. "விசுவாச மாண்புக்குப் பாதுகாப்பு: சிலுவைகள் அழிக்கப்படுவதற்கு எதிர்ப்பு" என்ற வார்த்தைகள் எழுதப்பட்ட அட்டைகளை ஏந்திக்கொண்டு இப்போராட்டத்தை இவர்கள் நடத்தினர்.

இந்த மாநில அரசின் இந்நடவடிக்கையால் ஏற்கனவே 400க்கும் மேற்பட்ட கட்டடங்கள் பாதிக்கப்பட்டுள்ளவேளை, இதை எதிர்த்து கடந்த ஆண்டிலும் அறிக்கை ஒன்றை ஆயர் சோ வெளியிட்டார். இதேவேளை, ஆகஸ்ட் 31ம் தேதிக்குள் அனைத்து ஆலயங்களையும் அழிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

## அனைத்துலக இளம் துறவிகள் மாநாடு

"உலகை விழித்தெழச் செய்யுங்கள்" என்ற தலைப்பில் கத்தோலிக்க திரு அவையில் சிறப்பிக்கப்பட்டுவரும் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டின் ஒரு கட்டமாக, வருகிற செப்ரம்பர் 15ம் தேதி முதல் 19ம் தேதி வரை இளம் துறவிகளுக்கு அனைத்துலக மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

நற்செய்தி, இறைவாக்கு, நம்பிக்கை ஆகிய மூன்று கூறுகளை மையமாக வைத்து உரோம் நகரில் இந்த அனைத்துலக இளம் துறவிகள் மாநாடு நடைபெறும். துறவு சபைகளில் முதல் வார்த்தைப்பாடு கொடுத்து பத்து ஆண்டுகள் நிறைவடையும் அனைத்து இளம் துறவிகளும் இம்மாநாட்டில் பங்குகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தங்களின் துறவு வாழ்வின் மேன்மையைக் கொண்டாடி அதற்குச் சான்றுபகரவும், அர்ப்பண வாழ்வுக்கு அடிப்படையான விவிலிய, இறையியல் மற்றும் திரு அவைக் கூறுகள் பற்றிச் சிந்திக்கவும் இம்மாநாடு உதவும். காலை நேரங்களில் வத்திக்கான் ஆறாம் பவுல் அரங்கத்தில் உரைகள் ஆற்றப்படும். பிற்பகலில் மொழி வாரியான குழுக்களில் பகிர்வுகள் இடம்பெறும். செப்டம்பர் 15ம் தேதி இரவு 8.30 மணிக்கு வத்திக்கான் வளாகத்திலும், 19ம் தேதி முற்பகல் 11.30 மணிக்கு வத்திக்கான் பசிலிக்காவிலும் நடைபெறும் வழிபாடுகளில் அனைவரும் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# புனிதர்களின் பாதையில்

## புனித சிப்ரியன்

*ஆயர், மறைவல்லுநர்*

*(கி.பி. 1221 - 1274)*




மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

இவர் கி.பி. 3ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆபிரிக்கத் திருச்சபையின் வைரத் தூண் என்றால் மிகையாகாது. 56 வயதில் மனந்திரும்பும்முன் ஏராளமான சொத்து இவருக்கு இருந்தது. இவற்றை எல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டதோடு, கற்பென்னும் வார்த்தைப்பாட்டையும் இவர் எடுத்துக்கொண்டது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. விரைவில் குருத்துவ நிலைக்கு உயர்த்தப்பட்டு பொதுநிலையினரின் விருப்பத்தைத் தட்டமுடியாமல் கார்த்தேஜ் நகர் ஆயராக உயர்த்தப்பட்டார். ஆபிரிக்காவில் இந்நகரம்தான் திருச்சபையின் தலைமைப் பீடம்.

இந்நிலையில் டீசியன் மன்னன் கிறிஸ்தவர்களை வதைத்துக் கொல்லும் முயற்சியில் இறங்கிவிட்டான். கோழைத்தனமான கிறிஸ்தவர்கள் சிலர் விசுவாசத்தை மறுதலித்தனர். கிறிஸ்தவர்களை உறுதிப்படுத்தும் முயற்சியில் முழுவீச்சில் இறங்கினார் சிப்ரியன். பிற சமயத்தவர் வெகுண்டெழுந்து, "சிப்ரியனைச் சிங்கங்களுக்கு இரையாக்கு" என்று முழுங்கினர். சிப்ரியன் தலைமறைவாகிவிட்டார். இதைக் கோழைத்தனம் என்று தவறாக எடைபோட்டுவிட்டனர் ஆபிரிக்க, உரோமைத் திருச்சபைத் தலைவர்கள்! தாம் செய்தது திருச்சபையின் பொதுநலனை முன்னிட்டுத்தான் என்று அவர் மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்தினார்.

இவர் மறைவாயிருந்தவேளை இவரின் ஆயர் பதவி குறித்து சர்ச்சை எழுப்பிக்கொண்டேயிருந்த நோவெற்றஸ், மறையை மறுதலித்தவர்களை எந்தவித எச்சரிக்கையோ கழுவாயோ இன்றி மீண்டும் சேர்த்துக்கொண்டு வந்தவிதம் சிப்ரியனுக்கு ஆத்திரத்தை மூட்டியது. இவரும் இவரோடு சேர்ந்தவர்களும் கார்த்தேஜில கூடிய ஆயர் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி நொவேற்றசைத் திருச்சபைக்குப் புறம்பாக்கினர். இந்நிலையில் நொவேற்றஸ் உரோமைக்கு ஓடிப்போய் அங்கேயும் கிளர்ச்சி செய்தார். இதற்கு வசதியாக நோவேஷியன் என்பவர் தான்தோன்றித்தனமாகத் தானே பாப்பு என்று அறிவித்தார்.

இச்சூழலில் மிக விவேகமாக ஆயர் சிப்ரியன் நடந்து கொண்டவிதம், இன்றுவரை திருச்சபையின் ஆளுமைக்குக் கலங்கரை விளக்காக அமைகிறது. சிலைகளுக்குப் பலி செலுத்தி விசுவாசத்தை மறுதலித்தவர்கள், இறப்புநேரத்தில் மட்டுமே திருவிருந்தில் பங்குபெறலாம் என்றும் அத்தகைய பலி செலுத்த விரும்பியவர்கள் மீண்டும் திருச்சபையில் சேரவிரும்பினால், சில கழுவாய் முயற்சிகள் செய்த பின்னர் சேர்க்கப்படலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டது. இந்த நடுநிலையான முடிவு அன்றும் இன்றும் பாராட்டுப்பெற்றுள்ளது. ஆபிரிக்கத் திருச்சபையின் இத்தகைய நடுநிலை உரோமைத் தலைமைப்பீடத்தின் ஒப்புதலுடன் பறைசாற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்தத் தீர்மானம் கார்தேஜில் கி.பி. 251ல் கூடிய ஆயர் பேரவையால் ஒருமனதாக எடுக்கப்பட்டது.

கி.பி. 252 முதல் 254 வரை கார்த்தேஜ் நகரிலும் சுற்றுப்புறத்திலும் அச்சமூட்டும் பிளேக் நோய் பல உயிர்களைப் பலியாக்கியது. சிப்ரியன் எல்லாக் கிறிஸ்தவர்களையும் ஊக்குவித்து, தொற்றுநோயாளிகளுக்கு முழுவீச்சில் தொண்டுசெய்ய அழைப்புவிடுத்து வெற்றிகண்டார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள்.....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 45

## போதையோடு போகிறது பொழுது!

### *சாண் ஏற முளம் சறுக்கும் நிலை!*

முல்லா வேலைமுடிந்து வீடு திரும்புகின்ற வழியில் ஒரு மதுபானச்சாலை இருந்தது. கொஞ்சக்காலமாக கொஞ்சம் கொஞ்சமாக குடிக்கப் பழகிய முல்லா நாளடைவில் நன்றாகவே குடிக்கத் தொடங்கினார். குடிப்பதால் ஏற்படும் தீமைகளை எடுத்துக்கூறியபோது குடிப்பதை முற்றாக விட்டுவிடவேண்டும் எனத் தீர்மானித்தார். குறிப்பிட்ட அந்த நாளில் குடிப்பதில்லை என்ற முடிவுக்கு முல்லா வந்தாலும் வழியிலுள்ள அம்மதுபானசாலையைக் கடந்துசெல்வது முல்லாவுக்கு மிகத்துன்பமான - கஸ்ரமான காரியமாக இருந்தது. காரணம் அவ்விடத்தைக் கடக்கின்றபோது மதுவின் நெடி முல்லாவின் மூக்கைத் துளைக்கும்! இருப்பினும் ஒருவாறு மதுக்கடையை வெற்றிகரமாகக் கடந்து ஒரு கிலோமீற்றர் வரை சென்ற முல்லா தன் முயற்சியின் வெற்றியைக் கொண்டாடவேண்டும் எனத் தன் மனதுக்குள் நினைத்துக்கொண்டார்.

எவ்வாறு கொண்டாடலாம்? என யோசித்துக்கொண்டு நடந்த முல்லா திடீரெனத் திரும்பி மதுபானசாலைக்கு நேரடியாக வந்தார். ஒரு போத்தல் சாராயம் தருமாறு கேட்டார். மது விற்பவனோ, "முல்லா, வழமையாக அரைப்போத்தல் சாராயம் குடிப்பீர்கள். அதுவே உங்களுக்கு அதிகமானது! இன்று ஒரு போத்தல் கேட்கிறீர்களே!" என வினவியபோது, "உனது மதுக்கடையைக் கடந்து செல்கின்றபோது குடிப்பதில்லை எனத் தீர்க்கமான முடிவு எடுத்திருந்தேன். அதனை இன்று வெற்றிகரமாக செய்தும் முடித்தேன்! அதனைச் சிறப்பாகக் கொண்டாடவேண்டும் அல்லவா! அதனால்தான் இன்றைக்கு ஒரு போத்தல்!" என்றார் முல்லா!

### *கஞ்சாவின் ஆதிக்கம்*

கடந்த இரண்டு மூன்று மாதங்களாக கஞ்சா கடத்தலைப் பற்றிய செய்திகளை ஊடகங்களில் காணாத நாளே இல்லை என்று சொல்கின்ற அளவிற்கு வடபுலத்து நிலமை மாறியிருக்கிறது. கஞ்சாக் கடத்தல் ஒரு பக்கம், கஞ்சாக் கைது மறு பக்கம் தொடர்ந்தவண்ணமாகவே இருக்கின்றன. ஜனாதிபதி உட்பட, வடமாகாண முதலமைச்சர், வடமாகாண ஆளுநர், நீதிபதிகள் எனப் பல திறத்தாரும் இச்சமூகத் தீமையைப்பற்றித் தங்கள் கரிசனையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். அவ்வளவிற்கு போதைப்பொருளின் ஆதிக்கம் வடபுலத்தில் என்றுமில்லாதவாறு அதிகரித்திருப்பது தெரிகிறது.

### *12 ஆண்டுகளுக்கு முன்!*

போதைப்பொருள் பாவனையில் சிக்கிச் சீரழிந்த குடும்பங்களின் கண்ணீர் கதைகளையும் அதனால் ஏற்படும் மிகப் பயங்கரமான பாதிப்புக்களையும் அனைவரும் அறியவேண்டும் என்பதற்காகவும் ஏனையவர்கள் இத்தீமையில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்குடனும் மீண்டும் ஒரு விளக்க ÷ விபரணக் கட்டுரையை காலத்தின் அவசிய அவசரத்தேவை கருதி மீண்டும் எழுத விளைகிறேன். காரணம் போதைப்பொருள் பாவனையில் குடும்பங்கள் சின்னாபின்னப்பட்டு சீரழிந்துபோகின்ற நிலையினை வெவ்வேறு பணிகளுக்காக நாட்டின் வெவ்வேறு இடங்களுக்குச் சென்றுவருகின்றபோது பார்த்திருக்கிறேன். இப்பழக்கத்திற்கு உள்ளான பலரை நேரடியாகச் சந்தித்திருக்கிறேன்.

ஆகவேதான் இப்போதைப்பொருள் அடிமைத்தனத்திற்குள் சிக்கித்தவிக்கும் சகோதரங்களின் குரலாக நின்றுகொண்டு அவர்களின் அன்பான 02 வேண்டுகோள்களை முன்வைத்து பாதிப்புற்றவர்களின் சில அனுபவங்களை விபரிப்பதன் வழியாக போதைப்பொருள் பாவனையை எப்படித் தவிர்க்கலாம் - தடுத்து நிறுத்தலாம் என்பதைப் பற்றிச் சிந்திக்க விழைகிறேன்.

போதைப்பொருள் பாவனையாளர்கள்; 01) "மாற்று வழியைக் காட்டுங்கள், எங்களுக்குப் புனர்வாழ்வு - புதுவாழ்வு தாருங்கள்!" என்று அவர்கள் தங்கள் சமூகத்திடம் இரந்து கேட்கிறார்கள். 02) "ஐயகோ! போதை என்ற சாத்தானை ÷ சமூக விரோதியை எம் சமூகத்தில் ஊடுருவ விடாதீர்கள், விழிப்பாயிருங்கள்!" என பாதிக்கப்பட்ட போதைப்பொருள் பாவனையாளர்களும் அதனால் பல்வேறுபட்டு துன்பங்களை அனுபவிக்கும் குடும்பத்தவர்களும் எச்சரிக்கை செய்கிறார்கள்.

### *போதையா, அது என்ன?*

போதை என்றால் ஒரு மயக்க நிலை/ அடிமை நிலை/ பழகிப்போன பழக்கம்/ என்று சாதாரணமாக விளங்கிக்கொள்ளலாம். உளவியலாளர்களின் கருத்துப்படி போதை என்பது மனிதர் தமது தற்போதைய உணர்வுகளை மறந்து, மறுத்து, மறைத்து தாம் விரும்பும் உணர்ச்சிநிலைக்கு உடனடியாகச் செல்ல விளையும் ஒரு மனநிலை என்கிறார்கள். போதைப்பொருளாகப் பல பொருட்களைப் பயன்படுத்துகிறார்கள். அவற்றில் 1). மதுவும் மதுபானங்களும் (சாராயம், கசிப்பு, விஸ்கி, பிராண்டி, பியர் போன்றவற்றைக் குறிப்பிடலாம்) 2). புகையிலையும் புகையிலைப் பொருள்களும் (கஞ்சா, புகையிலை, சுருட்டு, சிகிரெட், பீடி, மூக்குத்தூள் அல்லது மூக்குப்பொடி போன்றவற்றைக் குறிப்பிடலாம்) 3). மருத்துவப் பொருட்கள் (மயக்கமூட்டிகள் - Narcotics), மந்தமாக்கிகள் (Depressant), தூண்டிகள் (Stimulants) கொக்கெயின் போன்றவை. 4). கெறோயின், அபின், கஞ்சா போன்றவை வேறொரு வகையான பாரதூரமான போதைப்பொருள்களாகும்.



மேற்கூறப்பட்ட நான்கு வகையான போதைப்பொருட்களில் கஞ்சா, அபின், கெறோயின் போன்ற போதைப்பொருள்களால் ஏற்படும் மிகப் பாரதூரமான பாதிப்புக்கள் பற்றியே இங்கு கவனம் செலுத்தவேண்டி உள்ளது.

### *போதையின் இன்றைய யதார்த்த நிலை*

உலகில் போதைப்பொருள் பாவனையில் சிக்கியுள்ள நாடுகளில் 80 வீதமான நாடுகள் வளர்ச்சியடைந்துவரும் வரிசையில் உள்ளவை என்று சொல்லப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை போதைப்பொருள் பாவனையாளர்கள் 1980இல் 580 பேர் எனக் கணக்கெடுப்புக் காட்டியது. ஆனால் 2013இல் 65,938 பேர் என ஓர் கணக்கெடுப்புக் கூறினாலும் இத்தொகையைவிட மிக அதிகமானவர்கள் பாவனையாளர்களாக உள்ளார்கள் என்றே அதிகாரபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்சொன்ன எண்ணிக்கையானது இலட்சங்களைத் தாண்டிவிட்ட மதுப்பாவனையாளர்களை உள்ளடக்கவில்லை என்பது இங்கு நோக்கத்தக்கது. மேலும், 2009 - 2013ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் போதைப்பொருளின் பாவனையும் விற்பனையும் மிக அதிகரித்திருக்கிறது என்பதை புள்ளிவிபரங்களில் இருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.

கஞ்சா, கெரோயின், அபின் என்ற போதைப்பொருளின் தாக்கம் எமது நாட்டையும் குறிப்பாக எமது பிரதேசங்களையும் மிகப்பயங்கரமாகப் பாதிக்கின்ற உயிர்க்கொல்லியாகவும் ஏனைய சமூக விரோத செயல்களுக்குக் காரணமான ஒன்றாகவும் விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது.

2003ஆம் ஆண்டு போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தில் தொலைக்காட்சியில் ஒரு நேர்காணலைக் கொடுத்திருந்த போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தவேளையில் இலங்கையில் சுமார் ஒரு இலட்சம் பேர் போதைப்பொருள் பாவனையாளர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்ட அவர், நாள் ஒன்றுக்கு சுமார் 50 இலட்சம் ரூபாய் அநியாயமாக போதைப்பொருளுக்காக வீண்விரையம் செய்யப்படுகின்றது என்ற அதிர்ச்சிதரும் தகவலையும் தெரிவித்திருந்தார். இவ்வதிகாரியின் தகவலில் போதைப்பொருள் பாவனை என்பதில் மதுப்பாவனையும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது கருத்திற்கொள்ளப்படவேண்டியது. போதைப்பொருளுக்காக நாட்டின் தேசிய வருமானத்தில் மிகப்பெரிய தொகையொன்று அநியாயமாகச் செலவிடப்படுகிறது என்பது வேதனைக்குரிய ஒன்றாகும்.

### *இளையோர் குறிவைப்பு!*

இதில் வேதனைக்கும் பரிதாபத்திற்கும் உரிய விடயம் என்னவென்றால் இப்போதைப் பொருள்பற்றி அறிந்திராத அப்பாவி மக்களில் பலர் மிகக்குறுகிய காலத்திற்குள் போதைப்பொருள் பாவனையாளர்களாகி போதைக்கு அடிமையாகிப்போகும் நிலையில் உள்ளனர்! தனிப்பட்ட நபர்கள் மட்டுமல்ல சில பிரதேசங்களும் கிராமங்களும் இதற்கு இரையாகிப்போகும் மிக மோசமான ÷ துர்ப்பாக்கிய - பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது மிகவும் வேதனைக்குரியது.

வடபுலத்தில் இளையோரைக் குறிவைத்து போதைப்பொருள் விற்பனை செய்யப்படுகின்றது என்பது பலராலும் சுட்டிக்காட்டப்பட்ட விடயமாகும். இளையோரைக் குறிவைப்பதன் வழியாக அவர்களை இலகுவில் இதற்குள் விழச்செய்து விடலாம் என்பதும், கல்வி கலாச்சார பண்பாட்டு விழுமியங்களில் இருந்து அவர்களை விலக்கிவிடலாம் என்பதும், நாளடைவில் இவ்விளையோர்களே நீண்டநாள் வாடிக்கையாளர்களாக மாறிவிடுவார்கள் என்பதும் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கும் சதி என்பது இங்கு தெளிவாகின்றது. எனவேதான் இச்சதி முயற்சியில் சிக்கிக்கொள்ளாமல் இளையவர்கள் - மாணவர்கள் தங்களைக் காத்துக்கொள்ளவேண்டி இருக்கிறது. பெற்றோர் தங்கள் பிள்ளைகள் மட்டில் விழிப்பாக இருந்து கரிசனையோடு அவர்களைக் கண்காணிப்பது மிகமிக அவசியமாகிறது.

### *எப்படி அடிமையாகிறார்கள்?*

1. பொதுவாக, சகபாடிகள்/ நண்பர்கள் ஊடாக ஒரிரு தடவைகள் போதைப்பொருள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இதனைத் தாங்களாகவே நாடிச்செல்லும் உந்துதலை கஞ்சா, கெறோயின் போன்ற போதைப்பொருள்கள் அளிப்பதாக பாவனையாளர்கள் சொல்லுகிறார்கள்.

2. பின்னர் நண்பர்கள் பரிமாறாவிட்டாலும் தாமாகவே தேடிச்சென்று பெற்றுக்கொள்ளுகின்ற வழக்கத்தை இப்பாவனையாளர்கள் பழக்கமாக்கிக்கொள்கிறார்கள்.

3. நாளடைவில் இது இன்றியமையாத ஒன்றாக பாவனையாளர்களுக்கு மாறிவிடுகின்றது. அதாவது 'இது இல்லாமல் இயங்கவும் முடியாது! இருக்கவும் முடியாது!' என்ற நிலைக்கு உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் தள்ளப்படுகிறார்கள். சாதாரண உடலியல் செயற்பாட்டிற்குக்கூட அவர்களுக்கு அது அத்தியவசியமாகின்ற துர்ப்பாக்கிய நிலைக்கு பாவனையாளர்கள் தள்ளப்படுகின்றார்கள். அசாதாரண ஒரு நிலையாக அது இருந்தாலும், அதனையே சாதாரண நிலையாக மாற்றி பாவனையாளர்களைத் தன் பிடிக்குள் வைத்திருக்கும் தன்மைகொண்டதாக போதைப்பொருள் மாறிவிடுகின்றது.

4. இப்போதைப் பொருட்களைப் பெற பொருளாதார வசதிகளோ உழைப்போ இல்லாவிட்டாலும் களவு எடுத்து, பொய் சொல்லி, பிறரை ஏமாற்றி, பணம் பறித்து, கொள்ளை அடித்து தமக்குத் தேவையான அன்றைய போதைப்பொருளைப் பெற்றுக்கொள்கிறார்கள். ஏனென்றால், போதைப்பொருள் பாவனையாளர்களால் போதைப்பொருள் இல்லாமல் இருக்கவோ இயங்கவோ முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். 5. இந்நிலை தொடருமாயின் மிகப்பயங்கரமான அடிமைநிலையை (Addiction) அடைந்துவிடுவார்கள். அதனால் போதைப்பொருள் தன் பிடியிலேயே பாவனையாளர்களை வைத்திருக்கும்! அதுவே அவனை ஆக்கிரமித்து, அடிமைப்படுத்தி ஆண்டு நடத்தும்!

### *தண்டனைகளுக்கு முன்!*

போதைப்பொருள் வைத்திருப்பது ÷ விற்பது ÷ பாவிப்பது பெரும் குற்றங்களாகக் கருதப்பட்டு சரியான தண்டனைகள் வழங்கப்படவேண்டும் என்ற கருத்துக்கு மாற்றுக் கருத்து இல்லையாயினும் போதைப்பொருள் சம்பந்தமான விழிப்பூட்டல்கள் எந்த அளவிற்கு கொடுக்கப்படுகிறது என்பது இங்கு கவனிக்கப்படவேண்டிய முக்கிய விடயமாகிறது. அந்தவகையில் :

1. போதைப்பொருள் பற்றிய தொடர் விழிப்புணர்வு கொடுத்தல்,
2. பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல்.
3. புனர்வாழ்வு அளிக்கப்பட்டபின் உழைப்பதற்கான தெரிவுகள் - வாய்ப்புக்கள் சாத்தியமாக்கப்படல்.
4. எச்சரிக்கைகளைமீறி போதைப்பொருளை வைத்திருப்பவர்கள். விற்பனை செய்பவர்களுக்குக் கடும் தண்டனை நிறைவேற்றப்படல் போன்றவை பின்பற்றப்படுவது போதைப்பொருள் பேராபத்தில் இருந்து சமூகம் மீண்டெழ உதவும் என எதிர்பார்க்கலாம்.

### *விழிப்புணர்வு – புனர்வாழ்வு – தொழில்வாய்ப்பு – தண்டனை*

**1. விழிப்புணர்வு:** போதைப்பொருளால் ஏற்படும் தனிமனித ÷ சமூகத் தீமைகள் பற்றிய விழிப்புணர்வுச் செயற்பாடுகள் அனைத்து மக்கள் மட்டங்களிலும் சிறப்பாக மாணவர்கள் - இளையோர் மட்டத்தில் தொடர்ந்து செய்யப்படல் வேண்டும். இச்செயற்பாடானது, போதைப்பொருள் விடயத்தில் ஆங்கிலப் பழமொழி ஒன்று சொல்வதுபோல (Prevention is better than Cure) குணப்படுத்தலைவிட நோய்த்தடுப்பு சிறந்ததாகும்.

**2. புனர்வாழ்வு:** போதைப்பொருள் வைத்திருப்பவர்கள், விற்பவர்கள், பாவிப்பவர்கள் அனைவரும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவதன் வழியாக அவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்கும் செயற்பாட்டைச் செய்வது ஆரோக்கியமான ஒரு சமூகத்தின் கடமையாகவும் பொறுப்பாகவும் இருக்கிறது. வடபுலத்தில் போதைப்பொருள் பாவனையாளர்களுக்கான புனர்வாழ்வு இல்லம் 'திருப்புமுனை', கொன்னையன் குடியிருப்பு, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற விலாசத்தில் அமைந்திருக்கிறது. வின்சன் பற்றிக் அ.ம.தி. அடிகளாரினால் உருவாக்கப்பட்டு அமலமரித்தியாகிகளால் நிர்வகிக்கப்படும் இந்நிறுவனத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் புனர்வாழ்வு பெற்று புதுவாழ்வு பெறுகின்றார்கள். வடகிழக்கில் போதைப்பொருள் பாவனையாளர்களுக்கு புனர்வாழ்வளிக்கக்கூடிய ஒரே நிறுவனமாக இந்நிறுவனமே திகழ்கிறது. அரச திணைக்களங்களாலும் அரசசார்பற்ற நிறுவனங்களாலும் மேலும் பலப்படுத்தப்படுவதன் வழியாக போதைப்பொருள் பாவனையாளர்கள் - விற்பனையாளர்கள் போன்றவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படக்கூடிய வாய்ப்புக்களை இந்நிறுவனம் தொடர்ந்து ஆற்றக்கூடியதாக இருக்கும்.

**3. தொழில் வாய்ப்பு:** புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்கள் அவர்களுக்கு ஏற்ற தொழில்களைச் செய்வதற்கும் உழைத்து முன்னேறுவதற்கும் உரிய வாய்ப்புக் கொடுக்கப்படல் வேண்டும். போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுகிறவர்கள் வேறு தொழில்கள் இல்லாதபடியினால் இதனைச் செய்வதாகப் பொதுவாகக் கூறுவார்கள். எனவே, புனர்வாழ்வின்பின் அவர்களுக்கேற்ற தொழில் வாய்ப்புக்கள் அளிக்கப்படல் வேண்டும்.

**4. கடும்தண்டனை:** எச்சரிக்கைகள், தண்டனைகளை மீறி போதைப்பொருட்களை வைத்திருப்பவர்கள் - போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் - போதைப்பொருட்களை பாவிப்பவர்கள் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படுவது தவிர்க்கப்பட முடியாதது என்பது இவற்றோடு சம்பந்தப்பட்டவர்களுக்கு உணர்த்தப்படல் வேண்டும்.

ஆக, இத்தகைய ஓர் அணுகுமுறை போதைப்பொருள் ஆபத்தில் இருந்து சமூகத்தை விடுவிக்கவும் - பாதுகாக்கவும் துணையாக அமையும் என நம்பலாம். எனவே போதைப்பொருளிலிருந்து விடுதலைபெற்ற சமூகமாக ஒட்டுமொத்த சமூகமும் துலங்க அனைவரும் தயாராவோம், மற்றவர்களையும் தயார்ப்படுத்துவோம்.

(கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும்
anpuomi1970@gmail.com).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டு – சிறப்புக் கட்டுரை

# துறவற அர்ப்பண வாழ்வும் எதிர்நோக்கும் சவால்களும்

– அருட்சகோதரி லுமினா போல்ராஜா (தி. கு.) –

முன்னுரை

காலத்துக்குக் காலம் பல வழிகளில் நாம் வாழும் வரலாற்றில் நம்மோடு பேசுகின்ற இறைவன், இவ்வாண்டில் அர்ப்பணம் செய்த துறவறத்தாருடன் திருத்தந்தை பிரான்சிஸ் வழியாகச் சிறப்பான முறையில் பேசுகிறார். துறவற அர்ப்பண வாழ்விற்கென அழைக்கப்பட்டோர் தம் அர்ப்பண வாழ்வின் நோக்கம், மேன்மை, தூய்மை பற்றிச் சிந்தித்து, வாழ்வைச் சீர்தூக்கிப் பார்த்து புதுப்பிக்க அழைப்புவிடுகின்றார்.

"உலகை விழித்தெழச் செய்யும்" பாரிய பொறுப்பினை தாங்கிப் பயணிக்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொருவரும் தமக்காக அல்ல பிறருக்காக தம் வாழ்வை அர்ப்பணிக்கின்றனர். இறைவனுக்காகத் தம் வாழ்வைத் தியாகம் செய்கின்றனர். இறை மகிமைக்காகத் தம்மை நறுமணப் பலிப்பொருளாக்குகின்றனர். எவ்வாறு இயேசு தம் பாடுகள், மரணம் உயிர்ப்பு என்னும் பாஸ்கா மறைபொருள் வழியாக மனுக்குலம் முழுவதுக்கும் வாழ்வு கொடுக்கத் தம்மை அர்ப்பணமாக்கினாரோ, அதேவழியில் நின்று துறவிகளும் கிறிஸ்துவின் மனநிலைகளால் வாழ்வை வளமாக்கி நிறை உண்மைகளை நோக்கி வழிநடத்தும் தூய ஆவியின் செயற்பாடுகளுக்கு விட்டுக்கொடுத்து இறையரசிற்காகத் தம் உடல், பொருள், ஆவி, ஆற்றல், திறமை, சக்தி, நேரம், உழைப்பு, அனைத்தையும் தாராளமனத்துடன் அர்ப்பணமாக்கி, விண்ணக முன்சுவையை மண்ணக அனுபவமாக்குகின்றனர். இந்தப் பார்வையில் துறவற அர்ப்பண வாழ்வுபற்றியும், எதிர்நோக்கும் சவால்கள் பற்றியும் இவ்வாய்வில் நோக்குவோம்.

## துறவற அர்ப்பணவாழ்வு - இறைவனின் தெரிவே...

எமது மீட்பு வரலாற்றைப் பின்நோக்கிப் பார்க்கும்போது, இறைவனின் தலையீடு இல்லாமல் எந்த ஒரு அழைப்பும் இடம்பெறவில்லை. இறைவனே முதல் அடி எடுத்துத் தாம் விரும்பியவர்களை அழைக்கின்றார் (மாற் 3:13). தமக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கின்றார். (யோவா 15:16 ) தமக்குரியவர்களை முன்குறித்து வைக்கின்றார். ஏற்புடையவராக்குகின்றார் (எரே 1:5: உரோ8 :30).

இறைவனின் தெரிவுகள் வித்தியாசமானவை. பலமும், பலவீனமும், உடைந்துபோகும் தன்மையும் கொண்ட மட்பாண்டம் போன்றவர்களை இறைவன் தெரிவுசெய்கின்றார், தேர்ந்தெடுக்கின்றார், உலகிலிருந்து பிரித்தெடுக்கின்றார், மதிப்புள்ளவர்கள் ஆக்குகின்றார் (1கொரி 4:7, யோவா 15:16 ஏசாயா 43:4). இதனை வாழ்வில் இனங்கண்டவர்கள் சுதந்திரமாகக் கொடுக்கும் பதிலிறுப்பே அர்ப்பணமாகின்றது.

முதுபெரும் தந்தை ஆபிரகாம், இறைவாக்கினர்கள், விடுதலை நாயகன் மோசே, ஆயனும் அரசனுமான தாவீது, வீரப்பெண் எஸ்தர், யேசுவைப் பின்தொடர்ந்த சீடர்கள், கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய சவுல், இதோ உமது அடிமை என்ற அன்னை மரியா, பாவிப்பெண் மகதலா மரியா, கிறிஸ்துவின் பாடுகள் மரணம் உயிர்ப்பிலும், அவரின் உடனிருப்பிலும் விசுவாசம் கொண்டு தம் வாழ்வை அர்ப்பணித்த புனிதர்கள், வேதசாட்சிகள், துறவற சபைகளை நிறுவிய நிறுவுனர்கள், இவர்களின் அர்ப்பணத்தைப் பின்நோக்கிப் பார்க்கும்போது, இறைவனின் தலையீடு, தெரிவு, தொடுதல், அழைப்பின் குரல் இருந்ததை மறக்கமுடியாது.


எனவே தம் அர்ப்பண வாழ்வை காத்திரமாக உணரும் ஒவ்வொருவரும் ஆண்டவரில் தம் பெருமைகளைத் தேடுவார்களேயன்றி வேறெதிலும் தேடவோ, ஆசிக்கவோ, நாடவோ, துணிவுகொள்ளார். "பெருமை பாராட்ட விரும்புகிறவர் ஆண்டவரைக் குறித்தே பெருமை பாராட்டட்டும்" (2கொரி 10:17).

## 2ம் வத்திகான் சங்கத்தின் சங்க ஒளியில் - துறவற அர்ப்பணம்

சங்கத்தின் ஒளியில் துறவற அர்ப்பணத்தின் நோக்கைப் பார்க்கும்போது "துறவற வாழ்வைப் புதுப்பித்தல்" என்ற பகுதியின் ஐந்தாம் இலக்கத்தில் துறவற வாழ்விற்கென கடவுளால் அழைக்கப்பட்டவர்கள், இறைவனுக்குச் செவிமடுத்தவர்கள் பாவத்திற்கு இறந்து (உரோ 6:11) அதாவது திருமுழுக்கு வழியாகவும், துறவற அர்ப்பண வாக்குறுதிகள் ஊடாகவும் தாம் பெற்றுக்கொண்ட அழைப்பிலே தூயவர்களாக வாழத் தமக்குள் இருக்கும் இவ்வுலகுசார் ஊனியல்பின் தன்மைகளுக்கு மரித்து, தூய ஆவியின் இயல்புகளால் புதுப்பிக்கப்பட்டு, ஆன்மீக பலத்தோடு பயணிக்கின்றார்கள் என்று கூறுகின்றது. இவ்விதம் தம் வாழ்வை உருமாற்றத்திற்கு உட்படுத்தி உறுதியடைந்தவர்கள் தாம் வாழும் உலகு, உறவுகளை வெறுத்து - விட்டுவிட்டு - துறந்து கடவுளின் மகிமைக்காகவும், மானிட சமுதாயத்திற்காகவும் ஏன் படைப்பு முழுவதற்கும் வாழ்வு கொடுப்பதற்காகத் தம் வாழ்வு முழுவதையும் அர்ப்பணிக்கின்றனர். இது திருமுழுக்கு அர்ப்பணத்தில் வேரூன்றி இருப்பதோடு அது முழுமையாகவும் வெளிப்படுத்துகின்றது. இந்த நோக்கில் எம் அர்ப்பண வாழ்வைத் தனித்திருந்து சிந்திப்போம்.

## இறைவார்த்தையின் ஒளியில் - துறவற அர்ப்பணம்

இறைவார்த்தையின் ஒளியில் அர்ப்பணவாழ்வை நோக்கும்போது அர்ப்பண வாழ்வின் சிறப்பு "விட்டுவிடுதல்" "வெறுமையாக்கல்" "இழத்தல்" "பின்தொடர்தல்" "சரணடைதல்" என்ற பற்றற்ற தன்மையில் முழுமை, நிறைவை அடைகின்றது என்பதை விவிலியத்தில் பல இடங்களில் நாம் காணலாம். "உடனே அவர்கள் தங்கள் படகையும், தந்தையையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள்" (மத் 4:22, மாற் 1:18).




என்னைவிடத் தம் தந்தையிடமோ, தாயிடமோ.... என் பொருட்டுத் தம் உயிரை இழப்போரே அதைக் காத்துக்கொள்வர்" (மத் 10:37 -39) என்ற வார்த்தைகள் இந்த உண்மைகளை கோடிட்டுக் காட்டுகின்றன. தூய யோவான் தம் நற்செய்தியில் "அர்ப்பணம்" என்பது உலகில் வாழ்ந்தாலும் உலகைச் சார்ந்திராது வாழ்தல், உண்மையினால் அர்ச்சிக்கப்பட்டு அனுப்பப்படுதல் என்பதை 17:14-19 வரை உள்ள வாக்கியங்கள் ஊடாகத் தெளிவுபடுத்திக் காட்டுகின்றார். தூய பவுல் அர்ப்பணத்தின் மேன்மையை "நம்மிடையே எவரும் தமக்கென்று வாழ்வதில்லை, தமக்கென்று இறப்பதும் இல்லை, வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கின்றோம், இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கின்றோம்" (உரோ 14:7-8). "ஏற்கனவே அடித்தளம் இட்டாயிற்று. அவ்வடித்தளம் யேசுக்கிறிஸ்துவே" (1கொரி 3:11-13) "என்ன நேர்ந்தாலும் வெட்கமுறமாட்டேன்... வாழ்விலும், சாவிலும், முழுத்துணிவுடன் கிறிஸ்துவை என் உடலால் பெருமைப்படுத்துவேன்... ஏனெனில் நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே, நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே" (பிலி 1:20-21) "நான் கடவுளுக்காக வாழ்கின்றேன்" (கலா 2:20) என்ற திருவார்த்தைகளின் வழியாக எடுத்தியம்புகின்றார். எனவே, இறைவார்த்தையின் ஒளியில் எம் அர்ப்பண வாழ்வில் நாம் கடந்துவந்த பாதைகளைத் திரும்பிப்பார்த்து வாழ்வைப் புதுபிப்போம்.

## திருத்தந்தையின் சுற்றுமடலின் ஒளியில் - துறவற அர்ப்பணம்

திருத்தந்தை பிரான்சிஸ் தம் சுற்றுமடலில், துறவற அர்ப்பண வாழ்வு வாழ்வோர் "விழித்தெழுந்து" செயற்படுவதுடன், உலகையும் "விழித்தெழச்" செய்யவேண்டியவர்கள் என்ற உண்மையை ஆணித்தரமாக வெளிப்படுத்துகின்றார்.

அதாவது சுதந்திரமாக, பிளவுபடா உள்ளத்தோடு இறையரசுப்பணிக்காக மனமுவந்து மாசற்றதும், தூயதுமான பலிப்பொருளாக அர்ப்பணித்தவர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கே மகிழ்ச்சி இருக்க வேண்டும். கிறிஸ்துவின் அன்புநிறைந்த பிரசன்னம் வெளிப்படுத்தப்பட வேண்டும். வானகத் தந்தை நிறைவுள்ளவராய், தூயவராய் இருப்பதுபோல் தம் வாழ்வின் நிறைவைத் தேடி தூயவாழ்வு வாழவேண்டும். சமுதாயத்தின் விளிம்புகளுக்குச் செல்லவேண்டும் என வலியுறுத்துகிறார்.

அதுமட்டுமல்லாது கடந்துவந்த பாதைகளை நன்றியோடு நினைவுகூர்ந்து, நிகழ்காலத்தை நம்பிக்கையுடன் அரவணைத்து, காலத்தின் அறிகுறி, வாழ்வின் சூழமைவு என்பவை தரும் பல்வேறுபட்ட அனுபவங்கள் மத்தியில் தம் துறவற அர்ப்பண வாழ்வை வாழ்ந்து பணிபுரிய வேண்டும் என்று அழைக்கின்றார். "எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருங்கள், என்ன நேர்ந்தாலும் நன்றிகூறுங்கள், இடைவிடாது செபியுங்கள்" (1தெச 5:16-18) என்ற தூய பவுலின் வார்த்தைகளானது திருத்தந்தை எதிர்பார்க்கும் மகிழ்ச்சியுள்ள துறவற அர்ப்பண வாழ்விற்கு அடிப்படையாக அமைவதையும் நாம் கருத்திற் கொள்வோம். இந்த ஒளியில் எம் அர்ப்பண வாழ்வின் அர்த்தத்தை, நோக்கை, இலக்கை அலசிப்பார்த்து, எமக்குள் உள்ளார்ந்த பயணம் ஒன்றை மேற்கொண்டு இலக்குநோக்கி முன்னேறிச் செல்வோம்.

*(நன்றி - இறையியல் கோலங்கள் - ஜனவரி - ஜூன் 2015)*

## அவிதப்பர் அடிகளாரை நினைக்கையில்!



பாதர் அவிதப்பர்!
உங்களுக்கு நல்ல மனமும் உண்டு,
நல்ல குணமும் உண்டு.
வரவேற்கவும் விருந்தோம்பவும்,
வரம்பெற்றவர் நீங்கள்.
உள்ளொன்றுவைத்துப் புறமொன்றுபேச,
உங்களுக்குத் தெரியாது.
உண்மையாய்ப் பழகும்,
உறவை வளர்க்கும் உத்தமர் நீங்கள்.
மலர்ந்த முகமும் தவளும் புன்னகையும்,
உங்கள் ஆளுமையின் அணிகலன்கள்.
எல்லோரையும் மதிக்கும் மனமுடையோன்,
எவர்மனமும் நோக இடமளியாதவர் நீங்கள்.
எவரையும் புண்படுத்தாமல்,
அனைவரையும் நற்பண்பால் கவர்ந்தவர் நீங்கள்.
உங்கள் வாழ்வுக்கும் பணிக்கும் நன்றி பாதர்.
ஆண்டவன் அடியில் அமைதியில் இளைப்பாறுங்கள்.
எங்களுக்காகப் பரிந்துரையுங்கள்!

- செ. அன்புராசா (அமதி) அடிகள்

அர்ப்பண வாழ்வு ஆண்டினை முன்னிட்டு
மன்னார் மறைமாவட்டத்தில் இடம்பெற்ற
பொதுநிலையினருக்கான விசேட கருத்தரங்கு

# துறவற வாழ்வும் துறவிகளும்

"துறவற வாழ்வானது இயேசுவின் வாழ்வையும் படிப்பினைகளையும், அடிப்படையாகவும், முன்னுதாரணமாகவும் கொண்டுள்ளது. துறவிகள் ஏழ்மையுள்ள, கற்புள்ள, கீழ்படிதலுள்ள இயேசுவை வேரோட்டமாகப் பின்பற்றுகின்ற வாழ்வு"

இந்த வருடம் 2015ஆம் ஆண்டை "அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டு" அல்லது 'துறவியர் ஆண்டு' எனத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அறிவித்திருந்தார். அர்ப்பணிக்கப்பட்டவர்களின் வாழ்வு ஆண்டிற்கான மன்னார் மறைமாவட்ட அருட்பணித்திட்ட முயற்சிகளுக்கு வலுச்சேர்க்கும் நோக்கோடு மன்னார் மறைமாவட்ட துறவற பணிக்குழுவினரால் "துறவற வாழ்வும் துறவிகளும்" என்ற தொனிப்பொருளில் ஒருநாள் விசேட கருத்தரங்கு இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள 39 பங்குகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு ஒவ்வொரு பங்கிலிருந்தும் இரண்டு பொதுநிலையினர் இதில் பங்குகொள்ள வேண்டுமென்று கேட்கப்பட்டிருந்தது.

இக்கருத்தரங்கு கடந்த யூன் மாதம் 2ஆம் திகதி மன்னார் - தலைமன்னார் வீதியில் உள்ள புனித டிலாசால் கிட் கம்பஸில் நடைப்பெற்றது. இக்கருத்தரங்கின் வளவாளராக இயேசுசபைக் குருவானவர் அருட்பணி. மரியதாஸ் அவர்கள் கலந்துகொண்டார். இக்கருந்தரங்கில் 41 பொதுநிலையினர் பல்வேறு பங்குகளிலிருந்தும் வருகைதந்து பங்கேற்றுப் பயன் அடைந்தனர்.

இக்கருத்தரங்கு துறவிகள் ஆண்டிற்கான செபத்தோடு ஆரம்பிக்கப்பட்டது. டிலாசால் அருட்சகோதரர் யோகன் அவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். மன்னார் மறைமாவட்டத் துறவறப் பணிக்குழுவின் தலைவர் சலேசியக் குருவானவர் அருட்பணி. போல் அடிகளார் வளவாளரை அறிமுகம் செய்துவைத்தார்.




காலை நிகழ்வாக அருட்பணி. மரியதாஸ் அவர்கள் கத்தோலிக்க திருச்சபையில் துறவற வாழ்க்கையின் உருவாக்காத்திற்கும், வளர்ச்சிக்கும் வழிவகுத்த நபர்களையும், நிகழ்வுகளையும் மிகவும் தெளிவாகவும், எளிமையாகவும், ஆர்வமூட்டும் வகையிலும் எடுத்துவிளக்கினார்.

துறவற வாழ்வு என்பது இயேசுக்கிறிஸ்துவை அடியொற்றி வாழ்கின்ற வாழ்க்கை. இயேசுவின் பாதச்சுவட்டில் கால் ஒற்றி நடக்கின்ற வேரோட்டமான பின்பற்றல் என எடுத்துக் காட்டினார்.

நற்செய்தியின் ஆலோசனைகளான ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல் ஆகிய மூன்று வார்த்தைப்பாடுகளை இறைவன் முன்னிலையில் எடுத்து, தங்கள் அர்ப்பண வாழ்வை முழுமையாகவும் புரட்சிகரமாகவும் வாழுகின்றவர்களே துறவிகள் என விளக்கினார்.

துறவற வாழ்வானது திருச்சபைக்கு வழங்கப்பட்ட உன்னத கொடை. துறவறம் திருச்சபையின் திருப்பணிக்கு இன்றியமையாத ஒன்றாக, திருச்சபையின் மையமாக இருக்கின்றது. துறவிகள் உலகில் பல்வேறுபட்ட பாகங்களிலும் நற்செய்திப்பரம்பலுக்கு உந்துசக்தியாகவும், உறுதுணையாகவும் இருக்கின்றார்கள் என்றார்.

மாலை அமர்வில் 'திரித்துவத்தின் புகழ்ச்சியாக துறவற வாழ்வு' என்ற கருத்தில் சிந்திக்கப்பட்டது. "துறவற வாழ்வு இறைத்தந்தையால் ஆரம்பிக்கப்பட்டு, திருமகனின் பாதச்சுவடுகளில் வழிநடக்க தூய ஆவியால் அர்ச்சிக்கப்படுகிறது" துறவிகளுடைய வாழ்க்கையின் மையமாக - இதயமாக இருப்பது திருப்பலியும் நற்கருணையுமே ஆகும் என்று விளக்கினார்.

இயேசு அப்பத்தை எடுத்தார், ஆசீர்வதித்தார், உடைத்தார், கொடுத்தார். இந்த உண்மையின் அடையாளமாக துறவிகள் இறைவனால் உலகிலிருந்து எடுக்கப்பட்டு பல்வேறு வரங்களால், கொடைகளால் ஆசீர்வதிக்கப்பட்டு, நீதிக்காக, உண்மைக்காக உடைக்கப்பட்டு மற்றவரின் வாழ்வு மேம்பட தங்களையே முழுமையாகக் கொடுக்கின்றார்கள் என்பதை பல்வேறு உண்மை நிகழ்வுகள் மூலமாகவும், திரைக்காட்சி மூலமாகவும் விளக்கினார். பின்னர், பங்கேற்பாளர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து வினாக்கள் கொடுக்கப்பட்டது. குழுக்களில் கலந்துரையாடல் செய்யப்பட்டு, கருத்துக்கள் பகிர்ந்துகொள்ளப்பட்டன.

மாலை 3.40 மணியளவில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அவர்களால் ஆசியுரை வழங்கப்பட்டது. அதில் மன்னார் மறைமாவட்டம் இறைவனால் சிறப்பாக இறையழைத்தலின் நிலமாக ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது என்றும், கடந்த இரண்டு மாதங்களில் மறைமாவட்டத்திற்கும் துறவற சபைகளுக்கும் புதிய குருக்களும், கன்னியர்களும் இறைபணிக்குத் தம்மை அர்ப்பணித்துள்ளார்கள் என்றும் கூறினார். இவை எங்களுக்கு பெருமையாக உள்ளது என்றும், எம் மறைமாவட்டம் துறவறத்தாரால்தான் உயர்ந்துள்ளது, வளர்ந்துள்ளது என்றும் விளக்கினார். துறவியர் யார் என்பதையும் அவர்களின் பணிகளினால் திருச்சபையும் உலகமும் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதையும் எடுத்துக்காட்டினார்.

சிறப்பாக மறைமாவட்டத்தில் பணிபுரியும் இருபால் துறவிகளின் பங்குப்பணி, அருட்சாதனங்களுக்கு ஆயத்தப்படுத்துதல், வீடு தரிசிப்பு, கல்விப்பணி, மருத்துவப்பணி, முதியோர் பணி, மாற்றுத்திறனாருக்கு பணி போன்ற பல்வேறு தியாகப் பணிகளை பாராட்டி நன்றி கூறினார். பொதுநிலையினரின் ஒத்துழைப்புகளுக்கும், உதவிகளுக்கும் நன்றி கூறினார். இறுதியாக அருட்பணி. போல் அடிகளாரால் நன்றியுரை வழங்கப்பட்டு இக்கருத்தரங்கு இனிதே நிறைவுபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### மாற்றத்தின் பாதையில்

போதனை முடிவில் மரித்துயிர்த்து
சாதனை படைத்த பின்னும்
தேவன் இன்னும் வேதனைப்படுகிறான்
நம்மவரில் காணமுடியாத மாற்றங்களுக்காய்.....!

பக்கத்து வீட்டோடு பகைமறக்க முடியவில்லை
காணிக்கும் சொத்துக்கும் கரைகாணாத சண்டை
இந்நிலையில்... கல்வாரி போகிறது ஒரு கூட்டம்
திருப்பயணமாம், பாதயாத்திரையாம்!

தாய் தந்தை சில வீட்டில் தாவாரக் கதவோரம்
பிள்ளைகளால் விரட்டப்பட்டோர் வீதிகளில் ஏராளம்

ஏழைக்குக் கொடுக்க நீளாத கைகள்
வாசலில் நின்று வாய்விட்டுக்கேட்டாலும் வழங்காத கைகள்
கோயிலுக்குப் பணம் தரும் .....தானமாம் நன்கொடையாம்
யாரை ஏமாற்றுகிறோம்......?

பரமனவன் பாரில் வந்து பாடுகள் ஏற்று மரித்த
பரிசுத்த காலத்திலே
நம் பாவங்கள் பழிகளுக்காய் பரிகாரம் தேடிடுவோம்.

இறைவா... வரம்தா,
மன்னிக்க முடியாமை மடியட்டும் மண்ணோடு
உண்மையும் அன்பும் உயிர்க்கட்டும் உன்னோடு!

- ஜெய பிருந்தா மோசேஸ்,
அடம்பன்தாழ்வு, வட்டக்கண்டல்.

### கண்ணதாசன்

உன் கவிதைகளுக்கு காது கொடுத்ததால்தான்
நான் கவிதைகளைக் காதலிக்கத் தொடங்கினேன்.
பாரதி இமயமாய் நின்று பிரமிப்பூட்டினான்
தமிழ்மீது எனக்கு பற்றுவந்தது பயமும் இருந்தது.
கண்ணதாசனே!
நீ தென்றலாய் என்னைத் தீண்டினாய்
தமிழ்மீது எனக்கு பாசம் வந்தது
தமிழோடு எனக்கு பழக்கம் வந்தது
எத்தனையோ பாடுபொருள்கள்
அத்தனையிலும் என்னைக் கவர்ந்தது தாலாட்டு
"போட்ட விதை முளைக்கும்
பொன்னான பூமியிலே
வாட்டமில்லாப் பயிராக
வந்து விளைந்தவனே"
எங்கள் இயேசுவுக்கு நீ பாடினாயே ஒரு தாலாட்டு!
உலகம் உள்ளவரை தாலாட்டு இருக்கும்
தாலாட்டு உள்ளவரை நீயும் இருப்பாய்.

- ஜெயா பாலாஜி, முருங்கன்

### கண்ணீர் அஞ்சலி

### அமரர் சகாயநாதன் அடிகளார்

அன்புத் திருமகன் அருட்தந்தை சகாயநாதன் அடிகளாரின்
அகால மரணச் செய்தி!
என்புருக்கும் எறிகணையாய் இதயங்களைப் பிளந்தது.
வன்பகற்றும் பணிவன்பால் பணிவாழ்வின் பிணிபோக்கிய
பண்பான அருட்பணியாளன்.
பாதியிலே எம்மைப் பரிதவிக்க விட்டுவிட்டுப்
பரமன் பதம் பற்றினாரோ?
பொன் மனத்தான்; பூப்போன்ற மென்மனத்தான்;
கன்னல் கனிமொழியால்,
கன்மனத்தோரையும் கரைக்கும் சொன்னயத்தான்.
நன்னயத்தால் நாதியற்றோருக்கு நல்வழி காட்டும்
உயிர்ச்சோதியாய் ஒளிர்ந்த உத்தமன்.
புன்சிரிப்பால், பொறை விரிப்பால் அனைத்துள்ளங்களிலும்
அலங்காரமாய் வலம் வந்த புனிதன்.

மனிதத்தை மாணிக்கமாய் மதித்த மாமனிதன்
குருத்துவப் புனிதத்தைத் தன் நிறை அர்ப்பணத்தால்
அணிசெய்த குருமுதல்வன்.
இனிதான இறைவார்த்தையை நிறைவான வாழ்வாக்கி
கறையுற்ற மனங்களை, குறைவற்ற நற்செய்தி
விளைநிலங்களாக வளப்படுத்திய வள்ளல்.

கடின உழைப்பும், கடமையுணர்வும் உடன்வர
ஏழைகளின் விடியலைத் தேடி விரைந்த வீரநண்பனே!
பசித்தவர் புசித்திடப் பல்சுவைச் சகாயமாகப்
பரிவளித்த குருநாதனே!
நசித்தவர் மனம் கசிந்திட இன்சொல்லால் அருட்சோதரனே
இறுதிவரை இறைபணியில் இணைந்திருந்து
இன்னுயிர் நீத்த இன்னருட் தந்தையே
இதயமாய் வாழ்ந்த உமையிழந்து உயிர் துடிக்கின்றோம்.

எத்தனையோ சொல்லி அழ நெஞ்சம் ஏங்குது
ஆருயிர்த் தந்தையே - உம்
பணிவாழ்வின் இனிய நினைவுகள் நீங்காமல் நிலைத்திருக்கும்
நின் அன்பு வழியில் நற்பண்போடு எந்நாளும் வாழ்ந்திடுவோம்
ஆதி அந்தமில்லா ஆண்டவனின் அன்பில்
உம் ஆன்மா அமைதிபெற அவனருள் வேண்டி,
கண்ணீர்ப் பூக்களாய்க் கலங்கும் - எம்
அன்பு நெஞ்சங்களை அழகிய றோஜா மலர்களாக
உம் பதம் படைக்கின்றோம்
இன்னுயிர்த் தந்தையே இன்பசாந்தி அடைவீர்!

- நீங்காத நினைவுடன்,
டொறத்தி குடும்பத்தினர்,
பிரான்ஸ்.

## கொஞ்சம் சிரிங்க

*பாலா :* டேய் மச்சான், என்ர மனுசி கல்யாணம் முடிச்சி முதல் நாள் நாயை பார்த்து பயந்தா.
*குமார் :* இப்ப?
*பாலா :* அத ஏண்டா கேட்கிறா, அவ போடுற சத்தத்தில நாய் அவளப் பார்த்துப் பயப்பிடுது.

..............................

*மாணவன் 1 :* நாளை பரீட்சை. எத்தனை கேள்வி எப்படி வரும் எண்டு பயமா இருக்கு. உனக்கு தெரியுமா எப்படி கேள்வி வரும் எண்டு?
*மாணவன் 2 :* அட நீ வேற, நாளைக்கு என்ன பரீட்சை எண்டுகூட எனக்கு தெரியலடா.

..............................

*யாரோ :* அம்மா, நாங்க புதுசா ஒரு முதியோர் இல்லம் ஆரம்பிக்கப்போறோம். உங்களால் ஏதாவது தரமுடியுமா?
*அம்மா :* தரலாமே, என்னோட மாமியாரையும், மாமனாரையும்.

*தரகர் :* ஏமா, உங்க பொண்ணுக்கு நல்ல மாப்பிள்ளை பொருத்தம் பார்த்திருக்கன். பிடிச்சிருக்கா எண்டு சொல்லுங்க?
*பெண் :* ஐயா, எனக்கு மாப்பிள்ளைட பொருத்தம் வேணாம். மாமியார் பொருத்தம் பாருங்க.

..............................

*மனைவி :* இந்த வீட்டில் ஒண்ணு நான் இருக்கணும். இல்ல உங்க அம்மா இருக்கணும்.
*கணவன் :* வேலைக்காறிய மட்டும் விட்டிற்று நீங்க ரெண்டு பேரும் எங்கயாவது போங்க.

..............................

*ஆசிரியர் :* 10 பேர் சேர்ந்து ஒரு கட்டிடத்தை 20 நாட்கள் கட்ராங்க. அதே கட்டிடத்த 20 பேர் சேர்ந்து கட்டினா எத்தனை நாள் கட்டுவாங்க,
*மாணவன் :* ஏற்கனவே கட்டின கட்டிடத்தை ஏன் சார் மறுபடியும் கட்டணும்?

## மன்னா விளம்பரப் பலகை

"செல்வம் மனிதருக்கு பணிவிடை செய்யவேண்டும். அதிகாரம் செய்யக்கூடாது."

பிரார்த்தனை செய்யுங்கள். கடவுள் அருகே போகலாம். பிரார்த்தனை செய்ய முடியவில்லையா, அதற்குப்பதிலாக சேவை செய்யுங்கள். கடவுளே உங்கள் அருகில் வருவார்.

..............................

இரு கை கூப்பி கடவுளை வணங்குவதைவிட, ஒரு கை நீட்டி உதவி செய்ய, இரு கை உன்னை வணங்கும் கடவுளாக.

*- டி. பி. ஆர், தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.*

பேச்சினால் பின்னர் வருந்த நேருகிறது. மௌனத்தினால் ஒருபோதும் அப்படி நேருவதில்லை.

..............................

அதிகமாகச் சிரிப்பவரிடம் துன்பம் நிறைந்திருக்கும்.
அதிகமாகக் கதைப்பவரிடம் ஞாபக மறதியிருக்கும்.

*- க. சுதர்சன், பாலைப்பெருமாள்கட்டு, வட்டக்கண்டல்*

பிறர் செய்வதில் எது உனக்குப் பிடிக்கவில்லையோ அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே.

..............................

பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது.
பணம் இருந்தால் உன்னையே உனக்குத் தெரியாது.

..............................

நீ சந்தோசமாக இருக்கும்போது வாக்குறுதிகளைக் கொடுக்காதே.

*- ஞா. தனுஷா, பொன்தீவுகண்டல்*

வாழ்க்கையில் தைரியமாக எதையும் அணுக முடியாதவர்களுக்கு அவர்கள் விரும்பிய எதுவுமே கிடைப்பதில்லை.

*ஆ. அனுசியா, கார்மேல் கன்னியர் இல்லம், முருங்கன்.*

## சிறுகதை

# தாபரிப்புப் பணம்

- டி. பி. ஆர்., தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்

இரவு தனது போர்வையை மெல்ல மெல்ல தளர்த்திக்கொண்டிருந்தது. ஆனால் பவித்திரா தன் போர்வையை மெதுமெதுவாகத் தன் மேனியுடன் ஒட்டிக்கொண்டாள். பனி கலந்த காற்று அவளை இன்னும் கண்மூடி உறங்கச் சொன்னது. உறங்கக் கண்களை மெதுவாக மூடியவள், காலை 7.00 மணி என மணிக்கூடு காட்டவும், தனது நண்பி ஆனந்தியின் குரல்கேட்டு திடுக்கிட்டு எழுந்தாள்.

"வாடி வா. என்ன விடியக்காலையில....." என அலுப்புடன் சோம்பல் முறிந்தவளாக பவித்ரா வினவினாள். "உனக்கென்ன, நல்லாத் தூங்கு. வாற மாதம் எனக்குக் கலியாணம். அதுதான் வீட்டுப்பக்கம் வா! நான் உன்னைக் கூப்பிடத்தான் வந்தன். போறன், நிறைய வேலை இருக்கு. கட்டாயமா வா" என அன்புக்கட்டளை இட்டு ஆனந்தி விடைபெற்றாள்.

ஆனந்தி - பவித்திரா இருவரும் உற்ற நண்பிகள். பவித்திரா இல்லாமல் ஆனந்தி இல்லை. ஆனந்தியின் சில பகட்டான செயற்பாடுகள் பவித்திராவிற்குப் பிடிக்காதபோதும் ஆனந்தியிடம் அவள் உறவாகவே இருந்தாள்.

"சரி, அப்ப இன்றைக்கு ஆனந்தி வீட்ட போய், முகத்தைக் காட்டிவிட்டு வருவம்" என யோசித்தவளாக தன் கடமைகளைச் செய்துவிட்டு, நண்பி ஆனந்தி வீட்டிற்கு புறப்பட்டுப் போனாள் பவித்ரா.

"வா பிள்ளை வா. இன்டைக்கு நீ வருவாய் என்றுதான் ஆனந்தி சொன்னா. வா வா" எனப் புன்னகையுடன் வரவேற்றாள் ஆனந்தியின் தாய் அன்னம்மா. "எங்க பொண்ணைக் காணோம்?" என வினவியவளாக நண்பியைத் தேடலானாள் பவித்திரா! "பிள்ள, அவள் இன்றைக்கு சரியான பிஸி. ஹோல் புக் பண்ணனுமாம், பாதரைச் சந்தித்துக் கதைக்க வேணுமாம் என்று போனாள். நீ வந்து இரு. வா....." என உள்ளே அழைத்துச்சென்றாள். அங்கே றிச் கேக் சுற்றும் வைபவம் ஆரவாரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. றிச் கேக் பேப்பர்கள் தகதக என தங்கத்தைவிட மினுங்கியது. அருகே கேக் பொக்ஸ் வாயை ஆ என பிளக்க வைத்தது. அப்படி ஒரு அழகு! இவற்றை இரசித்தவளை அன்னம்மா சுயநினைவிற்கு அழைத்தவளாக, "பிள்ளை பவித்திரா, இவை எல்லாம் அவள் இந்தியாவிலிருந்து நெற்றில பார்த்து ஓடர் கொடுத்தது. ஒரு பொக்ஸ் விலை 20/= பிள்ளை. ஒருத்தரும் இந்த பொக்சை இன்னும் பாவிக்கல. வா, இஞ்ச வந்து கலியாணக் காட்டைப் பார்" அறைக்குள் அழைத்துச்சென்று சரசரவென பார்சலைப் பிரித்து, ஒரு காட்டை எடுத்துக் காட்டினாள். அப்பப்பா காட்டிலேயே இந்தியத் தரத்தை எடை போட்டாள் பவித்திரா. அருகிலே இருந்த பில்லில் ஒரு காட் 75 ரூபா எனப் போடப்பட்டிருந்ததைப் பார்த்து உதட்டைப் பிதுக்கியவளாக "செலக்ஸன் சுப்பர் அன்ரி, போங்க ... ஆனந்தியை மிஞ்ச எவருமில்லை" எனக் கூறினாள். அடுத்து ஆனந்தியின் திருமண ஆடைகளைக் காண்பித்தாள் தாய். ஒவ்வொன்றின் விலையும் ஒரு பவுண் தங்கத்தை மதிப்பிட்டது. எனினும் இவற்றைச் சொல்லும்போது அன்னம்மா சர்வ சாதாரணமாக மகளின் பகட்டையும் ஆடம்பரத்தையும் ஆமோதிப்பவளாகவே காணப்பட்டாள். தங்களது தரத்தைமீறிய செலவு என்பதை அவள் புரிந்தவளாகப் பவித்திராவிற்குப் புலப்படவில்லை.

"யாரம்மா வந்திருக்கிறது? அப்பாடி.... இன்றைக்காவது வந்தியாக்கும்" என்றவளாக உள்ளே நுழைந்தாள் ஆனந்தி. வந்தவள், "பவி எப்படி..? எல்லாம் பார்த்தியா? எப்படி இருக்கு?" என்றவளை, "குறை சொல்ல என்னடி இருக்கு? எல்லாம் கலக்குது" என்றாள் பவித்திரா. "பின்ன ... வாற எல்லோரும் சோறு சாப்பிட்டாங்களோ இல்லையோ ..... வாய்க்குள்ள ஈ போற அளவு வாயைப் பிளக்க வைக்கணும்" என்று ஒருவித பெருமிதத்துடன் கூறினாள் ஆனந்தி. "பிள்ளை... போன விடயங்கள் எல்லாம் ....?" என்றவளாக குளிர்பானத்தை மகளுக்கும் பவித்திராவிற்கும் பரிமாறினாள் ஆனந்தியின் தாய்.

"பின்ன! போனால் சக்ஸஸ் இல்லாம வருவனா? மேக்கப் மிஸ் கேக் செய்து தருவா. அவக்குத்தான் கேக் எப்படி இருக்கணும் என்று நெற்றில சேர்ச் பண்ணி பிறின்ற் கொடுத்தன். கேக் 15,000 ரூபா. மேக்கப் எல்லாமாக 50,000 ரூபா வருது. உடனே கிளியர் பண்ணிட்டன். அப்படியே ஸ்ரூடியோ போய், அங்க 75,000 ரூபா கேட்டாங்க. நான் அரைவாசி அட்வாண்ஸ் கொடுத்திட்டு கோல் புக் காசையும் பே பண்ணினன். அப்படியே அங்க டெக்றேசன்ஸ் செய்யச் சொல்ல அவங்க அதுக்குத் தனியாக பே பண்ணச் சொன்னாங்க, போகுது போகட்டும் என்று ... சும்மா 20,000 ரூபாதானே. பிறகு வீடியோ போட்டோ சொதப்பலாக இருக்கும். எல்லாம் சரி" என்றவளை, அன்னம்மா இடைமறித்து, "ஆனந்தி, அப்ப பாதரை சந்திச்சியா? அந்த அலுவல் முடிச்சிட்டியா?" என்றாள். "அதை ஏன் கேக்கிறிங்க? அம்மா, பெரிய பாதர் இல்லை. கோயிலில நிக்கிற கணக்கப்பிள்ளைற்றதான் கதைச்சன். அவர் அம்மா கோயிலுக்கு 5,000 ரூபா கட்டணுமாம்?" என்றார். என்ன 5,000 ரூபாவா? என கொஸ்கந்தாவில நடந்த மண்சரிவுபோல முகபாவனை காட்டினாள் அன்னம்மா. "ஓம் அம்மா, மின்சார செலவாம், கோயில் அலங்காரமாம், பைபிளாம், காணிக்கையாம் என ஒரு பட்டியல்! அதோட தாபரிப்புக் காசாம். எனக்கு உறுதிப்பூசுதல் எடுத்த பிறகு தாபரிப்புக் காசு கட்டப்படவே இல்லையாம். அதுக்கு வேறாக 12,000 ரூபா காசு கட்டணுமாம். நான் பெரிய பாதர் வந்தபிறகு வாறன் என்று வந்திட்டன்"

"பெரிய பாதரிடம் என்ன சொல்லப் போறாய் ஆனந்தி? என வினவினாள் பவித்திரா. "பின்ன ... கோயில் தாபரிப்புக் காசு 12,000 ரூபா வரப்போகுதடி. நான் சொல்லப்போறன் 'பாதர் எனக்கு அப்பா இல்ல. அம்மாவும் நானும்தான். வெளிநாட்டில இருந்து அண்ணன் எப்பவாவது இருந்திட்டு காசு அனுப்புவார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டு – சிறப்புக் கட்டுரை

# திருச்சபைச் சட்டத்தொகுப்பின் ஒளியில் துறவற சபைகள்

அருட்சகோதரர் அ. யூட் கறோவ் (அமதி)

## முன்னுரை

தனது போதனைகளாலும் முன்னுதாரணமான வாழ்வாலும் பலரையும் கவர்ந்துள்ள எமது திருத்தந்தை பிரான்சிஸ், இவ்வாண்டைத் துறவற அர்ப்பண வாழ்வு ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். இன்று நாம் வாழும் சமூகத்தில் துறவிகளின் பங்களிப்பானது பலதரப்பட்டதாகக் காணப்படுகின்றது. எனவே இத்தருணத்தில் இத்துறவிகள் பற்றியும், திருச்சபையில் அவர்களுடைய வாழ்வு, பணி பற்றியும் ஆழமாகச் சிந்திக்க நாம் அழைக்கப்படுகின்றோம். திருச்சபையின் சட்டத்தொகுப்பிலே இறைமக்கள் என்ற இரண்டாவது நூலின் மூன்றாம் பகுதியில் திருச்சபையில் துறவற சபைகளின் அமைப்பு மற்றும் வகிபங்கு பற்றி விரிவாகவும் ஆழமாகவும் எடுத்துக்கூறப்படுகின்றது. எனவே இச்சட்டத் தொகுப்பின் ஒளியிலே துறவற சபைகள்பற்றி சற்று ஆராய்வோம்.

## யார் இந்தத் துறவிகள்?

துறவிகள் என்னும்போது திருச்சபையின் மீட்புப் பணிக்கும், இறைவனுக்கும் ஏழ்மை, பொறுமை, கற்பு என்னும் துறவற வாக்குத்தத்தத்தின் மூலம் தம்மை முழுமையாக அர்ப்பணம் செய்பவர்களைக் குறிக்கும். வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது துறவிகள் என்பவர்கள் விசேடமுறையில் இறைவனின் அழைப்பையும், கொடைகளையும் பெற்ற, கிறிஸ்தவ வாழ்வை வித்தியாசமானமுறையிலும், கடவுளுக்கு ஏற்றவிதத்திலும் வாழ்ந்து இறையரசைக் கட்டியெழுப்புபவர்கள். அவர்கள் பரிசுத்த ஆவியின் தூண்டுதல்களுக்குச் செயல்வடிவம் கொடுத்து திருச்சபையைப் புனரமைப்பதிலும், மேம்படுத்துவதிலும், சிலநேரம் மாற்றங்களை ஏற்படுத்துவதிலும் முழுமூச்சுடன் முனைபவர்கள். இவர்களின் வாழ்க்கைநிலையானது திருச்சபை ஆட்சி அமைப்பைச் சார்ந்திடாவிடினும் அதன் வாழ்வோடும், புனிதத்தன்மையோடும் தொடர்புகொண்டுள்ளது (தி.ச 207.2).

## துறவற சபைகளானது மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன :

### I. அர்ப்பண வாழ்வுச் சபைகள்

இவை துறவற வார்த்தைப்பாட்டைப் பகிரங்கமாக அறிக்கையிடுவதுடன் குழுமமாகவும் தமது வாழ்வை வாழ்கின்றனர்.

### II. மறைத்தூதுப் பணிவாழ்வுச் சபை

இக்குழும உறுப்பினர்கள் திருச்சபையில் ஒரு குறிப்பிட்ட பணிக்காகத் தம்மை அர்ப்பணிப்பதுடன் பணிநோக்கோடும் விருதுவாக்கோடும் செயற்படுபவர்கள்.

### III. உலகுசார் குழுமங்கள்

இவர்கள் பெரும்பாலும் துறவிகள் என்னும் வகையினருக்குள் உள்ளடங்கமாட்டார்கள். மாறாக அவர்களது அர்ப்பண வாழ்வானது உலகை மையப்படுத்தியதாகவே காணப்படும். உலகில் இருந்தவாறே அதன் மீட்புக்காகவும், ஈடேற்றத்திற்காகவும் உழைப்பவர்கள். இவர்கள் தமது துறவற வார்த்தைப்பாட்டை வெவ்வேறு முறைகளில் மேற்கொள்வார்கள். சிலர் பொதுவாக குழுமங்களில் வாழ்வார்கள். மற்றும் சிலர் குடும்பங்களில் வாழ்வார்கள்.


முதல் இரண்டு குழுமங்களும் பொதுவாக ஒத்த தன்மையை கொண்டதாகக் காணப்படும். அத்துடன் இவை துறவறக் குழுமங்கள் என்றும், இதன் உறுப்பினர்கள் துறவிகள் என்றும் நோக்கப்படுகின்றனர். இருப்பினும் அவர்களுடைய தனித்தன்மைகள் சிறப்பானதாகவும் அதற்குரிய முறையிலும் நோக்கப்பட வேண்டும் (தி.ப. 578).

## துறவறக் குழுமங்கள்

துறவற குழுமங்கள் பால்நிலை சம்மந்தமாக ஆண் பெண் வேறுபாடு உள்ளவையாகவும் (606), அதன் குறிக்கோளுக்கிணங்க திருப்பணியாளர் நிலையாகவோ அல்லது பொதுநிலையினர் நிலையாகவோ (588), அதன் அதிகாரத்தைப் பொறுத்தமட்டில் திருத்தூதரக ஆட்சிப்பீடத்திற்கோ, அன்றேல் மறைமாவட்ட ஆயரின் அதிகாரத்துக்கோ உட்பட்ட சபை எனப்படும். (589).

ஒரு துறவற சபையை நிறுவுவதற்கும், அதன் சட்டதிட்டங்களை அங்கீகரிப்பதற்கும் அல்லது அதில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்குமான மொத்த அதிகாரம் திருத்தூதரக ஆட்சிப்பீடத்திடமோ அல்லது மறைமாவட்ட ஆயரிடமோ உள்ளது. ஒவ்வொரு துறவற சபையும் ஒரு உன்னதமான மரபுச்செல்வத்தைக் கொண்டிருக்கின்றது. அதாவது அச்சபையின் இயல்பு, நோக்கம், மனநிலை, நிறுவுனரின் எண்ணம் மற்றும் செயல்திட்டம் என்பன தனித்துவமானதாக அமைகின்றன. அத்துடன் அவை தமக்கே உரித்தான ஆளுகை, தன்னாட்சி, உரிமை என்பவற்றின் மூலம் தமக்குரிய ஒழுங்கையும், அடையாளத்தையும் பேணிக்கொள்கின்றன (589). அத்துடன் அவை தமக்குரிய சட்டதிட்டங்கள், அங்கத்துவம், உருவாக்கம், அர்ப்பண வாக்குத்தத்தங்கள் என்பவற்றையும் உருவாக்குகின்றன (589).

இவ்வாறாக இத்துறவற சபையில் இணைபவர்கள் ஏழ்மை, கற்பு, பணிவு போன்ற துறவற வார்த்தைப்பாடுகளைக் கடைப்பிடித்து, கிறிஸ்துவை நெருக்கமாகப் பின்பற்ற வாக்குறுதி அளிக்கின்றனர். **கற்பானது** மணத்துறவில் நிறைவான இச்சை அடக்கத்தினையும் (599), **ஏழ்மையானது** அகத்திலும், புறத்திலும் தன்னடக்கத்தோடு உழைத்து வாழ்வதையும் (600), **பணிவு** என்பது அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிவுடன் நடந்துகொள்ளும் மனநிலையையும் (601) கோருகின்றது. அத்துடன் அனைத்துச் சபைகளும் சகோதர வாழ்வினால் கிறிஸ்துவில் ஒரு சிறப்புக் குடும்பமாக ஒன்றிணைக்கப்பட்டு, உலகளாவிய ஒப்புரவின் எடுத்துக்காட்டாக இருக்கவும் அழைக்கப்படுகின்றனர்.




## கட்டமைப்பும் ஆட்சிமுறையும்

ஒவ்வொரு துறவற குழுமமும் மறைமாவட்ட ஆயரின் உத்தரவின்பேரில் சட்டமுறையாக நிறுவப்பட்ட இல்லத்தில், சட்டவிதிமுறைக்கேற்ப நியமனம்செய்யப்பட்ட தலைவரின் அதிகாரத்தின்கீழ் வாழவேண்டும். அங்கே அவர்கள் குழுமமாக வாழ்வதோடு தமக்குக் கொடுக்கப்பட்ட பணியிலும் முனைப்புடன் ஈடுபடவேண்டும். இவ்வாறாகப் பல துறவற இல்லங்கள் ஒன்றிணைந்து மாகாணமாகின்றது. அதற்குப் பொறுப்பானவர் மாகாணத் தலைவர் (Provincial) என அழைக்கப்படுவார். அனைத்து மாகாணங்களும் ஒன்றிணைந்து ஒரு பெரிய சபையாகின்றது. அதற்குப் பொறுப்பானவர் அதி உயர் தலைவர் (Superior) என அழைக்கப்படுவார். எனவே மாகாணத் தலைவரும் சபையின் அதிஉயர் தலைவரும் தமது ஆலோசகருடன் இணைந்து சபையின் சட்டதிட்டங்களுக்கமைய அனைத்து உறுப்பினர்களையும் பொறுப்புடன் வழிநடத்த கடமைப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்.

இவ்வாறு தலைவர்கள் தமது அதிகாரத்தை மற்றவர்களுக்குப் பணிசெய்வதற்கும், கிறிஸ்துவுக்குள் அன்புள்ள ஒரு குழுமத்தைக் கட்டியெழுப்பவும் பயன்படுத்த வேண்டும். அத்துடன் உறுப்பினர்களின் தனித்துவத்தையும், தனிப்பட்ட சுதந்திரத்தையும் மதிக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் (630).

அமைப்புச்சட்ட விதிமுறைக்கேற்ப இத்தலைவர்கள் தங்கள் சொந்த ஆணைக்குழுவை கொண்டிருக்கவேண்டும். தம் பணியை ஆற்றுவதிலும் நிறைவேற்றுவதிலும் அதன் உதவியைப் பெறவேண்டும் (627). இத்துறவற சபைகளில் பொதுப்பேரவையானது உச்சநிலை அதிகாரத்தைக் கொண்டுள்ளது. இதிலே உயர் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது, முக்கியமான காரியங்களைக் கையாளுவது, அனைவருக்கும் பொதுவான விடயங்களை விதிகளை வெளியிடுவது, சபையின் சட்டதிட்டங்களைப் பரிசீலிப்பது போன்றன ஆராயப்படுகின்றன (633).

துறவற சபையில் உள்ள இல்லங்களும் மாகாணங்களும் சட்ட ஆளாக (Judicial Person) இருப்பதால் உலகச் சொத்துக்களைச் சேர்ப்பதிலும் நிர்வகிப்பதிலும் தகுதியைக் கொண்டுள்ளன. ஆயினும் அளவுகடந்த இலாபம் ஈட்டுதல், சொத்துக் குவித்தல் போன்ற வெளித்தோற்றத்தைத் தவிர்த்து நிர்வாகத்திற்குரிய தக்க விதிமுறைகளை நிர்ணயித்து, சபைக்குரிய ஏழ்மை பாதுகாக்கப்பட ஆவனசெய்ய வேண்டும்.

## உருவாக்கம்

எந்தவொரு நபரும் தகுந்த ஆயத்தமின்றி துறவறசபையுள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இவ்வுருவாக்கமானது பல்வேறு படிநிலைகளை கொண்டுள்ளது.

- ஆரம்ப நவசன்னியாசம்: சபையுடன் தன்னை இணைத்து அறிமுகமாகும் காலம்.
- நவசன்னியாசம்: தகுதி வாய்ந்த வேட்பாளர் குறைந்தது ஒரு வருடமேனும் ஒரு குழுமத்தில் இருந்து, இறை அழைத்தலையும், சபைக்குரித்தான அழைத்தலையும் சிறந்தமுறையில் அறிந்து, சபையின் வாழ்வு முறையை உரித்துடையவராக்கிக்கொள்ளல் (646).
- தற்காலிக வாக்குத்தத்தம்: நவ சன்னியாசத்தின் பின்னர் வேட்பாளர் துறவற வார்த்தைப்பாட்டை பகிரங்கமாக மேற்கொள்வதன் மூலம், குழுமத்துள் அறிமுகப்படுத்தப்படுகின்றார். இக்காலப் பகுதியில் அவர் தனது ஆன்மீக மற்றும் மறைப்பணிச் செயற்பாடுகளில் ஈடுபட்டு தன்னை மென்மேலும் வளர்த்துக்கொள்கிறார்.
- நித்திய வாக்குத்தத்தம்: தற்காலிக உறுதிமொழிக் காலம் முடிந்ததும், அவர் தகுதி உடையவர் எனக் கருதப்பட்டால் நித்திய வாக்குத்தத்தம் மூலம் நிரந்தர உறுப்பினராக சபையுள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றார்.



## கடமைகளும் பொறுப்புக்களும்

துறவற சபை உறுப்பினர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதையே தம் உயரிய வாழ்க்கைமுறையாகக் கொண்டிருத்தல் வேண்டும். இறைவனுக்குரிய காரியங்களை ஆழ்ந்து தியானிப்பதிலும், இறைவேண்டலில் அவரோடு ஒன்றிணைந்திருப்பதும் அவர்களின் முதன்மையான கடமையாகும். அத்துடன் ஒவ்வொரு நாளும் நற்கருணைப் பலியில் பங்கேற்பதும், திருப்புகழ் மாலை ஓதுவதும், அர்ப்பண வாழ்வின் எடுத்துக்காட்டும், பாதுகாவலியுமான அன்னை மரியாவின் திருச்செபமாலைத் தவறாது சொல்லுவதும் அவர்களது கடமையாகும் (663-664).

துறவற சபை உறுப்பினர் தமது சொந்தத் துறவற இல்லத்தில் தங்கி வாழவேண்டும் (668). சபைத்தலைவரின் அனுமதி இன்றி இல்லத்திற்கு வெளியே தங்கலாகாது. ஒருவரது அழைப்புக்குத் தீங்குவிளைவிக்கும் சமூகத்தொடர்பு ஊடகங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும். முதல் உறுதி மொழிக்கு முன்பாகத் தமது சொத்துக்களின் நிர்வாகத்தைத் தாம் விரும்பும் எவருக்கும் கொடுத்துவிட வேண்டும். அத்துடன் தமது சொந்த உழைப்பின் மூலமாகவோ, சபையின் காரணமாகவோ ஒரு துறவி ஈட்டுவதெல்லாம் சபைக்கே உரியதாகும் (601, 618). தமக்கென நிர்ணயிக்கப்பட்ட சபையின் உடையை தமது அர்ப்பணத்தின் அடையாளமாகவும், ஏழ்மையின் சான்றாகவும் அணியவேண்டும் (669). அதேவேளை உறுப்பினர்கள் தமது அழைப்பின் நோக்கத்தை அடையவும் சபையின் அமைப்பு, சட்டங்களின் விதிமுறைக்கேற்ப தேவையான அனைத்தையும் பெற்றுக்கொள்ளவும் அவர்களுக்கு உரிமையுண்டு (670).

## திருத்தூதுப் பணி

திருத்தூதுப்பணியின் இலக்கான இறையரசைப் பரப்பலும், கிறிஸ்து இயேசுவில் அனைவரது மீட்பும் அமைகின்றது. ஒவ்வொரு துறவற சபையும் அதனதன் விருதுவாக்கிற்கமைய இத்திருத்தூதுப்பணியை மேற்கொள்கின்றன. அனைத்துத் துறவறத்தினதும் முதன்மையான திருத்தூதுப்பணி அவர்கள் அர்ப்பண வாழ்வுக்கு சான்றுபகர்தலில் தங்கியுள்ளது. எனவே அனைவரும் இறைவேண்டலாலும், தவத்தாலும் பேணிவளர்க்க கடமைப்பட்டுள்ளனர் (673).

இத்திருத்தூதுப்பணிச் செயல் எப்போதும் இறைவனோடும், திருச்சபையோடும் நெருங்கிய ஒன்றிப்பிலிருந்து உருவெடுக்க வேண்டும். இவ்வொன்றிப்பை உறுதிப்படுத்தவும், பேணிவளர்க்கவும் வேண்டும். அத்துடன் உறுப்பினர்களின் வாழ்வு முழுவதும் மறைத்தூதுப்பணி மனநிலையில் ஊன்றியிருக்க வேண்டும் (675). அத்துடன் இத்திருத்தூதுப்பணியில் துறவறத்தார் ஆயர்களின் அதிகாரத்துக்கு உட்பட்டுள்ளபடியால் அவர்கள் உண்மையான கீழ்ப்படிதலுடனும், மதிப்புடனும் நடந்துகொள்வதுடன், ஒருவரை ஒருவர் கலந்தாலோசித்து செயற்படுவது இன்றியமையாததாகும். (678).

## முடிவாக

இவ்வாறாகத் துறவறத்தாருடைய ஒவ்வொரு செயற்பாடும் திருச்சபைச் சட்டத்தொகுப்பிலே தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. எனவே புளிக்காரமாக திருச்சபையில் விளங்கும் துறவறத்தார், எம் அனைவரது வாழ்விலும் ஏதோ ஒரு வகையில் பங்களிப்புச் செய்திருக்கின்றார்கள். அவர்களது வாழ்வை அறிந்துகொள்வதும் அவர்களது பணியின் பின்புலத்தை விளங்கிக்கொள்வதும் எம் அனைவரதும் கடமையும் பொறுப்புமாகும். எனவே அவர்களுக்காக தொடர்ந்தும் இறைவனிடம் வேண்டுவதோடு, அவர்களின் பணியில் கைகோர்க்கவும் முன்வருவோம்.

நன்றி - இறையியல் கோலங்கள் - ஜனவரி - ஜுன், 2015

---

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 143இற்கான கேள்விகளுக்கு 25 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

**இ.அ. ஜான்சி,**

**ஒலிமடு, நானாட்டான்**

**பாராட்டுக்குரியவர்களாகத் தெரிவுசெய்யப்படும்**

**10 அதிஸ்ரசாலிகள்**

1. ஜெ. இ. ஜோனிக்கா, மாம்புரி.
2. டொ. டர்லின் றொக்சி, சிறுத்தோப்பு, பேசாலை.
3. இ. ஸ்றெல்மி, களிமோட்டை, முருங்கன்
4. சு. அன்ரனி பொபிக்ஷன், கொக்குப்படையான், சிலாவத்துறை.
5. வ. ஆன். பிரதீபா, உமனகரி, நானாட்டான்.
6. செ. அஞ்செலா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
7. ஏ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.
8. அ. புளோறன்ஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
9. க. ரகுநாதன், தபாலக வீதி, இலுப்பைக்கடவை, மன்னார்
10. ம. சுதர்சினி, உமனகரி, நானாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.158
## எசேக்கியேல் 32 - 48

உங்கள் விடைகளை ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | 02 | | | 03 | |
| | | | | 04 | | | | | 05 |
| | 06 | | 07 | | 08 | | | | |
| | | 09 | | | | | | | 10 |
| 11 | | | ❖ | | ❖ | | 12 | ❖ | |
| | | | | 13 | | 14 | | 15 | |
| | | 16 | ❖ | | ❖ | | | | |
| | | | | 17 | | 18 | | | |
| | 19 | | | | | | | | ❖ |
| | | | 20 | | 21 | | | | |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்
1. அங்கே ஆண்டவரை அணுகி .......... குருக்கள் உன்னத பலிப்பொருள்களை உண்ணுவர்.
3. ........ இருபத்தைந்தாயிரம் முழம் நீளமும் பத்தாயிர முழம் அகலமும் உடையதாய் இருக்க வேண்டும்.
8. பின்னர் அவர் என்னை .......... கரைக்கு அழைத்துச் சென்றார்.
9. வாயிலின் ........ பத்து முழம், வாயிலின் புடைநிலைகள் ஒவ்வொரு பக்கமும் ஐந்து முழம் இருந்தன.
11. இது என் அரியணையின் ........., என் கால்மணைக்கான இடம்.
13. நான் ........ வாக்குரைக்கையில் உராயும் ஓசை கேட்டது.
18. அவர்களுக்கு அரண் இல்லை, அடைக்கும் தாழ் இல்லை, வாயில் ...... இல்லை.
19. தலைவன் நுழைகையில் அவன் நுழைவாயிலின் ......... மண்டபம் வழியாய் நுழைந்து, அதே வழியில் வெளிச்செல்ல வேண்டும்.
21. அது இஸ்ரயேல் வீட்டார் அனைவர்க்கும் ........ இருக்கும்.

### வலமிருந்து இடம்
3. ......... நடுவில் ஆண்டவரின் தூயகம் இருக்கும்.
4. ....... தலைவராகிய ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்.
5. யூதாவின் எல்லையருகே கிழக்குப் பகுதியிலிருந்து மேற்குப் பகுதிவரை நீங்கள் அர்ப்பணிக்க ......... சிறப்புப் பகுதி.
8. அவர்களுக்குக் குன்றினைச் சுற்றிய இடங்களை கொடுப்பேன்.
10. இத்துடன் '...........' என்னும் பெயரில் ஒரு நகரம் இருக்கும்.
13. இஸ்ரயேலின் மலைகள் பாழாய்ப்போம். அங்கே நடமாட்டம் ஏதும் ............
17. "அழகில் நீ ....... மிகுந்தவள்? நீ கீழிறங்கி விருத்தசேதனம் இல்லாரோடு கிட"
20. எனவே அவர்கள் என் ....... வந்து திருப்பணி புரியவேண்டும்.

### மேலிருந்து கீழ்
2. ஆண்டவரின் ........ கிழக்கு நோக்கிய வாயில் வழி கோவிலினுள் நுழைந்தது.
6. அதன் புகுமுக ....... வெளிமுற்றத்தை நோக்கியிருந்தது.
8. நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருள்வேன். புதிய ........... உங்களுக்குள் புகுத்துவேன்.
10. குருக்களின் .......... இடையிலுள்ள திறந்தவெளி இருபது முழமளவாய் கோவிலைச்சுற்றி இருந்தது.
11. நான் என் மக்களாம் ........... என் திருப்பெயரை அறியச் செய்வேன்.
12. அங்கு தெற்கு நோக்கிய வாயில் ஒன்று ..........
13. 'அவை பாழாக்கப்பட்டு விட்டன. ........... தரப்பட்டுள்ளன' என்று நீ சொன்னாய்.
14. .......... இந்த நாட்டை இஸ்ரயேலின் குலங்களுக்கு ஏற்பப் பங்கிட வேண்டும்.
15. எந்தக் ........ கைம்பெண்ணையோ மணமுறிவுபெற்ற மங்கையையோ மணமுடித்தலாகாது.

### கீழிருந்து மேல்
4. ......... கையை உனக்கெதிராய் நீட்டி உன்னைப் பாழிடமாகவும் வெற்றிடமாகவும் மாற்றுவேன்.
6. இஸ்ரயேல் .......... களே! ஆண்டவரின் வாக்கைக் கேளுங்கள்.
7. அதன் ........... சுற்றிலும் அரை முழமும் அதன் அடிப்பாகம் சுற்றிலும் ஒரு முழமுமாய் இருந்தது.
8. என் ஊழியன் தாவீது அவர்களுக்கு அரசனாய் இருப்பான். அவர்கள் அனைவருக்கும் ஒரே ............ இருப்பான்.
11. அவர்கள் அவற்றை வெளிமுற்றத்திற்குக் கொண்டுபோவதன் மூலம் தூய்மை மக்களுக்குச் சென்றுவிடுவதைத் தவிர்க்க ........... செய்வர்.
13. ...........! ஒரு வாள் அவர்களைக் கொல்ல உருவப்பட்டுள்ளது.
16. உங்கள் வாள்களின் ......... நம்பிக்கை வைக்கிறீர்கள். அருவருப்பான செயல்களைச் செய்கிறீர்கள்.
21. அவர்கள் அதிலிருந்து கொஞ்சமும் விற்கவோ, .......... மாற்றம் செய்யவோ கூடாது.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 156
### சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
கு. றொசானி,
கீளியன்குடியிருப்பு,
தலைமன்னார்.

**இரண்டாம் பரிசு:**
ய. றொகான்,
புனிதசவேரியார் ஆலயம்,
தேவன்பிட்டி.

**மூன்றாம் பரிசு:**
ஆ. திபிஷன் குரூஸ்,
5ம் வட்டாரம்,
வங்காலை.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 78 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 65 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 156ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. ஏ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.
2. திருமதி. ரஜனி எட்வின், உவர்மலை, திருகோணமலை.
3. அ. அனோஜினி, சாளம்பன், ஆண்டான்குளம்.
4. லீ. பாலன், பெற்றா, மன்னார்.
5. மேசி. செல்வநாயகம், முழங்காவில், பூநகரி.
6. யோ. தயாநிதி, மாதாகிராமம், மடுறோட்.
7. அ. யூஜினா, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
8. அ. பிறாங், கீரி, மன்னார்.
9. எவ். கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
10. அ. கிளேயறா, மாதகல், யாழ்ப்பாணம்.
11. ர. நவிந், புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.
12. ம. டினுஷாமேரா, பெற்றா, மன்னார்.
13. ந. ஆன் யூரிகா, வேப்பங்குளம், வவுனியா.
14. அ. தீபினா குரூஸ், சவேரியார் வீதி, தாழ்வுபாடு.
15. ச. சத்தியமலர், 8ம் வட்டாரம், நெடுந்தீவு.
16. யே. அஸ்மிக்கா, சாளம்பன், ஆண்டான்குளம்.
17. தே. மானிஷா, பெரியகுஞ்சுக்குளம், மடுறோட்
18. திருமதி. பிளன்ரீனா, கன்னியர்மட வீதி, மன்னார்.
19. எ. செறின் சலோமியா, முதலைகுத்தி, உயிலங்குளம்.
20. யே. றீற்றம்மா, சாளம்பன், ஆண்டான்குளம்.
21. B. பஷிலன், மாதாகிராமம், மடு வீதி.
22. ஆர். யூட்சலா, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
23. ப. ஜீவனா, பெரிய குஞ்சுக்குளம், மடுறோட்.
24. அ. நிவேதா குருஸ், சவேரியார்புரம், சிலாவத்துறை.
25. ஏ. அபி, புதுக்கமம், உயிலங்குளம்.
26. வி. வேஜின் டிலைக்சனா, சின்னப்பண்டிவிரிச்சான்.
27. ஜெ. ஏன் பிரின்சி, கல்பிட்டி வீதி, மாம்புரி.
28. வே. அலெக்ஸ்றீகன், பணிக்கர் புளியங்குளம், ஓமந்தை.
29. கி. ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
30. இ. அ. ஜான்சி, ஒலிமடு, நானாட்டான்.
31. தேவிகா பத்மராஜா, பெற்றா, மன்னார்.
32. செ. அருள்மேரி, பூவரசங்குளம், வவுனியா.
33. ச. சிகானி, சிறுத்தோப்பு, பேசாலை.
34. அ. விபுஷிகன், சுகந்தபுரி, வங்காலை.
35. ப. பவுஸ்தீனா, வட்டக்கண்டல், மன்னார்.
36. ர. மீரா, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
37. யூ. நிசாந்தினி, திருநாவற்குளம், வவுனியா.
38. எம். அமலதாஸ், பாப்பாமோட்டை.
39. வே. நிலைக்சனா, அளவக்கை.
40. அ. அனற் நிவேதா, அச்சங்குளம், நானாட்டான்.
41. கே. எமறின் திலிக்கா, அடம்பன்தாழ்வு, வட்டக்கண்டல்.
42. ஜே. கமிலஸ் விதுஷன், பிடாரிகுளம், முருங்கன்.
43. என். சி. ஜெகஜீவன், றோச், பள்ளிமுனை, மன்னார்.
44. ச. எவெறஸ்ரா, கன்னாட்டி, முருங்கன்.
45. ஆ. மேரி யோசப்பின், மாதிரிக்கிராமம், வங்காலை.
46. ஜெ. கஜாந்தினி, சிறுத்தோப்பு, பேசாலை.
47. டனிஷா, அடம்பொன்தாழ்வு, வட்டக்கண்டல்.
48. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
49. N. செபமாலை மரியம்மா பீரிஸ், ஆனாள்நகர், வங்காலை
50. டொ. டர்லின் றொக்சி, சிறுத்தோப்பு, பேசாலை.

## கிடைத்துள்ள மக்கள் ....
3ஆம் பக்கத் தொடர்ச்சி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தமது ஆதரவை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளனர். இந்த நிலையில் எதிர்வரும் ஐந்து வருடங்களில் ஜனநாயக வழிமுறைகளைப் பின்பற்றி மக்கள்நலன் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்க்க தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் விரைந்து செயற்படவேண்டும்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் கடந்தகாலச் செயற்பாடுகள்மட்டில் விமர்சனம் முன்வைக்கப்படும் நிலையில் இந்த வாய்ப்பை இவர்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும். தமிழ்க் கூட்டமைப்பினர் தமது இருப்புநிலையை தக்கவைப்பதிலும், தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதிலும், தமக்கிடையே இருக்கும் உள்ளக முரண்பாடுகளைத் தீர்ப்பதிலும் காலத்தைக் கடத்தாது மக்களின் தேவைகளை அறிந்து அடிப்படைப் பிரச்சினைகளையும், தேசிய இனப்பிரச்சினையையும் தீர்த்துவைக்கத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். கிடைத்துள்ள அருமையான வாய்ப்பைப் பயன்படுத்தி மக்கள்நலன்சார் பணிகளைத் துரிதமாக முன்னெடுக்க வேண்டும்.

## சிறுகதை .... 12ஆம் பக்கத் தொடர்ச்சி

அதிலதான் இந்தக் கலியாணம் நடக்குது. கலியாணச் செலவு போக சீதனம்வேற கொடுக்கணும். பிறகு தாபரிப்புக்காசை கட்டிறன்' என்று கேட்டுப் பாப்பம். பெரிய பாதர் நல்ல மனுசனடி. இரக்கக் குணம் என்று சொல்லுறாங்க. போய் கதைப்பம். கடவுளே, பெரிய பாதர் எனக்கு இரங்கவேணும்" என்று பிரார்த்தனை செய்தாள்.

"அடக் கடவுளே, எப்படி எல்லாம் செலவு செய்யிறாங்க! சாப்பிட்டிற்று வீசிற கேக் பெட்டி, பாத்திட்டு எறிகிற காட், ஒரு நேர சோடனைகள் .... இப்படி சின்னச் சின்னதுகளுக்கு பெரிசா செலவு செய்யிறாங்க. ஆனா கட்டாயக் கடமையான தாபரிப்புக் காசு கட்டுறதற்கு எவ்வளவு யோசிக்கிறாங்க... அதுவும் ஆனந்தியிட கலியாணச் செலவோட பார்க்கிறபோது இந்தக் கோயில் பணம் அற்பக் காசு! வருடாவருடம் கட்டினா எங்கட கையைக் கடிக்காதே. கோயில் காசு கட்டச் சொன்னா எத்தனை சாட்டுக்கள்! ஆனால் டாம்பிகமாக கலியாண வைபவம்! சரி, இவளையும் ஆண்டவன் காப்பாற்றட்டும். கடவுள் கணக்குக் கேட்கும்போது கொடுக்கட்டும்" என்று மனதில் எண்ணியவளாக, பெருமூச்சுகளை அடக்கியவளாக வேண்டாவெறுப்போடு கலியாண வேலைகளில் மூழ்கினாள் பவித்திரா.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 01 10 1943



உதிர்வு 14 08 2015

### திருமதி சத்தியநாதன் திரேசம்மா
அச்சங்குளம், நானாட்டான்

புன்னகையானது உங்கள் முகம் அம்மா
புண்படுத்தாதது உங்கள் மனம் அம்மா
பாசமானது உங்கள் கரங்கள் அம்மா
பரிவானது உங்கள் இதயம் அம்மா.
இறைவார்த்தையைத் தினமும்
இனிதாய் வாசித்து இன்புற்றீர்கள்!
உள்ளத்து உணர்வுகளை எழுத்தில் வடித்தீர்கள்.
பார்த்திருக்கப் பிரிந்து சென்றீர்களே அம்மா
நினைத்துக் கொண்டிருக்கின்றோம்
உங்கள் நீங்காத நினைவுகளை!
நீங்கள் நித்திய இறைவனோடு சங்கமமாக
செபிக்கின்றோம் எப்போதும் உங்களுக்காய்!

பிரிவால் நினைந்துருகும்,
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்.

*- மன்னா நிர்வாகம் -*

## யாழ் வைத்தியசாலையில் ....
1ஆம் பக்கத் தொடர்ச்சி

கடந்த ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி மீண்டும் இவரைத் தாக்கிய பாரிசவாதத்தினால் இடது கை மற்றும் இடது கால் ஆகியவை பாதிப்புற்ற நிலையில் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் சிகிச்சைபெற்று வருகின்றார். அடிகளார் நலம்பெற செபிக்குமாறு இறைமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 8ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 03 1968



உதிர்வு 07 09 2007

### திரு. இராசையா யோகராஜா

(கோவில்குளம், வவுனியா)

எங்கள் வீட்டுத் தோட்டத்தில் பூத்த முதல் முத்தே யோகா! நீ எங்கு சென்றாய்? நான் பத்து மாதம் உன்னை வயிற்றில் சுமந்து பெற்று எடுத்து செல்லப் பெயர் சூட்டி றோஜாச் செடியில் பூத்த முதல் முத்தே! நீ நடந்த பாதைகளை எல்லாம் பார்க்கும்போது என் மனம் துடிதுடித்து ஏங்குகின்றது. நீ எங்களுடன் பேசி மகிழ்ந்த நாட்களை நினைக்கும்போது உன் அன்பு முகம் பார்த்து பேச துடியாய்த் துடிக்கின்றோம். ஆண்டுகள் எட்டு ஆனாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு அகலாது. உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்,
அம்மா, ஐயா, பிள்ளை, சகோதரர்கள், சகோதரிகள், மச்சான்மார், மச்சாள்மார், மாமி, மாமா, மருமக்கள், உற்றார் உறவினர்.

## 22ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 09 1982



உதிர்வு 31 08 1993

### சுதர்ஷினி யேசுதாசன்

*"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது"*

ஆண்டுகள் இருபத்திரண்டு ஆனாலும், உன் இழப்பை எப்படி நாம் மறப்போம்? எப்படி ஆறுதல் அடைவோம்? காலையில் எம் தோட்டத்தில் பூக்கும் மலர்களைக் காணும்போது அதில் உள்ள அழகிய மலராக நீ மணம் தந்து எம் மனதை தொட்டுச் செல்கின்றாய். நடை பாதையில் என்றும் நீ எம் வழித்துணையாய் நடந்துவருகின்றாய். மாலையில் வீசும் இளம் காற்றில் நீ கலந்து எம்மை இதமாக வருடிச்செல்கின்றாய்! இனிய நல்மொழி பேசி, இதயத்தால் அனைவரையும் இணைத்து, ஆற்றல்கள் பல பெற்ற நீ, அன்று எம்மையெல்லாம் விட்டு, சொல்லாமல் கொள்ளாமல் பட்டென்று பறந்து போனாயே! அழகிய உன்முகம் காண ஏங்குகின்றோம். மீண்டும் நீ எம்மிடம் வாராயோ?

*உன் பிரிவினை நினைந்து உருகும் :*
*அம்மா, அப்பா, தம்பி, உறவுகள்.*

## 09ம் ஆண்டு நினைவஞ்சலி / 07ம் ஆண்டு நினைவஞ்சலி





சவிரி சந்தியோகுப்பிள்ளை இராஜதுரை — திருமதி. திரேசம்மா இராஜதுரை

(பாலைக்குளி, அடம்பன்.)

மலர்வு 25-12-1921 — மலர்வு 20-05-1933
உதிர்வு 02-09-2006 — உதிர்வு 10-09-2008

அன்பின் அம்மா, ஐயா,

நீங்கள் இருவரும் இறைபதம் அடைந்து காலங்கள் பல கடந்தபோதும் நீங்கள் எங்களிடம் தந்துவிட்டுச் சென்ற இனியநல் நினைவுகள் எம் இதயத்தில் இனிதாய் நிறைந்து நிற்கின்றது. வான்வீட்டில் நிவீர் வளமுடன் வசித்தாலும், எம்மை மறவாது நாம் செல்லும் பயணங்களில் வழித்துணையாய் வருகின்றீர்கள். எமக்குத் துன்பங்கள் வரும்போது தோள்கொடுத்துத் துயரம் போக்குகின்றீர்கள். எமது மகிழ்வான வேளைகளில் நீங்களும் சேர்ந்து மகிழ்விக்கின்றீர்கள். இறைவன் பாத மலர்களிலிருந்து எம் விண்ணப்பங்களுக்காய் இனிதாய் செபித்திடுவீர்.

*என்றும் உங்கள் நினைவில் :*
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## புதிய அரசு தமிழ் மக்களை .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

திருகோணமலை மறைமாவட்ட ஆயரும், திருகோணமலை மாவட்ட தமிழர் அபிவிருத்தி ஒன்றியத் தலைவருமான மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை கருத்துத் தெரிவிக்கையில், இன்று இரு பிரதான கட்சிகளும் ஒன்றுகூடிய நிலையில் புரிந்துணர்வு அடிப்படையில் நாட்டின் அமைதியையும், சமாதானத்தையும் கொண்டுவரவேண்டுமென்ற இலக்குடன் செயற்படவுள்ள சூழ்நிலையில் இந்த நல்ல சந்தர்ப்பத்தை கூட்டமைப்பு பயன்படுத்தி நிரந்தரமான அரசியல் தீர்வொன்றைக் காண முயலவேண்டும்.

அரசியல் தீர்வுக்கு அப்பால் வேலைவாய்ப்பு, கல்வி, பொருளாதார மேம்பாடு, மற்றும் யுத்த காலத்தில் கடத்தப்பட்டவர்கள், விடுவிக்கப்படாது சிறையில் வாடும் இளைஞர்கள் சார்பாகவும் கூடிய கவனம் செலுத்துவதுடன் காணி, மீள்குடியேற்றம் சார்பாகவும், உரிய நடவடிக்கைகளை காலதாமதம் செய்யாமல் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகை கருத்துத் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக வடகிழக்கில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இனியாவது அரசியல் தீர்வுக்கான முடிவைக் காணத் துணியவேண்டும். யாருடனும் சேரமாட்டோம், எவருடனும் கைகோர்க்க மாட்டோமென்ற வரட்டுவாதத்தை கைவிட்டு இணைந்துபெற முயற்சிக்க வேண்டும். இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மூவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். திருகோண மலையைப் பொறுத்தவரை படிப்படியாக இழந்துபோகும் அவலநிலையே காணப்படுகிறது. இதேநிலைதான் அம்பாறை மாவட்டத்திலும் நிலவுகின்றது. மக்கள் அதிகூடிய அளவு வாக்களித்திருப்பார்களானால் இந்நிலை ஏற்பட்டிருக்காது. மட்டக்களப்பு மாவட்டத்தில் 40 வீத மக்கள் வாக்களிக்கவில்லை. காலத்தை நீடிக்காமல் விரைவில் ஒரு தீர்வைப்பெற்று அமைதியுடன்கூடிய அதிகார வலுவுடைய அபிவிருத்தியை ஒட்டிய தீர்வைப் பெறவேண்டும். இல்லையாயின் மக்களின் சினத்திற்கும் அவநம்பிக்கைக்கும் ஆளாகவேண்டிய நிலை உருவாகும் என்றார்.

## திருத்தந்தை பிரான்சிஸ் ஆற்றிய உரைகளிலிருந்து .....

7ஆம் பக்கத் தொடர்ச்சி

- ஒருவரிடம் இருக்கும் செல்வம் பொதுநலனுக்குப் பயன்படுவதாக இருக்க வேண்டும். மாறாக, அது தன்னல வழிகளில் மேலும் மேலும் சேர்க்கப்பட்டால், ஊழலுக்கும் வித்தாக உள்ளது.
- சுயநலத்தால் தங்களை மூடிக்கொள்ளாமல், திறந்த மனதுடன், தூய ஆவியாரைத் தங்களுக்குள் நிறைத்துக்கொள்ளும் ஆண்களும், பெண்களும் இவ்வுலகிற்கு இன்று அதிகம் தேவை.
- கத்தோலிக்கம் என்பது தன்னிலையில் மூடப்பட்ட ஒன்றல்ல. மாறாக எவ்வித பாகுபாடுமின்றி அனைத்தையும் அரவணைக்கும் ஒன்று.
- மறைப்பணி ஆற்றுவதென்பது, மதமாற்றம் செய்வதோ, மறைப்பணித் திட்டங்கள் வகுப்பதோ அல்ல, மாறாக, தூய ஆவியாரின் வழிநடத்தலுக்குச் செவிசாய்த்து உலகெங்கும் செல்வது.
- குழந்தை மனதுடன் வாழ்வதென்பது, ஒருவர் இறைவனின் எல்லையில்லா இரக்கத்துக்குத் தன்னை முழுமையாகக் கையளித்து, இறைவன்முன்பு தன்னைத் தாழ்த்தி. சிறியவராக உணர்வதாகும்.
- ஒருவர் தனது சிறுமையையும், பாவநிலையையும் ஏற்கும் போது, மீட்பைப் பெறுவதற்கு அவர் தன்னை அனுமதிக்கிறார்.
- இயேசுவையும், இவ்வுலகப் பொருட்களையும் ஒன்றாகப் பின்செல்ல விரும்பும் கிறிஸ்தவர்களைப் பார்ப்பது துன்பம் தருகின்றது.
- கிறிஸ்தவர் பாதிக்கிறிஸ்தவராக அல்லது, ஒரே சமயத்தில் விண்ணையும் மண்ணையும் கொண்டிருப்பவராக வாழ முடியாது.
- செல்வங்கள், தற்பெருமை, பகட்டு, போலித்தனம் போன்றவை இயேசுவிடமிருந்து நம்மைத் தூர ஒதுக்கிவிடும். ஏனெனில் அது வீண் தற்பெருமைக்கு வழிவகுத்து சுயநலமாய் சிந்திக்கத் தூண்டும்.
- வயதான நம் பெற்றோரை அன்புடன் சந்திப்பதன் மூலம் இறைவனின் நான்காவது கட்டளையை நாம் கடைப்பிடிக்க முடியும்.

## புனிதர்களின் பாதையில் ....

9ஆம் பக்கத் தொடர்ச்சி

எவ்விதப் பாகுபாடின்றி இந்த அன்புச் சேவை புரிந்ததன் நிமித்தம் மறையின் பகைவரும் பயன் அடைந்தனர் என்பது பலருக்கும் ஒரு கண்திறப்பாக அமைந்தது.

பாப்பு புனித கொர்னேலியுசின் மறைவுக்குப்பின் புனித முதல் ஸ்டீபன் பதவியேற்றார். இச்சூழலில் இன்னொரு புயல் கிளம்பியது. பிரிந்துபோன கிறிஸ்தவர்கள் கொடுக்கும் திருமுழுக்கு செல்லுபடியாகும் என்று புதிய பாப்பு கூற, ஆபிரிக்கத் திருச்சபை இதற்குப் பெரியதோர் எதிர்ப்புத் தெரிவித்தது. இந்நிலையில் கி.பி. 257-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் மன்னன் வலேரியன் என்ற கொடியவன் சிலைகளுக்கு வழிபாடு செலுத்த அனைவருக்கும் கண்டிப்பான ஆணைவிடுத்தான். ஆயர்குழு ஒன்றாகக் கூடிவரக்கூடாது. அதேபோல் தியாக்கோன்களும் குருக்களும் கூட்டம் கூடுதல் கூடாது என்றது அந்த ஆணை. ஆகஸ்ட் 30ஆம் நாள் சிப்ரியனை பட்டேனஸ் என்ற ஆளுநன் நாடு கடத்தினான். அவனுக்கு அடுத்து வந்த கலேரியஸ் மீண்டும் ஆயரை வரவழைத்தான். அந்த வேளையிலும் அவர் வழிபாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே, சிப்ரியன் தலை வெட்டப்பட்டு உயிர் துறந்தார்.

## சிறப்பாக இடம்பெற்ற ....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

மடுத்திருப்பதியின் பரிபாலகர் அருட்திரு. எஸ். எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் மற்றும் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ஏ. விக்ரர் சோசை அடிகளார் ஆகியோர் தலைமையில் இத்திருவிழாவுக்கான ஆயத்தங்கள் சிறப்பாக இடம்பெற்றிருந்தன.

மடுத்திருப்பதியின் திருவிழாக்களில் மிகவும் பெரிய திருவிழாவாக, அதிக மக்கள் கூடுகின்ற திருவிழாவாக இந்த ஆவணித் திருவிழா அமைகின்றது. இது பாடசாலை விடுமுறைக் காலமாக இருப்பதனால் நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் ஏறக்குறைய நான்கு இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மற்றும் சிங்கள மக்கள் இவ்விழாவில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடவேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளோம் என்பதையும் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

கட்டணம் : கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## இல்லற வாழ்வில் 25வது ஆண்டு வெள்ளிவிழா வாழ்த்து!

(18.9.1990 - 18.9.2015)



### திரு. திருமதி. பி. செலஸ்ரீன் அருளப்பு (செல்வம்), மேரி சறோஜினி (கமலம்)

(பெரியமுறிப்பு, மடுறோட்)

வாழ்க வளமுடன் என்று மன அக்களிப்புடன் வாழ்த்துகின்றோம் அன்புப் பிள்ளைகள் நாம் இருவரும்!
'அன்பே கடவுள்' என்று அனுதினம் ஊட்டிய எம் பெற்றோருக்கு இந்நன்நாளில் அன்னை மரியிடம் இனிமையுடன் இன்புற்று வாழ வேண்டுகின்றோம்.
இருபத்தைந்து ஆண்டுகள் சோதனைகள் வேதனைகள் அனைத்தையும் அணைத்துக்கொண்டீர்களே!
இல்லறம் என்னும் நல்லறம்தனிலே உத்தம திருக்குடும்ப வாழ்வில், இகபர இன்பங்கள் பெற்று, சந்தோசமாக வாழ வெள்ளிவிழா நாளில் ஆசித்து நிற்கின்றோம்!
பண்புடனும், பணிவுடனும் இரு கண்களாய் விளங்கும் புதல்வர்கள் நாம் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துக்கள் கூறுவோர்:
செ. லியோண் சந்திரசேகர், செ. சந்திர நிலான்

## இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து!



(07.08.1965 - 07.08.2015)

### திரு. திருமதி. ஜோசப் செல்லத்துரை, சந்தனமேரி

(இல: 61 நித்தியபுரி, உப்புவெளி, திருகோணமலை)

"திருமணத்தில் அடங்கியுள்ள மறைபொருள் பெரிது. இது திருச்சபைக்கும் கிறிஸ்துவுக்கும் பொருந்துவதாகக் கொள்கிறேன்" (எபே.5:32)

நல்லறம் புரிந்திட இல்லறம் புகுந்து
நானிலம் போற்றிட நலம்பல கண்டு
வள்ளுவன் சொன்ன வாழ்நெறி வழுவாது
வாழ்ந்த காலங்கள் வனப்புற அமைந்து
போற்றுதற்குரிய பெருமைமிகு வாழ்வில்
பொன்விழாக் காணும் புகழுறு தம்பதியர்
இறை ஆசி பெற்று, இல்லற வாழ்வில்
இணைந்து கழித்திட்ட ஆண்டுகள் ஐம்பது
உலகில் வானும், நிலவும்
வலம்வரும் நாள்வரை
உயர்வுறு நலங்கள் யாவையும் பெற்று
இன்பமுடன் இன்னும் பல்லாண்டுகள்
ஈடிணையற்று வாழ வாழ்த்துகிறோம்.
வாழ்க நலமுடன்! வாழ்க வளமுடன்!
வையகத்தில் வளர்க உங்கள் வாழ்வு!

வாழ்த்துக்கள் கூறுவோர்:
அன்புப்பிள்ளைகள், பாசமுள்ள மருமக்கள், பிரியமுள்ள பேரப்பிள்ளைகள்.

## இணைபிரியாத இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து!



(02.10.1964 - 02.10.2015)

### திரு. திருமதி. பிரான்சிஸ் சேவியர் (பொன்னு) மேரி றொசலின் (தங்கம்) (செட்டிகுளம்)

ஈரைந்து மாதங்கள் கருவிலே எமைச்சுமந்த அம்மாவே,
துன்பங்கள் அனுபவித்து எம்மை வளர்த்த அப்பாவே,
நீங்கள் இருவரும் இறைவன் எமக்குத் தந்த சொத்து!
இன்னுமொரு ஜென்மம் வந்தால்
நீங்கள் எமக்குப் பெற்றோராக, நாங்கள் உமக்கு
சேய்களாகப் பிறக்க இறைவனை வேண்டுகிறோம்.

பாசமுடன் வாழ்துவோர் :
பிள்ளைகள்: றெஜி, விஜி, சுசி, றசி, றஜனி, நிலா, பாபு,
மருமக்கள்: பிறேமிளா, சிறி, சித்திரா, மரியதாஸ், டெனி,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

## இணைபிரியாத இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து!



(15.05.1965 - 15.05.2015)

### திரு. திருமதி. அந்திரேஸ் செபமாலை (ராசம்)

(உயிர்த்தராசன்குளம், முருங்கன்)

இருமனம் கலந்த திருமண வாழ்வில்
ஆண்டுகள் ஐம்பதை இனிதாய்க் கடந்தீர்.
இதுவரை காத்த இறைவனை
இருகரம் கூப்பி வணங்கிடுவோம்
நம்பிக்கையை நிறைவுசெய்யும் நல்லதோர் பொன்விழா
ஆண்டவனின் துணையோடு பல்லாண்டு வாழ்கவென
மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துக்கள் கூறுவோர்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 08 | | 13 |
| 05 | | 06 |
| 1940 | | 2015 |



### திரு. அந்தோனிப்பிள்ளை ஜோசப் சவுந்தரநாயகம் (வவுனியா)

எம் குடும்பத்தின் குலவிளக்கே! பாசத்தின் இருப்பிடமே! கட்டிய மனைவிக்கு பாசமுள்ள கணவனாய், பெற்றெடுத்த குழந்தைகளுக்கு அருமை அப்பாவாய், உடன் பிறப்புகளுக்கு ஆசானாய், உறவுகளுக்கு நேசமுள்ள மைத்துனராய், சின்னஞ்சிறார்களுக்கு அருமைத் தாத்தாவாய், பாட்டனாய், அங்கிளாய், சமூகத்தில் நற்சேவையாளராய், ஆலய நற்பணியாளனாய், இல்லை என்போர்க்கு உதவிக்கரம் நீட்டுபவராய் வாழ்ந்தீரே. எப்படி நாம் தாங்குவோம்? ஒவ்வொரு நொடியும் நினைந்துருகி வாடுகின்றோம். எப்படியும் உங்களை ஒருநாள் சந்திப்போம் என்ற உறுதியுடன் - எம் கண்ணீரை காணிக்கையாக்கி வல்ல தேவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்.
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

# நீங்காத நினைவுகள்

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 05 | | 03 |
| 09 | | 01 |
| 1932 | | 2010 |



### திரு. அந்தோனி சந்தான்

(வஞ்சியன்குளம், மன்னார்)

## 21ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 05 | | 23 |
| 03 | | 08 |
| 1934 | | 1994 |




### திருமதி. சந்தான் மரியுஸ்பம்

(வஞ்சியன்குளம், மன்னார்)

## 24ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 18 | | 10 |
| 10 | | 08 |
| 1959 | | 1991 |



### திரு. சந்தான் அந்தோனிப்பிள்ளை

(வஞ்சியன்குளம், மன்னார்)

"என் தெய்வம் என்னைக் கைவிடமாட்டார் எனக்காய் எதையும் செய்திடுவார்" என்ற வார்த்தையில் அசைக்கமுடியாத நம்பிக்கைகொண்டு வாழ்ந்தீர்கள். திருமுழுக்கில் பெற்ற விசுவாச ஒளியை உம் வாழ்வில் அணையவிடாமல் காத்தீர்கள். வாழ்வின் கஸ்ரங்கள், துன்பங்கள், சோதனைகள், வேதனைகள் மத்தியிலும் நீங்கள் மனம் தளரவில்லை. உங்கள் அன்புச் செயல்களாலும், பாசமிகு வாழ்வாலும், தியாகச் செயல்களாலும், இறை அன்பிற்கு முன்மாதிரிகையாகத் திகழ்ந்தீர்கள். ஞானக்கடமைகளை நிறைவேற்றுவதாலும், பிறர் அன்புப் பணிகளாலும் பற்றி எரிந்தீர்கள். உங்கள் சாதாரண வாழ்க்கைமுறையால், இறை அன்பின் இருப்பிடமாய், மனித உறவின் ஊற்றுக்களாய்த் திகழ்ந்தீர்கள். திருச்செபமாலையின் மூலம் அன்னை மரியாளின் விசுவாசப் பயணத்தில் பயணித்தீர்கள். குடும்பத்திலும், உறவிலும், அயலிலும், சமூகத்திலும் இனிதாக வாழ்ந்தீர்கள்.

இறைவா, இவ்வுலக வாழ்வின் முடிவாகிய மரணத்தின் மூலம் உம்முடன் இணைந்துகொண்ட இவர்களை நாம் நினைவுகூரும் இந்நாளில், இவர்களுக்காக இருகரம் விரித்து விண்ணப்பம் செய்கின்றோம். "தந்தையே இறைவா, இவர்கள் உம்மில் கொண்டிருந்த விசுவாசம், அன்பு இவற்றை கருணைகொண்டு நோக்கும். "ஆவியோ வலுவுடையது. ஊனுடலோ வலுவற்றது" இவ் வாழ்வில் இவர்கள் ஊனுடலின் வலுவின்மையால் ஆற்றிய காரியங்களைத் தயவுடன் மன்னித்து என்றும் உமது பேரின்ப ஒளியில் கலந்து உம்மை ஸ்துதிக்கும் பாக்கியம் அருள உம்மை இரந்து வேண்டுகின்றோம்" ஆமென்.
"கிறிஸ்துவின் வருகையின்போது அவரைச் சார்ந்தோர் உயிர் பெறுவர்" (1கொரி 15:23)

உம் பிரிவால் துயருறும்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org